Vol.3, Issue 1 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

ஜூன் 2020

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

தாராள மனம்

Rotary

NOW MORE THAN EVER, ROTARY CONNECTS THE WORLD:

THE 2020 ROTARY VIRTUAL CONVENTION

20-26 June 2020

Rotary | 2020 ROTARY VIRTUAL CONVENTION 20-26 JUNE

GENERAL SESSIONS

08:00–09:15 in Chicago, USA (Convert Chicago time to the date and time for your area)

Saturday, 20 June: Together, We Connect

Speeches by RI President Mark Maloney, Foundation Trustee Chair Gary Huang, Foundation Trustee Chair-elect KR Ravindran, and Convention Chair Celia Giay.

See how our Rotary family is connecting across the globe to support each other and the fight against COVID-19, and find out how we can continue to support these efforts.

Sunday, 21 June: Together, We Learn

Be inspired to action by President Mark Maloney, Convention Chair Celia Giay, RIPE Holger Knaack, General Secretary John Hewko and RIPN Shekhar Mehta.

"Travel" to Hawaii and experience the Honolulu Mural Project.

Learn how e-clubs work and discover how Rotary clubs are leveraging new platforms to meet virtually and stay connected. Watch Rotary Peace Fellows in action around the world and see how an RIBI club innovated to expand membership.

FEATURED BREAKOUTS

Monday, 22 June

08:00 - Using virtual tools to engage members
12:00 - Engaging Rotary Alumni
18:00 - 'Greening Rotary' events: Be plastic-free, offset carbon, and more!

Tuesday, 23 June

08:00 - Grow Rotary through new club types
12:00 - Coffee with Shekhar for District Governors-nominee and Club Presidents-nominee
18:00 - How to start and manage RAGM microfinance projects (presented in Spanish)

Wednesday, 24 June

08:00 - Adopt-a-River initiative: A Rotary & UNEP partnership model
12:00 - Rotaract Elevated, Now What?
18:00 - Disruptive innovation in Rotary clubs (presented in Spanish)

Thursday, 25 June

08:00 - How to submit a great Global Grant application
12:00 - Forum for 2019–20 District Governors and Club Presidents
18:00 - Digital Trends of 2021: Using tech to engage millennials

Friday, 26 June

08:00 - Engage young families with service and alternative meetings
12:00 - The Rotary Brand
18:00 - Personal Growth Opportunities: Rotary's alliance with Toastmasters

For more details visit *riconvention.org*

உள்ளே

40 **வாரி வழங்கிய கமலம்மா**
நோய்ப்பரவல் கொந்தளிப்புக்கு நடுவில், இந்த ஓய்வூதியருடைய பங்களிப்பு நெஞ்சை நெகிழச்செய்கிறது.

10 **கோவிட்-19 கடந்த உலகம்**
கோவிட் நோய்ப்பரவலுக்குப் பிந்தைய உலகம் எப்படி இருக்கும், புதிய "இயல்பு நிலை" என்னவாக இருக்கும் என்பதுபற்றிய ஒரு பார்வை.

18 **"மா மனிதர்" ஃப்ராங்க் டெவ்லின்!**
மே 28 அன்று இறந்த முன்னாள் RI தலைவருடனான நினைவுகளை ரோட்டரி தலைவர்கள் நெகிழ்வுடன் நினைவுகூர்கிறார்கள்.

26 **சவால்களை இணைந்து சந்திக்க உதவும் நம் அறக்கட்டளை**
சமூகங்களுக்கு உதவுவதற்காக ரோட்டரியன்களுக்கு ஆற்றலளிப்பதில் TRFன் பங்கைப்பற்றி, உள்வரும் TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரனுடன் ஒரு பேட்டி.

30 **கொரோனா காலத்தில் குழந்தைகளைப் பாதுகாக்க ரூ.1.5 கோடி நிதி திரட்டிய ரோட்டரி இந்தியா!**
பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்கும் NDTVன் நிதி திரட்டலுக்கு ரோட்டரியின் ஆதரவு உண்டு என உறுதிப்படுத்துகிறார் RIPN சேகர் மேத்தா.

44 **148 தோல் ஒட்டு அறுவைச் சிகிச்சைகளை நடத்திய ரோட்டாபிளாஸ்ட் முகாம்**
RID 3110ன் ரோட்டரி சங்கங்கள் நடத்திய திருத்த அறுவைச்சிகிச்சை முகாம், பலவிதமான சிதைவுகளைக் கொண்ட மக்களுக்குப் புதிய வாழ்க்கையை அளிக்கிறது.

66 **ஒரு மெதுவான ரயில் பயணம்**
ரயில் பயணத்தின் இனிமையைச் சுட்டிக்காட்டும் நூல்களைப்பற்றிய ஒரு பார்வை

64 **பிரபஞ்சத்தையே கவர்ந்த ஹிந்தி திரைப்படப் பாடல்கள்!**
பழங்காலத்தின் மயக்கும் மெல்லிசைகளுக்குள் ஒரு மகிழ்ச்சிப் பயணம்.







அட்டையில்: பசியில் உள்ளவர்களுக்கு உணவளிப்பதற்கான பங்களிப்பாக RC ஹெரிட்டேஜ் மைசூரு-க்குத் தன்னுடைய ரூ.600 ஓய்வூதியத்தில் ரூ.500 வழங்கிய கமலம்மா.

மடல்கள்

வழிகாட்டும் RC கல்கத்தா

ஏப்ரல் இதழில் ஈர்க்கின்ற பகுதிகள் இருந்தன, ரோட்டரி மற்றும் பொது ஆர்வத் தலைப்புகளின் கலவையாக இது அமைந்தது. மிகவும் சுவையான பகுதிகள், RC கல்கத்தாவின் மிகச் சிறந்த 100 ஆண்டுகள் மற்றும் நிதீஷ் லஹார்ரிக்கு வழங்கப்பட்ட பாராட்டு. இந்தச் சங்கத்தின் வரலாற்று வளர்ச்சி, பலவிதமான சேவைப் பணிகள், தலாய் லாமா, ஃபீல்ட் மார்ஷல் சாம் மானெக்ஷா உள்ளிட்ட பல புகழ் பெற்ற ஆளுமைகள் இங்கு பேசியது ஆகியவற்றை அறிந்து நாங்கள் பெருமைப்படுகிறோம்.

இந்தியச் சங்கங்கள் அனைத்தும்



RC கல்கத்தாவின் காலடித் தடங்களைப் பின்பற்றவேண்டும், அதன் அசாதாரணமான பணியைப் பிரதியெடுக்க முயலவேண்டும்.

சுருக்கமாக என்ற பத்தியில், ராஜஸ்தானின் சிகார் மாவட்டத்திலுள்ள ஓர் அரசுப் பள்ளிக் கட்டடத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 54 இடம் பெயர்ந்த தொழிலாளர் கள் செய்த நல்ல பணி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. தங்களைப் பாதுகாத்த பள்ளிக் கட்டடத்துக்கு நன்றி தெரிவிக்கும்வகையில் இவர்கள் அந்தக் கட்டடத் தைப் பழுதுபார்த்து வண்ணம் பூசினார்கள். இதுபோன்ற ஊக்கம் தரும் துணுக்கு களை வழங்கும் ரோட்டரி செய்திகளுக்கு நன்றி.

R ஸ்ரீனிவாசன், RC மதுரை மிட்-டவுன் — D 3000

இந்த இதழில் இடம் பெற்றிருந்த RC கல்கத்தாவின் குழந்தைகளுக்கான விருந்து என்ற கட்டுரை, எங்கள் சங்கத்திலும் இப்படி ஒரு திட்டத்தை நடத்தவேண்டும் என்ற ஊக்கத்தை அளித்தது. கடந்த 95 ஆண்டுகளாகக் குழந்தைகளுக்கு இரக்கம், அர்ப்பணிப்பைக் காட்டும் இந்தச் செயல் உண்மையிலேயே ஒரு மிகச்சிறந்த சேவையாகும். இது போன்ற மிகச்சிறந்த பணிகளைச் செய்யும் இந்தச் சங்கத்துக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்.

B A பிரபுசங்கர்
RC கோயம்பத்தூர் இன்டஸ்டிரியல் சிட்டி — D 3201

RC மும்பை க்வீன்ஸ் நெக்லஸின் மிகச்சிறந்த சேவை

மே இதழின் அட்டைப்படம் என் இதயத்தைக் கவர்ந்தது, ஆனந்தக் கண்ணீரை வழங்கியது.

இப்படிப்பட்ட குழந்தைகளுடைய பசியைத் தீர்க்கும் மும்பை க்வீன்ஸ் நெக்லஸின் ரோட்டரியன்களுக்குப் பாராட்டுகள்.

A சந்திரசேகரன், RC திருச்சிராப்பள்ளி ஃபோர்ட் — D 3000

முடக்கத்தின்போது, மக்களுக்கு நாள்தோறும் ஒரு லட்சம் உணவுப்பொட்டலங்களை வழங்கிய RC மும்பை க்வீன்ஸ் நெக்லஸின் மனிதாபிமானச் சேவையைப்பற்றி அறிந்து நெகிழ்ந்தோம்.

வீரண்ணா A ஹுக்கி
RC ஷிமோகா — D 3182

பெண்கள் காணாமல் போகும்போது

பெண்கள் காணாமல் போகும் போது என்று தலைப்பிடப்பட்ட ஆசிரியர் பக்கம் மிகச்சிறப்பாக அமைந்திருந்தது, பெண்களுக்கு எதிரான பன்னாட்டுக் குற்றச் செயல்களைச் சுட்டிக்காட்டி, Covid-19க்குப் பிந்தைய உலகம் ஒரு பொருளுள்ள ஒழுங்குடன் இருக்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது.

சிறு செய்திகளில், DG திரான் தத்தா தன்னுடைய காரை ரோட்டரியின் ஆறு கவனப் பகுதிகளின் படங்களால் அழகுபடுத்தியிருப்பது, ரோட்டரிக்கு அவருடைய அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. மூணாரின் மயக்கும் அமைதியை TCA ஸ்ரீனிவாச ராகவன் நன்கு விவரித்துள்ளார்.

இரண்டு RI இயக்குநர்களுடைய செய்திகள் தாக்கம் நிறைந்தவை, லஹார்ரியைப் பாராட்டி க்ளிஃப்ஃபோர்ட் A ராண்டல் எழுதியிருந்த கட்டுரை ஆர்வ மூட்டியது. முடக்கத்தின் போதும் ஏப்ரல் இதழை வெளியிட்டமைக்குப் பாராட்டுகள்.

ஃபிலிப் முலப்பொனெ M T
RC திருவனந்தபுரம் சப்பர்பன் — D 3211

ஏப்ரல் மாத ஆசிரியர் பக்கத்தில், மெக்சிகோவில் பெண்கள் சந்திக்கும் பல பிரச்னைகளை ரஷீதா விவரிக்கிறார்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

மெக்சிகப் பெண்களுடைய புதுமையான போராட்டத்தைப்பற்றிய ஏப்ரல் ஆசிரியர் பக்கம் பல உண்மைகளை வெளிப்படுத்தியது. இப்போதைய Covid-19 நோய்ப்பரவலின்போது, மருத்துவம், காவல்துறை மற்றும் நலத் துறைகளில் முன்னணிப் போராளிகளாகச் செயல்படும் பெண்களின் பங்கு மிகுந்துள்ளது, இதை எல்லாரும் பாராட்டவேண்டும்.

R ஞானகுமார்
RC விருதுநகர் — D 3212

ஏப்ரல் இதழில், Covid-19ஐ விரட்டு வதற்காகச் சமூக விலகியிருத்தலைப் பின்பற்றவேண்டியதன் சிறந்த தேவையை RI இயக்குநர் பரத் பாண்ட்யா சுட்டிக்காட்டியுள்ளார்.

இளைஞர்கள் விவசாயத்தை ஒரு தொழிலாகக் கொள்ளவேண்டும் என்று குடியரசுத் துணைத்தலைவர் M வெங்கையா நாயுடு கேட்டுக் கொண்டுள்ளார்.

உங்கள் உண்மையில் இளைப் பாறுங்கள் என்ற கட்டுரை கண்டிப்பாகப் படிக்கவேண்டியது.

நவீன் R கார்க்
RC சுனாம் — D 3090

மணிப்பாலில் ஒரு ரோட்டரி தோல் வங்கி என்ற கட்டுரை (பிப்ரவரி இதழ்) மிகச்சிறப்பாக எழுதப்பட்டுள்ளது, அனைத்துத் தகவல்களையும் விளக்கியுள்ளது.

Dr சேசப்பா A ராய்,
RC மணிப்பால் டவுன் — D 3182

உறுப்பினர்கள் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையைக் குறைத்தல்

ஹோனலூலுவில் நடைபெற விருந்த RI சந்திப்பை ரத்து செய்வதன்மூலம் ரோட்டரி தன்னுடைய உறுப்பினர்களுடைய நலனுக்கு முக்கியத்துவம் தரத் தீர்மானித்துள்ளது, தங்கள் பகுதி DGக்கு வெளியில் நடைபெறும் சந்திப்புகளில் கலந்துகொள்ள RI இயக்குநர்களுக்கு நிதியளிக்கப்படாது, ஆண்டின் மீதமுள்ள பகுதியில் மற்ற சங்கக் கூட்டங்கள் மெய்நிகர் முறையில் நடைபெறும். இவை அனைத்தும் நிறையப் பணத்தை மிச்சப்படுத்தும்.

ஆனால், நோய்ப்பரவலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள ரோட்டரியன்களைப்பற்றியும் நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும். அவர்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, அடுத்த ஆண்டில் உறுப்பினர் நிலுவைத்தொகைகளை உயர்த்துவதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது, இந்தத் தீர்மானம் இன்னும் ரத்து செய்யப் படவில்லை. இதுவும், எப்போதும் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிற டாலர் பரிமாற்ற விகிதமும் ஒரு சங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தைக் கவிழ்த்து விடலாம். நம் RI இயக்குநர்கள் இந்தப் பிரச்னையைப்பற்றி வாரியத்துடன் பேசவேண்டும். சங்கக் கட்டணத்தைக் குறைத்தால், உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அது உதவும்.

Dr பினு மாத்யூ
RC ஆலப்புழை ஈஸ்ட் — D 3211

புகைப்படங்களில் ஒவ்வொரு வருடைய பெயரும் துல்லியமான அடையாளத்துடன் குறிப்பிடப்படுகிறது, மற்ற NGO இதழ்கள் எவையும் இவ்வாறு செய்வதில்லை.

S R மது, RC மெட்ராஸ் சவுத் — D 3232

கொரோனா நெருக்கடியில் X-காரணி

வெவ்வேறு தொழில்களைப் பற்றிய நம்முடைய பார்வைக்கும் எதார்த்தத்துக்கும் நடுவிலிருக்கும் பெரிய இடைவெளியைக் கோவிட் நோய்ப்பரவல் வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது.

விவசாயிகள் தாங்கள்தான் இந்த நாட்டின் முதுகெலும்புகள் என்பதை இன்னொருமுறை நிரூபித்துள்ளார்கள்.

சமூகத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தலின் முக்கியத்துவத்தை Covid-19 நமக்குக் கற்றுத்தந்துள்ளது. ஒரு மிகச்சிறந்த தளமான ரோட்டரி, உதவி முயற்சிகளுக்குப் பல வகைகளில் பங்களித்து ஒரு முக்கியமான பங்கை ஆற்றுகிறது.

ஸ்ரீகாந்த் கொளதயா
RC புத்தூர் — D 3181

முத்த தலைவர்களுடைய புகைப்படங்களைக் காணாதது மகிழ்ச்சி!

மே 2020 இதழை நான் மிகவும் ரசித்தேன். உங்கள் ஆசிரியர் பக்கமும் நன்கு அமைந்திருந்தது. மிக நீண்ட காலகட்டத்துக்குப்பிறகு, பாராட்டு நிகழ்ச்சிகளுடைய அறிக்கைகள், புகைப்படங்கள், முத்த ரோட்டரி தலைவர்கள், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடைய பேட்டிகள், முன்னாள், இந்நாள், நாளைய இந்திய ரோட்டரி தலைவர்களுடைய பேச்சுகள் இல்லாத ஓர் இதழ் வந்துள்ளது. இந்தியாவில் WinSபற்றிய கட்டுரையில் PRID சுசீல் குப்தா, மார்க் பல்லா-வுடைய புகைப்படத்தைக் கண்டது நெகிழ்வளித்தது.

பல மாவட்டங்கள், சங்கங்கள் செய்த ரோட்டரி நிகழ்ச்சிகள், திட்டங்களைப்பற்றிப் பேசிய இந்த இதழ் ஒரு மிகச்சிறந்த விருந்தாக அமைந்தது. என்னைப்போன்ற பழைய ரோட்டரியன்கள் இந்த மாற்றத்தைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். Covid-19 முடக்கத்தால் நீங்கள் விரும்பும் பகுதிகள் உங்களுக்குக் கிடைக்கவில்லைபோல!

சம்பத்குமார், RC கோயம்பத்தூர் எலைட் — D 3201

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:
rotarynews@rosaonline.org;
rushbhagat@gmail.com

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaline.org*

ரோட்டரியின் அலோஹா மனநிலை

அன்புள்ள சக ரோட்டரியர்கள் மற்றும் ரோட்டரியின் குடும்ப உறுப்பினர்களே,

என்னுடைய ரோட்டரிப் பயணம் 40 ஆண்டுகளுக்குமுன் தொடங்கியது, அப்போது எனக்கு வயது 25, டிகாடுர், அலபாமா ரோட்டரி சங்கத்தில் நான் சேர்ந்தேன், அன்று தொடங்கி, என் குடும்பத்தினருக்கும் எனக்கும் ரோட்டரி பல மறக்க இயலாத கணங்களை அளித்துள்ளது. என்னுடைய தனிப்பட்ட ரோட்டரிப் பயணம், உங்கள் ஒவ்வொருவருடனான ஒரு பகிர்ந்துகொள்ளப்பட்ட ரோட்டரிப் பயணமாகிவிட்டது.

இந்த ஆண்டு கே-யும் நானும் பல மிகச் சிறந்த மக்களைச் சந்தித்தோம்: ரோட்டரியன்கள், ரோடராக்டர்கள், ரோட்டரியின் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்... இந்த நினைவுகள் எங்கள் வாழ்க்கைமுழுவதும் ஊக்கமளிக்கும். உருகுவே-யில் தொடங்கி உக்ரைன்வரை, நைஜீரியாவில் தொடங்கி நியூசிலாந்து வரை, இன்னும் பலப்பல நாடுகளைச் சேர்ந்த சங்கங்கள், திட்டங்களை நாங்கள் கண்டோம். உலகெங்கும் சென்றுவருகிற வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது, உலகை இருமுறை சுற்றிவந்தோம், வடக்கு, தெற்கு அரைக்கோளங்களுக்கிடையில் முன்னும் பின்னும் சென்றுவந்தோம். ஒவ்வொரு நாடும் ஒவ்வோர் இடமும் தமக்கென்று சொந்தமாக ஒரு ரோட்டரி மாயத்தைக் கொண்டிருந்தன. மார்ச் மாதத்தில் ஜிம்பாப்வே சென்றிருந்தபோது, இந்தியாவைச் சேர்ந்த ரோட்டரியன்களுடன் ஒரு மருத்துவப் பணிசார்ந்த பயிற்சிக் குழுச் செயல்பாட்டில் நாங்கள் பங்கேற்றோம், சிகிச்சைக்காக வந்த ஆயிரக்கணக்கானோருக்கு நலத்தை, நம்பிக்கையை, வாழ்க்கையை வழங்கினோம். ஹராரே-யில் நடைபெற்ற ஒரு ரோட்டரி இளைஞர் கூட்டத்தில் 300க்கும் மேற்பட்ட இளைஞர்களுடைய ஆற்றலை நாங்கள் உணர்ந்தோம். அந்த இளைஞர்களுடன் உரையாடுவது ஒரு மிகச்சிறந்த அனுபவமாக இருந்தது!

இந்த ஆண்டில், ரோட்டரியின் புதிய செயல் திட்டத்தை நாம் அறிமுகப்படுத்தினோம், ஒவ்வொரு சங்கமும் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்திவருகிறது என்று நான் நம்புகிறேன்.

Covid-19 உலகெங்கும் பரவியதால், மாறிவிட்ட ஓர் உலகத்தில் நாம் வாழவேண்டியிருக்கிறது. சூழ்நிலைக் கேற்ப மாறுகிற நம் திறன் பரிசோதனைக்குள்ளாகிறது. சங்கக் கூட்டங்கள், மாவட்டக் கருத்தரங்குகள், தலைவர் கருத்தரங்குகள் ரத்து செய்யப்பட்டன, ஹோனலூலுவில் நடைபெறுவதாக இருந்த 2020 ரோட்டரி இன்டர்நேஷனல் சந்திப்பு ரத்து செய்யப்பட்டது மிகவும் வருத்தத்துக்குரியது. கூட்டங்கள், நிகழ்ச்சிகள், பல ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்ட அனுபவங்கள் ரத்து செய்யப்பட்டாலும், பொது நலன், நன்மைதான் முக்கியம் என்பதில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்.

ஹோனலூலுவில் ரோட்டரி சந்திப்புக்கு நாம் தயாரானபோது, "அலோஹா" மனநிலையைப்பற்றி நாம் தெரிந்துகொண்டோம். அலோஹா என்பதன் பொருள், ஒருவர் மீது மற்றவர் காட்டுகிற அக்கறை, அன்பு என்று ஹவாயிலிருக்கும் நம் ரோட்டரி நண்பர்கள் நமக்குக் காட்டினார்கள். பதிலுக்கு எதையும் எதிர்பார்க்காமல் அன்பையும் அக்கறையையும் காட்டுவதுதான் அலோஹா. நாம் உலகில் எங்கு வாழ்ந்தாலும் சரி, அலோஹா மனநிலை நமக்குப் பொருந்தும்.

இந்த நோய்ப்பரவலின்போது, ரோட்டரி சமூகம் தன் அலோஹா மனநிலையை நன்கு வெளிக்காட்டியுள்ளது. ரோட்டரியின் இந்தப் பரிசை நாம் ஒவ்வொருவரும் போற்றிக் காக்கவேண்டும். ரோட்டரி குடும்பத்தைச் சேர்ந்த உங்கள் ஒவ்வொருவரையும் கண்டு கே-யும் நானும் வியந்துள்ளோம், ஊக்கம் பெற்றுள்ளோம், பணிவை உணர்ந்துள்ளோம்.

இவ்வாறு நாம் சேர்ந்து செயலாற்றினால், ரோட்டரியைத் தொடர்ந்து வளர்ப்போம், ரோட்டரியின் பரிசை உள்ளூர் மற்றும் பன்னாட்டுச் சமூகங்களுக்கு இன்னும் மிகுதியாக வழங்குவோம்.

ரோட்டரி உலகை இணைக்கிற இந்த நேரத்தில், கே-யும் நானும் உங்களுடனான எங்கள் ஆண்டை, நம் பகிர்ந்துகொள்ளப்பட்ட பயணத்தை எப்போதும் நினைவில் வைத்திருப்போம், கொண்டாடுவோம்!

மார்க் டேனியல் மலோனி
RI தலைவர்

துன்பத்துக்கு நடுவில் உதிக்கும் நாயகர்கள்...

இன்றைக்கு, நம்முடைய சொந்த நண்பர்கள், உடன் பணியாற்றுவோர் அல்லது நமக்குப் பிடித்த உள்ளூர் மளிகைக்கடை நண்பரைச் சந்திப்பதற்கு, உரையாடுவதற்குக்கூட நாம் அஞ்சுகிறோம். இப்படி ஒரு சூழலை நம்மில் யாராவது கற்பனையிலாவது எண்ணியிருப்போமா? நாம் அனைவரும் அச்சத்தில் நடுங்குகிறோம், பல அழகிய இடங்களுக்குச் செல்லவேண்டும் என்று பயணப் பட்டியல் போட்டுவைத்திருந்த நாம், அவை அனைத்தையும் நிறுத்திவைக்கிறோம், முகக்கவசங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொள்கிறோம். இந்தப் பின்னணியில், ஆன்டி மிலோனகிலின் இந்த ட்வீட் வியப்பளிக்கவில்லை: இன்றைக்குப் பூமியிலிருந்து கிளம்பிச்சென்ற விண்வெளி வீரர்களுக்குப் பாராட்டுகள். நீங்கள் சரியான தீர்மானத்தைத்தான் எடுத்துள்ளீர்கள். இந்த ட்வீட்டுக்கு 3.8 மில்லியன் விருப்பக்குறிகள் கிடைத்திருந்தன!

மே மாதத்தில், RIன் முன்னாள் தலைவரான மெக்சிகோவைச் சேர்ந்த ஃப்ராங்க் டெவ்லின் தடுமாறிக்கொண்டிருக்கிற நம்முடைய பூமியை விட்டு ஓர் உயர்ந்த தளத்துக்குச் சென்றார். நம் அன்பைப் பெற்ற மூத்த ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரான அவருடைய இழப்புக்காக அனைவரும் வருந்தினார்கள்.

இந்தியாமுழுவதிலுமிருந்தும், ரோட்டரி உலகத்தின் மற்ற பகுதிகளிலிருந்தும் சமூக ஊடகங்களில் அவரைப்பற்றி விரைவாகவும் அன்போடும் எழுதப்பட்ட நினைவுக்கட்டுரைகள் வியப்பளித்தன. மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் பலர், தாங்கள் உள்வரும் ஆளுநர்களாகக் கலந்துகொண்ட பன்னாட்டுக் கூட்டத்தில் அவர் தங்களை எப்படி அன்போடு வரவேற்றார் என்பதை நினைவு கூர்ந்தார்கள்.

அவர் மெக்சிகோவின் ரோட்டரி பிராந்திய இதழுக்கு ஆசிரியராகவும் இருந்துள்ளார் என்பதை அறிந்து ரோட்டரி நியூஸ் அறக்கட்டளை (RNT)யில் உள்ள நாங்கள் மகிழ்ந்தோம்.

உண்மையில், டெவ்லின் இருமுறை RNT அலுவலகத்துக்கு வந்துள்ளார், எடுத்துக்காட்டாக, சென்னையில் எங்களுடைய புதிய அலுவலகம் தொடங்கப்பட்ட பிறகு, PDG கிருஷ்ணன் சாரி ஆசிரியராக இருந்தபோது அவர் இங்கு வந்திருந்தார். அவருடைய மூன்று நூல்களையும் RNT வெளியிட்டுள்ளது: ஃப்ராங்க் டாக், ஃப்ராங்க் டாக்-II, மூன்றாவதாக, ரோட்டரி அறக்கட்டளைபற்றிய ஒரு நூல்.

Covid-19 என்பது ஒரு மிகச்சிறிய நுண்ணுயிர், ஆனால், நம் உள்ளங்களில் அது மிகப்பெரிய அச்சத்தை உண்டாக்கிவிட்டது, எந்த அளவுக்கு அச்சம் என்றால், அதற்கு எதிரான ஒரு தடுப்பு மருந்து கண்டறியப்படும்வரை நாம் கண்டிப்பாக நம்முடைய அச்சம் கொண்ட வாழ்க்கைக்குள்தான் முடங்கிக்கிடப்போம் என்கிற அளவுக்கு. முகக்கவசங்கள், கையுறைகள், தூய்மைப்படுத்திகள், சோப்புகள் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ள மனிதர்கள் ஒவ்வோர் இருமலையும், ஒவ்வொரு தும்மலையும் ஐயத்துடன்தான் காண்பார்கள்.

ஆனால், வியப்பளிக்கும் விஷயம், நட்பு, தோழமையில் செழிக்கிற ரோட்டரி, சங்க/மாவட்ட உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து குறிப்பிடக்கூடிய சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றுகிற ரோட்டரி, நோய்ப்பரவலுக்குப் பிந்தைய உலகம் தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதைப் புரிந்துகொண்டு மின்னல் வேகத்தில் மாறிவிட்டது. மெய்நிகர் கூட்டங்கள், புதிய சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் மிக விரைவாக நடைபெறுகின்றன.

அதே நேரம், அவர்கள் நேரில் வரவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படும்போது, அவர்கள் உடனே களமிறங்குகிறார்கள். எடுத்துக்காட்டாக, நோய்ப்பரவலில் சிக்கித் தவிக்கிற, பசித்திருக்கிற அன்றாடக் கூலித் தொழிலாளர்களுக்கு, தெருவில் வசிப்போருக்கு, அவர்கள் பல மில்லியன் உணவுப் பொட்டலங்களைச் சூடாகவும் சுவையாகவும் வழங்கிவருகிறார்கள், இதேபோல் இன்னும் பல நோய்ப்பரவல் தொடர்பான உதவிப் பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

நலப் பராமரிப்பாளர்கள், காவல்துறையினர், உள்ளூர் நிர்வாகிகள், களத்தில் சுறுசுறுப்பாக இயங்கும் மற்ற NGOக்கள் என்று நம்மிடையே பல Covid-19 நாயகர்கள் உள்ளார்கள், அவர்களுக்கு நடுவில், இந்த ரோட்டரியன்களும் சிறந்த நாயகர்களாகச் சேவை புரிகிறார்கள்.

ரஷ்தா பகத்

Governors Council

RI Dist 2981	DG N Manimaran
RI Dist 2982	DG Natesan A K
RI Dist 3000	DG Dr A Zameer Pasha
RI Dist 3011	DG Suresh Bhasin
RI Dist 3012	DG Deepak Gupta
RI Dist 3020	DG M Veerabhadra Reddy
RI Dist 3030	DG Rajendra Madhukar Bhamre
RI Dist 3040	DG Dhiran Datta
RI Dist 3053	DG Harish Kumar Gaur
RI Dist 3054	DG Bina Ashish Desai
RI Dist 3060	DG Anish Shah
RI Dist 3070	DG Sunil Nagpal
RI Dist 3080	DG Jitendra Dhingra
RI Dist 3090	DG Rajeev Garg
RI Dist 3100	DG Hari Gupta
RI Dist 3110	DG Kishor Katru
RI Dist 3120	DG Sanjay Agrawal
RI Dist 3131	DG Ravee Dhotre
RI Dist 3132	DG Suhas Laxmanrao Vaidya
RI Dist 3141	DG Harjit Singh Talwar
RI Dist 3142	DG Dr Mohan Chandavarkar
RI Dist 3150	DG Pandi Sivannarayana Rao
RI Dist 3160	DG Nayan S Patil
RI Dist 3170	DG Dr Girish R Masurkar
RI Dist 3181	DG Joseph Mathew
RI Dist 3182	DG Ramesh B N
RI Dist 3190	DG Dr Sameer Hariani
RI Dist 3201	DG R Madhav Chandran
RI Dist 3202	DG A Karthikeyan
RI Dist 3211	DG Shirish Kesavan
RI Dist 3212	DG S Sheik Saleem
RI Dist 3231	DG Sridar Balaraman
RI Dist 3232	DG G Chandramohan
RI Dist 3240	DG Dr Debasish Das
RI Dist 3250	DG Gopal Khemka
RI Dist 3261	DG Ranjeet S Saini
RI Dist 3262	DG Debasish Mishra
RI Dist 3291	DG Ajay Agarwal

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

RI இயக்குனர்

ஒருவருக்கொருவர்

கோவிட் நோய்ப்பரவல் நமக்கு இரு முதன்மையான உண்மைகளை விளக்கியுள்ளது. முதலில், நல்ல ஆரோக்கியம் என்பது முதன்மையானது. இரண்டாவதாக, இணை நோய்களைக் கொண்ட மக்களை வைரஸ் வேறுவிதமாகப் பாதிக்கிறது.

இணை நோய்களைக் கொண்டவர்கள் தீவிரமாக நோய்வாய்ப் படுகிற,அவர்களை மருத்துவமனையில் சேர்க்கவேண்டியிருக்கிற, அவர்களுக்கு ICU சிகிச்சை, செயற்கை மூச்சுவிடல் கருவிகள் தேவைப்படுகிற வாய்ப்பு மிகுதியாக உள்ளது, இணை நோய் கொண்டவர்களுடைய இறப்பு விகிதம் மிகுதியாக உள்ளது.

தொலைக்காட்சி வந்தபோது, நூல்கள், இதழ்கள் அழிந்துவிடும் என்றார்கள். சிறந்த தகவல் நெடுஞ்சாலையில் நூல்கள், இதழ்கள் நிறைந்துள்ளன. ரோட்டரி நியூஸ் மற்றும் ரோட்டரி சமாச்சார் நல்ல செய்திகளின் இதழியலுக்குப் பிரதிநிதிகளாக உள்ளன. உலகில் நிறைந்துள்ள நல்லவற்றைக் கொண்டாடுகிறது. அக்கறை காட்டுகிற, பகிர்ந்துகொள்கிற, எதிலும் நல்லதைப் பார்க்கிற, பெரும்பாலும் பாராட்டப் படாத, அங்கீகரிக்கப்படாத ஆண்களை, பெண்களைப்பற்றி இது நமக்குச் சொல்கிறது. ஆசிரியர் ரஷீதா பகத் மற்றும் குழுவினரின் கடின உழைப்பு, அர்ப்பணிப்புக்குப் பாராட்டுகள்.

கோவிட் நோய்ப்பரவல், மாவட்டங்கள், சங்கங்களின் மிகச்சிறந்த பணி, உறுப்பினர் எண்ணிக்கையில் தொடர்ந்த கவனம், நல்கைகளை வழங்குதலில் ரோட்டரி அறக்கட்டளையின் முன்னெச்சரிக்கையான, சரியான நேரத்தில் வழங்கப்படுகிற எதிர்வினை, முன்னோடி ஆளுநர்கள், அவர்களுடைய குழுக்கள் வழங்கும் தலைமைப்பண்புகள். இவை அனைத்தும், இந்த ஆண்டை நினைவில் நிற்கிற ஒன்றாக ஆக்குகின்றன.

ஜூன் மாதம், ரோட்டரி தோழமை மாதமாகும். ரோட்டரியின் உயிராகிய நம் நட்பு, தோழமையில் மீண்டும் கவனம் செலுத்துவதற்கான நேரம் இது. நீங்கள் நேருக்கு நேராகச் சந்தித்துச் செய்யக்கூடிய அனைத்து விஷயங்களையும் செய்வதற்கு மெய்நிகர்ச் சந்திப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். நம் உறுப்பினர்கள் ரோட்டரியில் தொடர்ந்து ஆர்வம் காட்டுவதை உறுதிசெய்வதற்காக, அவர்களுடன் தொடர்ந்து இணைப்பில் இருப்பது முன்பு எப்போதையும்விட முக்கியமாகிறது.

ரோட்டரியை அனுபவியுங்கள், உங்களை அனுபவியுங்கள்.

Dr பரத் பாண்ட்யா
RI இயக்குனர், 2019–21

களின் செய்திகள்

அன்பு நண்பர்களே,

இந்த நெருக்கடியின் போது, "நான்" அல்லது "என்னுடையது" என்ற சொற்கள் "நாம்" அல்லது "நம்முடையது" என மாறிவிட்டன. மேலும், ஒன்றாக இருப்பதன் ஆற்றலை நாம் புரிந்துகொண்டுள்ளோம்.

ஆஷா பெஹ்ல் (பஞ்சாப்)

இந்தக் கொரோனா நோய்ப்பரவலின்போது ஒரு புதிய காலகட்டம் தொடங்கியுள்ளது, இங்கு நாம் பாலினச் சமநிலையைக் கூடுதலாக உணரவேண்டும், வீட்டு, குடும்பப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளவேண்டும், மனத் தடைகளை உடைக்கவேண்டும், கல்வி, திறன் மேம்பாடு போன்றவற்றில் பெண்களுக்கு வாய்ப்புகளைக் கண்டறியவேண்டும். நம்மையும் நாட்டையும் முன்னேற்றுவதற்கு, மாற்றத்தைக் கொண்டுவருகிறவர்களாக இருப்பதற்கு, கண்ணியத் திட்டம் (பெண்கள்/கைம்பெண்கள் மற்றும் கைம்பெண்களுடைய குழந்தைகளுக்குத் திறன் பயிற்சி அளித்தல்) போன்ற பலவிதமான திட்டங்களை நடத்துவதற்கு இந்த நெருக்கடி நமக்கொரு வாய்ப்பளிக்கிறது.

பல தொழில்நுட்ப வாய்ப்புகளால், மெய்நிகர் கூட்டங்கள் புதிய இயல்பாகிவிட்டன. பயிற்சி, தோழமை ஆகியவையும் மெய்நிகர் சூழலில் மீண்டும் தொடங்குகின்றன. ஜூன் மாதம், ரோட்டரியின் தோழமைகள் மாதம். ரோட்டரியன்கள், அவர்களுடைய துணைவர்கள், ரோடராக்டர்கள் குழுவாகச் சேர்ந்து பொழுதுபோக்குச் செயல்பாடுகளில் ஈடுபடுகிற, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பணிசார்ந்த முன்னேற்றம், சிறந்த சேவையைப் பெறுகிற நேரம் இது.

மெய்நிகர் ஊடகமானது, தோழமை மற்றும் நட்பின் கனிகளை ஆராய்வதற்கான புதுமையான முறைகளைக் கண்டறிவதற்கு நமக்கு மிகச் சிறந்த வாய்ப்புகளை அளிக்கிறது. நம் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பழைய நட்புகளை மீண்டும் தூண்டவேண்டும், புதிய நட்புகளை உருவாக்கவேண்டும். DGEகள் மாற்றத்துக்கேற்ப விரைவாகவும் செயல்திறனோடும் மாறிக்கொண்டு, அனைத்துப் பயிற்சி மற்றும் தோழமை நிகழ்ச்சிகளையும் மெய்நிகர் தளங்களில் நடத்துகிறார்கள்.

மாவட்ட ஆளுநர்கள் தங்களுடைய OCVக்களை மெய்நிகர் முறையிலேயே தொடர்ந்து நிறைவுசெய்யவேண்டும். தங்கள் சேவை ஆண்டை 100 சதவிகித உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வதுடன் நிறைவுசெய்யவேண்டும் என்கிற சவாலையும் நான் அவர்களுக்கு விடுக்கிறேன். நினைவிருக்கட்டும்: தனித்தனியாக நாம் சிலவற்றைதான் செய்ய இயலும், ஒன்றாகச் சேர்ந்தால் பலவற்றைச் செய்யலாம். நாம் இன்னும் வலுவாகவேண்டும், இணைதல், வலிமைக்கான புதிய சொல்லாகிய ஒற்றுமையில் நம் பங்கைச் செய்யவும் நாம் ஒன்றாகத் திரளவேண்டும்.

இந்தக் கடினமான நேரங்களில், புதுமைச்சிந்தனையும் உடனுழைப்பும்தான் ஒவ்வொரு வெற்றியையும், அனைத்து வெற்றிகளையும் பெற்றுத்தரும்; ஒற்றுமைதான் வெற்றிக்கான முக்கியப் பண்பு.

கமல் சங்வி
RI **இயக்குனர்,** 2019–21

Board of Permanent Trustees & Executive Committee

PRIP Rajendra K Saboo	RI Dist 3080
PRIP Kalyan Banerjee	RI Dist 3060
RIPN Shekhar Mehta	RI Dist 3291
PRID Panduranga Setty	RI Dist 3190
PRID Sushil Gupta	RI Dist 3011
PRID Ashok Mahajan	RI Dist 3141
PRID Yash Pal Das	RI Dist 3080
PRID P T Prabhakar	RI Dist 3232
PRID Dr Manoj D Desai	RI Dist 3060
PRID C Basker	RI Dist 3000
TRF Trustee Gulam A Vahanvaty	RI Dist 3141
RID Dr Bharat Pandya	RI Dist 3141
RID Kamal Sanghvi	RI Dist 3250

Executive Committee Members (2019–20)

DG Deepak Gupta Chair – Governors Council	RI Dist 3012
DG Nayan Patil Secretary – Governors Council	RI Dist 3160
DG Dhiran Datta Secretary – Executive Committee	RI Dist 3040
DG Ajay Agarwal Treasurer – Executive Committee	RI Dist 3291
DG Rajendra Madhukar Bhamre Member – Advisory Committee	RI Dist 3030

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

கோவிட்-19 கடந்த உலகம்

ரஷீதா பகத்

WINES

लक्ष्मी विलास होटेल
Mahavir Hospital

கொரோனா வைரஸ் என்னும் கொடிய அரக்கனின் தாக்குதலால் உலகில் மனிதகுலமே பீதியில் ஆழ்ந்து நிற்கிறது. உயிர்பிழைப்போமா மாட்டோமா என்ற அச்சத்தில் பலரும் உள்ளனர். அதே நேரத்தில் பொருளாதார வீழ்ச்சியால் உலகமே செய்வதறியாமல் ஸ்தம்பித்து நிற்கிறது. அந்தக் காலத்தில் டைனோஸர் போன்ற விலங்கினங்கள் மனிதகுலத்துக்கு அழிவு ஏற்படுத்துவதுபோல எடுக்கப்பட்ட திரைப்படங்கள்தான் இப்போது நினைவுக்கு வருகின்றன. சிதைந்து போன வாழ்க்கை மீண்டும் இயல்புநிலைக்குத் திரும்புமா, கொரோனா வைரஸுக்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டபின் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதுதான் நம்முள் இப்போது எழும் கேள்வி.

உலகையை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றால் இந்தியாவில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைவது நிச்சயம். தொழிற் சாலைகளில் உற்பத்தி இழப்பு, தொழில்துறையில் பாதிப்பு, இவையெல்லாவற்றையும்விட லட்சக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. லட்சக்கணக்கான புலம்பெயர் கூலித்தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட துயரங்கள் பல ஆண்டுகளுக்கு நமது நினைவை விட்டு அகலாது.

குஜராத்திலிருந்து பிகாருக்கு ரயிலில் குழந்தையுடன் வந்த தாய், சரிவர குடிநீர், உணவு கிடைக்காமல் பாட்னா ரயில்நிலையம் வந்ததும் நடைமேடையிலேயே உயிர்விட்டதும், தாய் இறந்தது தெரியாமல் குழந்தை அம்மாவை தட்டியெழுப்பும் காட்சி களும் நெஞ்சை பதறவைக்கின்றன. லட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் தலையில் மூட்டை முடிச்சுகளுடன் நடைப்பயணமாக சொந்த ஊர் திரும்பிய காட்சியைத் தான் மறக்க முடியுமா?
அவர்களில் சிலருக்கு நல்ல உள்ளங்கள் படைத்தவர்கள் சாப்பிட உணவும், குடிக்க தண்ணீரும் கொடுத்து உதவியதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

புலம்பெயர் தொழிலாளர்களில் சிலர் தங்கள் நடைப்பயணத்தின்போது பசி தாங்காமலும், வெயிலின் கொடுமையாலும் சுருண்டு விழுந்து உயிரிழந்துள்ளனர். இப்படி ஒரு ஆபத்தான பயணம் தேவைதானா என்று ஒருவரிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில்,நாங்கள் எங்கள் சொந்த கிராமத்துக்குச் சென்றால் எங்களுக்கு சாப்பிட உணவாவது கிடைக்கும். ஒருவேளை உணவு கிடைக்காமல் பட்டினியால் இறக்க நேர்ந்தால் எங்களுக்காக அழுவதற்காவது ஒரு சிலர் இருப்பார்கள் என்று கூறியபோது மனம் வேதனை அடைந்தது.

பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்ட ஏழை கூலித்தொழிலாளர்களுக்கு நாடு முழுவதும் உள்ள ரோட்டரி சங்கத்தினரும் உறுப்பினர்களும் மனமுவந்து உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களை வழங்கியது பாராட்டுக்குரியதுதான். ஆனாலும் அவர்கள் மோசமாக நடத்தப்பட்டது ஒரு கரும்புள்ளிதான். நாம் வீடுகட்டிக்கொள்ள செங்கல் சுமந்தவர்கள், கதவு பொருத்தியவர்கள், வீட்டின் சுவர்களுக்கு வர்ணம் அடித்தவர்கள், மரவேலைப்பாடுகளால் வீட்டை அலங்கரித்தவர்களுக்கு தேவைப்படும்போது உதவிசெய்ய நாம் ஏன் தவறிவிட்டோம்? பொது முடக்க அறிவிக்கப்படுவதற்கு முன்னரே அவர்களை சிறப்பு ரயில்கள், பேருந்துகள் அல்லது லாரிகள் மூலம் பாதுகாப்பாக சொந்த ஊருக்கு அனுப்பி யிருக்கலாமே? ஆனால், தேசம் என்ற அளவில் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய தவறிவிட்டோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சரி கொரோனாவின் தாக்கம்

கேரள மாவட்டம் ஒன்றில் சமூக இடைவெளி கடைப்பிடிக்க குடைகள் அவசியமாக்கப்பட்டது.

முழுமையாக நீங்கிவிட்ட பின் உலகம் எப்படி இருக்கும். அடுத்து வரும் மாதங்களில் புதிய இயல்புநிலை திரும்புமா என்ற கேள்வி எழுகிறது. நாம் நமது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். அது நமது வேலையாக இருந்தாலும் சரி, வாழ்க்கை முறையாக இருந்தாலும் சரி, கடைக்குச் செல்லவேண்டியதாக இருந்தாலும் சரி, பயணம் செல்வதாக இருந்தாலும் சரி அவற்றில் மாற்றங்கள் இருக்கத்தான் செய்யும்.

கடைகளுக்குச் செல்லும் வழக்கம்: தேவைப்படும்போது கடைக்குச் சென்று உணவு, உடை முதலான அத்தியாவசியப் பொருள்களை வாங்குவோம். அடுத்து கிராமத் திலிருந்து நகரங்களுக்கு இடம்பெயர்ந்தால் அல்லது வீட்டில் குழந்தைகள் பிறப்பு போன்ற பெரிய நிகழ்ச்சிகள் நடந்தால் நாம் அதிகம் கடைக்குச் செல்வோம்.

கொரோனா தாக்கத்தின் எதிரொலியாக பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் என்றும் உள்நாட்டு உற்பத்தியில் எதிர்பார்த்த வளர்ச்சி இருக்காது என்றும் பொருளாதார நிபுணர்களும், ரிசர்வ் வங்கியும் எச்சரித்துள்ளதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பல விஷயங்களில் பற்றாக்குறை ஏற்பட்டாலும் உணவுதானிய பற்றாக்குறை ஏற்படாது என்றே பலரும் கருதுகின்றனர். நுகர்வோர் செலவினங்கள் குறைந்தாலும் தேவையான மளிகை சாமான்களை வாங்குவதில் எந்த சிக்கலும் இருக்காது. மக்கள் மளிகைப் பொருள்கள் வாங்குவதற்கு அதிகம் செலவிட்டனரே தவிர ஆயத்த ஆடைகள், காலணிகள், தங்கநகைகள் வாங்குவதில் யாரும் ஆர்வம் காட்டவில்லை. அமெரிக்காவில் கரோனா தாக்குதல் காரணமாக மார்ச் மாதம் ஒரு வாரத்தில் மளிகை கடையில் விற்பனை அதற்கு முந்தைய ஆண்டைவிட 77 சத வீதமாக அதிகரித்திருந்தது ஆய்வில் தெரியவந்துள்ளது. மக்களிடம் ஏற்பட்ட பீதியே இதற்கு காரணம். அந்த சமயத்தில் டாய்லெட் பேப்பர் ரோல்கள்கூட கிடைக்கவில்லை. ஆனால் உணவகச் செலவு 66 சதவீதம் குறைந்துவிட்டது. ஏப்ரல் மாதம்கூட

பூனைகளும் சமூக இடைவெளி கடைப்பிடிக்கின்றன.

மளிகைப் பொருள்கள் விற்பனை சராசரியைவிட 8 சதவீதம் அதிகரித்திருந்தது. உணவகம் செல்வது 48 சதவீதமாக குறைந்துவிட்டது.

வீட்டிலிருந்தபடியே வேலை: உலகம் முழுவதும் அதிகாரிகளும் ஊழியர்களும் வீட்டிலிருந்தபடியே வேலை செய்யும் புதிய நடைமுறையை நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன. தங்களது ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் 2021-ஆம் ஆண்டுவரை வீட்டிலிருந்த படியே பணியாற்றலாம் என்று கூகுள் அறிவித்துள்ளது. டுவிட்டர் நிறுவனத்தின் தலைமைச் செயல் இயக்குநர் ஜாக் டோர்ஸி, தங்களது ஊழியர்கள் இனி நிரந்தரமாக வீட்டிலிருந்தபடியே பணிபுரியலாம் என்று அறிவித்துவிட்டார். அமெரிக்காவில் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வின்படி அமெரிக்காவில்

இரண்டு ரோட்டரி தலைவர்களின் கருத்து

ஷாங்காயில் உள்ள டிஸ்னி லேன்டில் முகக்கவசம் அணிந்த மக்கள்.

ரோட்டரி சங்கங்கள் கொரோனா தொற்றை கட்டுப்பத்துவதற்கும், நிவாரணப் பணிகளை மேற்கொள் வதற்கும் நிதியுதவி தேவைப்பட்டபோது, ரோட்டரி அறக்கட்டளை துரிதமாக செயல்பட்டு தேவையான நிதியுதவியை வழங்கியது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அறக்கட்டளைத் தலைவர் பதவியை ஏற்கவுள்ள இலங்கையைச் சேர்ந்த தொழிலதிபர் K R ரவீந்திரனிடம் கேட்டப்போது வர்த்தகம் மற்றும் தொழில்துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விவரித்தார்.

கொரோனா தொற்றால் ஏற்பட்ட பாதிப்பை தொழில் உலகம் இதற்கு முன் சந்தித்தது இல்லையென்பதால் அவர்கள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. ஆடை வடிவமைப்பில் ஈடுபட்டுள்ள ஹெச் அண்ட் எம், தி லூயிஸ் வுட்டன் குழுமத்தினர் உள்ளிட்ட பலர் தங்கள் தொழிலை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு முகக்கவசங்களை வடிவமைத்து தயாரிப்பதிலும், கிருமி நாசினிகளைத் தயாரிப்பதிலும் கவனம் செலுத்தினர். ஜெனரல் மோட்டார்ஸ், போர்டு, புஜியட், வால்வோ போன்ற மோட்டார்வாகன தயாரிப்பாளர்கள் கார்கள் தயாரிப்பதை விட்டுவிட்டு அவசரத் தேவையான வென்டி லேட்டர்கள் தயாரிப்பில் ஈடுபட்டனர். கரோனா பரவல் எதிரொலியாக மோட்டார் வாகனங்களின் விற்பனை 25 சதவீதம் குறைந்துவிட்டதால் அவர்களின் எதிர்காலம் சவால் நிறைந்ததாக உள்ளது.

எந்த பொருளாதாரமும் தேவை அல்லது நுகர்வைப் பொருத்துத்தான் அமையும். குடும்பத்தில் உள்ளவர்கள் தங்கள் உடல்நலம் மற்றும் பணத் தேவையைப் பற்றித்தான் முதலில் கவலைப்படுவார்கள். எனவே அவர்கள் பணத்தைச் சேமிப்பதில்தான் கவனம் செலுத்துவார்களே தவிர செலவு செய்ய முன்வர மாட்டார்கள். இது நிச்சயமாக தொழில், வியாபாரத்தில் எதிரொலிக்கும். கடந்த ஏப்ரலில் எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்தது. வாங்குவதற்கு ஆளில்லை. அமெரிக்காவிலேயே ஒரு பீப்பாய் எண்ணெய் விலை 40 டாலராக வீழ்ச்சி அடைந்தது. கச்சா எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் பொருள்களை வாங்குபவர்களுக்கே பணம் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது என்றால் நம்பமுடிகிறதா?

கொரோனா வைரஸ் தொற்று தலைதூக்கிய போது ஷாங்காய் டிஸ்னி ரீஸார்ட்டுக்கு போய் உணவு சாப்பிடுவது அவ்வளவு எளிதாக இல்லை. அங்கு செல்பவர்கள் சாப்பிடும் நேரம் தவிர்த்து எப்போதும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். உள்ளே நுழைவதற்கு முன்னதாக உடல்வெப்ப பரிசோதனை அறிக்கையையும், தங்களுக்கு வைரஸ் தாக்குதல் இல்லை என்பதை காட்டும் அரசு அறிக்கை குறியீட்டை செல்போன் மூலம் தாக்கல் செய்யும் நிலை இருந்தது என்றார் ரவீந்திரன்.

விளையாட்டு உலகமும் முன்பு போல் இருக்காது என்கிறார் விளையாட்டு ஆர்வலரான ரவீந்திரன். ஜெர்மனியைச் சேர்ந்த புகழ்பெற்ற கால்பந்து சங்கம் பண்டஸ்லிகா. இவர்கள் கலந்து கொள்ளும் போட்டி என்றாலே மைதானம் நிரம்பிவழியும். கரோனா பொது முடக்கத்திற்கு பிறகு போட்டி நடத்து வதற்காக இவர்கள் பயிற்சி செய்து வருகின்றனர். விளையாட்டு வீரர்கள் வாரத்துக்கு இரண்டு முறை பரிசோதிக் கப்படுகிறார்கள். பயிற்சியாளர்கள் முகக்கவசம் அணியவேண்டும், போட்டியின்போது ரசிகர்கள் நேரில் காண தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த கால்பந்து சங்கம் போட்டியைக் காண 300 பேருக்கு மேல் பார்வையாளர்கள் மைதானத்துக்கு வரக்கூடாது, வீரர்கள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் குவிந்திருக்கக்கூடாது என கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். பண்டஸ்லிகா கால்பந்து சங்கம் 4.3 பில்லியன் டாலர் வருவாய் ஈட்டும் திறன்கொண்டது. ஆனால், இப்போது எல்லாமே ஸ்தம்பித்துவிட்டது. சங்கத்தின் வருவாயும் குறைந்துவிட்டது. டி.வி.யில் இந்த விளையாட்டை பார்ப்பவர்களும் குறைந்துவிட்டனர். கால்பந்து அணிக்கு வருவாய் இல்லாததால் வீரர்களுக்கான மதிப்பும் குறைந்துவிட்டது. இனி வருங்காலம் அவர்களுக்கு கவர்ச்சி நிறைந்ததாக இருக்காது என்கிறார் ரவீந்திரன்.

RI இயக்குநர் பரத் பாண்ட்யா என்ன சொல்கிறார். ரோட்டரியில் அடிக்கடி முக்கியப் பிரமுகர்கள் அடங்கிய கூட்டம் நடத்துவதும், உறுப்பினர்களை நேரில் சந்திப்பதும் அவ்வப்போது நிகழ்ச்சி கள் நடத்துவதும் அனைவருக்கும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும், செயல்பாட்டிலும் ஒரு வேகம் இருக்கும். ஆனால், கொரோனா வைரஸ் காலத்தில் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்க

முடியவில்லை. விடியோ கான்பரன்சிங் மூலம்தான் நாம் இனி சந்தித்து உரையாட முடியும். நேரில் ஒருவரை சந்தித்து கைகுலுக்குவதும், ஒருவரையொருவர் கட்டித்தழுவிக்கொள்ளவதும் சாத்தியமில்லை. இவற்றை என்ன மின்னஞ்சல் மூலமா தெரிவிக்க முடியும்? ஆனாலும் நம்மிடையே உள்ள உறவை வலுப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்.

ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ், எப்போதும் வளர்ச்சியைப் பற்றியே சிந்திக்க வேண்டும், எப்போதாவது தான் புரட்சியைப் பற்றிய சிந்தனை வேண்டும் என்பார். இப்போது நாம் புரட்சியைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. நமது செயல்பாடு கள் வழக்கமானதாக இருக்காது. நாம் வேறுவகையில் சிந்திக்க வேண்டும். அடுத்த இரண்டு மாதங்களில் ரோட்டரிக் கூட்டங்கள் சிறிய அளவில் நடக்கும் என எதிர்பார்க்கிறேன். அப்போது உடல்வெப்பநிலை பரிசோதனை, சமூக இடைவெளிகள், தனிநபர் பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்படும். ஆனால், ரோட்டரி சங்கங்களின் மாவட்ட, மாநில, சர்வதேச அளவிலான தலைவர்கள் அதிக முயற்சிகளுடன், தங்கள் உறுப்பினர்களுடன் அதிக நேரத்தை செலவிட வேண்டிவரும்.

ரோட்டரி சங்கத் தலைவர்களும், மாவட்டத் தலைவர்களும் சிறிய குழுவாக வீட்டிலோ அல்லது காணொலி காட்சி மூலமான கூட்டங்கள் மூலமாகவோ சங்கத்தின் சேவை திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து விவாதிக்க வேண்டும். எந்தச் சூழிலிலும் பெருங்கூட்டத்தை தவிர்த்து விட வேண்டும்.

நெருக்கடியான இந்த நேரத்திற்கு பிறகு ரோட்டரித் தலைவர்களும், உறுப்பினர்களும் மீண்டும் 2 பட்டு செயல்பட்டு ரோட்டரியின் கரத்தை வலுப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இதை ரோட்டரியினர் புரிந்து கொண்டு இதற்காக பெருமுயற்சி எடுத்தால் ரோட்டரி என்ற கட்டமைப்பு யாராலும் பிரிக்கமுடியாத வலுவான உறவாக அமைந்துவிடும். ரோட்டரி யுடன் நட்பு, தொடர்பு என்பது வைரத்தைப் போன்றது. அதன் பிரகாசம் மதிப்பில்லாதது, ஈடு இணையில்லாதது. புதிய மாற்றத்தை ஏற்றுக்கொண்டு சுடர்விட்டு பிரகாசிப்போம்.

பணிபுரியும் ஊழியர்களில் 5 சதவீதத் தினர் கடந்த 2017-ஆம் ஆண்டிலிருந்தே வீட்டிலிருந்த படி வேலை செய்துவருகின்றனர். 2000-த்தில் இது வெறும் 3 சதவீதமாக இருந்தது. 2018-இல் இது 29 சதவீதமாக அதிகரித்து விட்டது.

கொரோனா வைரஸ் தொற்றால் பொதுமுடக்கத்தால் தொழிலதிபர்கள், கார்ப்பொரேட் நிறுவனங்கள் அலுவலகங்களை திறக்க முடியாத சூழ்நிலையில் வீட்டிலிருந்தபடியே வேலை திட்டத்தை அறிமுகப்படுத்த நேர்ந்துவிட்டது. இதனால் உற்பத்தித்திறன் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை என்கின்றனர் அவர்கள். தகவல் தொழில்நுடப்பத் துறையில் வேண்டுமானால் இது சாத்தியமாக இருக்கலாம். ஆனால், பொருள்கள் உற்பத்தித்துறையில் இது எப்படி சாத்தியமாகும். தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணி நிறுவனமான மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தலைமைச் செயல் இயக்குநர் சத்யா நாதெள்ளா வீட்டிலிருந்தபடி வேலை திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். இதனால் சமூக பரிமாற்றம் சீர்குலைவதுடன் ஊழியர்களின் மனோநிலையும் பாதிக்கப்படும் என்கிறார். விடியோ கால்கள் மூலம் நடைபெறும் கூட்டங்கள், நேரிடையாக நடைபெறும் கூட்டங்களுக்கு இணையாகாது. நேரிடையான கூட்டத்துக்கு வரும்போது ஒருவர் மற்றொருவருடன் பேசிக்கொண்டே வரலாம். இது நம்மிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தும். ஆனால் வீட்டிலிருந்தபடி வேலை என்றால் அது ரிமோட் மூலம் இயங்குவது போலாகிவிடும் என்கிறார் அவர்.

உணவு பழக்கவழக்கத்தில் மாற்றம்:

கொரோனா வைரஸ்தொற்று நம்மிடையே உணவு சாப்பிடும் விஷயத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளியிடங்களில் உணவு சாப்பிடமுடியாத கட்டாயத்தில் நாம் வீட்டில் உணவு சாப்பிட்டாலும் நமக்கு பிடித்ததை சமைத்து சாப்பிடலாம். இனிவரும் நாட்களில் உணவகங்களிலிருந்து வாங்கிவந்து சாப்பிடுவது, ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்து உணவு வரவழைத்தும் சாப்பிடுவது குறைந்து வீட்டில் சமைத்து சாப்பிடும் பழக்கம் அதிகரிக்கலாம். இப்போதெல்லாம் ஹோட்டல்களிலிருந்து உணவு வாங்கி சாப்பிட்டால் அல்லது அதை டெலிவரி செய்பவர்கள் மூலமோ தொற்று ஏற்படலாம் என்கிற பயத்தில் பெரும்பாலானவர்கள் உணவகங்களை தவிர்த்து விடுகிறார்கள்.

அடுத்து பல அடுக்குமாடி குடியிருப்புகளில் குறிப்பாக குடியிருப்போர் நலச் சங்கத்தினர், வீட்டுப் பணிப்பெண்களை உள்ளே அனுமதிப்பதே இல்லை. அவர்கள் மூலம் கொரோனா வைரஸ் பரவிவிடுமோ என்கிற பயம்தான். உணவு சமைப்பது, வீட்டை

பசியுடன் பல மைல் தூரம் நடந்து சோர்வுற்றக் குழந்தை பெட்டி மீது தூங்கிக்கொண்டிருக்க அதை இழுத்துச்செல்லும் தாய்.

சுத்தப்படுத்துவது, துணி துவைப்பது என பெண்களுக்குத்தான் வேலை அதிகரித்துவிட்டது.

என் உறவுக்கார பெண் ஒருவர் குர்கானில் சொகுசான அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகிறார். வீட்டுவேலைக்கு ஆள் வர அனுமதியில்லை, பொருள்களை டெலிவரி செய்பவர்களுக்கும் அனுமதி இல்லை என்பதை மறந்துவிடுவோம். வீட்டிற்குள்ளேயே இருக்கும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவ்வப்போது ஏதாவது சாப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். என்னால் சமையல் அறையை விட்டு வெளியில் வரவே முடியவில்லை என்கிறார். சில சமயங்களில் ஆன்லைன் மூலம் உணவு ஆர்டர் செய்தால், கடும் வெயிலில் சுமார் 700 மீட்டர் தூரம் சென்று வாங்கி வரவேண்டியுள்ளது. மீண்டும் வீட்டிற்கு திரும்புவதற்கு குடியிருப்பு நலச் சங்கத்தின் கெடுபிடியால் கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

இதனால் என்ன மாற்றம் ஏற்பட்டுவிடப்போகிறது என்கிறீர்களா பல மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. நமக்கு பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் இன்னும் சிறிது காலத்துக்கு முகக்கவசத்தை அணிந்து கொண்டு தான் இருக்க வேண்டும். ஆன்லைன் மூலம் பொருள்களை விநியோகிக்கும் மைந்திரா போன்ற நிறுவனங்கள் பெண்களுக்காகவே வித விதமான முகக்கவசங்களை விற்பனை செய்ய தயாராக உள்ளது. அலுவலகங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கும்போது அங்கு சானிடைஸர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும். கைவிரல் ரேகை வருகைப் பதிவுக்கு பதிலாக முகத்தை ஸ்கேன் செய்து வருகையை பதிவு செய்யும் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும். நாம் உட்கார்ந்து வேலை செய்யும் இடத்திலும் பாதுகாப்புக்காக சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கும். ஊழியர்கள் வீட்டிலிருந்தபடியே தங்கள் வேலைகளை கவனிக்கலாம், குழந்தைகளை பள்ளிகளிலிருந்து அழைத்துவரலாம். குடும்பத்துடன் இரவு டின்னர் சாப்பிடலாம். ஆனால், பிரச்னை அதிகாரிகளுக்குத் தான் என்கிறது 'தி நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு கட்டுரை. அலுவலகம் என்றால் மேலதிகாரி நாம் என்ன செய்கிறோம் என்பதை அருகில் இருந்தபடியே கண்காணித்துக் கொண்டிருப்பார். அவரும் நம்மிடையே நேரில் பேசவும் வாய்ப்பிருக்கும். ஆனால், வீட்டிலிருந்தபடியே வேலையில் அது அவ்வளவு சாத்தியமில்லை. அவ்வப்போது வீடியோ கான்பரன்சிங் மூலம் பேசினாலும் நமது வேலைகளுக்கு இடையே அது இடைஞ்சலாக இருப்பதாக உணர்வோம். வீட்டிலிருந்தபடி வேலை என்றால் நாம் சக ஊழியர்களை கட்டித்தழுவுவதும், அதிகாரிகளுடன் கைகுலுக்குவதும் காணாமல் போய்விடும். ■

உங்கள் தாராள மனத்துக்கு நன்றி

நான் இந்தச் செய்தியை எழுதுகிற நேரத்தில், உலகம் Covid-19 நோய்ப்பரவலின் பிடியில் உள்ளது. செயலை விரும்பும் ரோட்டரி உறுப்பினர்கள் எந்தெந்த வழிகளில் இதைக் கட்டுப்படுத்த உதவியுள்ளார்கள், இன்னும் உதவப்போகிறார்கள் என்பதைப்பற்றியும், உங்களை ஆதரிப்பதற்கு அறக்கட்டளை என்ன செய்கிறது என்பதைப்பற்றியும் நான் இந்தப் பத்தியில் பேச விரும்புகிறேன்.

நோய்களை எதிர்ப்பது, நலனை முன்னிறுத்துவது ஆகியவற்றில் ரோட்டரி நெடுங்காலமாகவே நன்கு செயல்பட்டுவருகிறது. ரோட்டரியன்கள் கட்டமைக்க உதவியுள்ள இளம்பிள்ளைவாதத் தடுப்பு உள்கட்டமைப்பானது, புதிய கொரோனா வைரஸை எதிர்க்கப் பயன்படுகிறது, இன்னும் பல நலத் தேவைகளுக்கும் சேவையாற்றுகிறது. பல நாடுகளில், இளம்பிள்ளைவாதத் தடுப்புத் தன்னார்வலர்கள் Covid-19 பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

அறக்கட்டளையில், உங்கள் பணியை ஆதரிப்பதற்காக அறங்காவலர்கள் விரைவான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். நலப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு மருத்துவக் கருவிகளை வாங்குவது போன்ற உள்ளூர்ச் செயல்பாடுகளை ஆதரிப்பதற்காக, மாவட்ட நல்கை நிதிகளை நீங்கள் பயன்படுத்தலாம். இதற்குமுன் நீங்கள் திட்டமிட்ட செயல்பாடுகளை ஒரு Covid-19 எதிர்வினையாக நீங்கள் மறுபயன்பாடு செய்யலாம், அல்லது, மார்ச் 15ல் தொடங்கி நடைபெற்ற Covid-19 செயல்பாடுகளுக்கு உங்கள் மாவட்டத்தின் 2020-21 மாவட்ட நல்கையின்கீழ் நிதி பெறலாம்.

நம் அறக்கட்டளையின்மீது நீங்கள் காட்டியுள்ள தாராள மனப்பான்மையால், அறங்காவலர்களால் பல மில்லியன் டாலர்களைப் பேரிடர் எதிர்வினை நிதிக்காக விரைவில் அங்கீகரிக்க இயன்றது, அதன்மூலம், Covid-19 மீட்பு முயற்சிகளுடன் தொடர்புடைய சங்க மற்றும் மாவட்டத் திட்டங்களுக்காகப் பல பேரிடர் உதவி நல்கைகளை உடனே கிடைக்கச்செய்ய இயன்றது.

நீங்கள் நம் அறக்கட்டளைக்கு ஓர் ஆண்டு நிறைவுப் பங்களிப்பை இன்னும் வழங்கவில்லை யென்றால், தயவுசெய்து, உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள். உங்களுடைய இந்தப் பரிசு, முன்பு எப்போதையும்விட இப்போது கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.



கேரி ஹுவாங்
TRF அறங்காவலர் தலைவர்

பேரிடர் எதிர்வினை நல்கைகள்: நோய்ப்பரவல் சவால்களைச் சமாளிப்பதற்கான ஓர் உயிர்காப்பான்

நண்பர்களே,

உலகெங்கும் பல நாடுகள் கொரோனாவைரஸை எதிர்கொள்ளவும், அதன் பரவலைக் கட்டுப்படுத்தவும் பழகிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இந்த நோய்ப்பரவல் வாழ்க்கையின் தன்மையையே மாற்றிவிட்டது, குறிப்பாக, முன்னணியில் இருக்கும் மருத்துவ வல்லுனர்கள், அன்றாடக் கூலிப் பணியாளர்கள், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் பெரும் நெருக்கடியைச் சந்திக்கிறார்கள். பல குடும்பங்கள் தங்களுடைய பொருட்களையெல்லாம் முதுகில் கட்டிக்கொண்டு, குழந்தைகளை பல கிலோ மீட்டர் பாதயாத்திரை செல்லும் காட்சிகள் மனத்தை நொறுக்குகின்றன.

TRF தன்னால் இயன்ற அனைத்து வகைகளிலும் மக்களுக்கு உதவத் தீர்மானித்துள்ளது. நோய்ப்பரவல் அறிவிக்கப்பட்டவுடனேயே, அறங்காவலர்கள் செயலில் இறங்கினார்கள்: பன்னாட்டு நல்கைகளின் நிதியளித்தலில் 30 சதவிகிதம், அத்திட்டம் நிகழ்கிற நாட்டுக்கு வெளியிலிருந்து வரவேண்டும் என்கிற தேவையிலிருந்து Covid-தொடர்பான பன்னாட்டு நல்கைகளுக்கு விதிவிலக்கு வழங்குவது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அத்துடன், உள்ளூர்ப் பேரிடர்களுக்கு எதிர்வினையாற்றுவதற்கான ஒரு விரைவான மற்றும் செயல்திறன் மிக்க வழியை ரோட்டரியின் பேரிடர் எதிர்வினை நல்கைகள் (DRG) வழங்குகின்றன. Covid பணிக்காக, மாவட்டங்கள் $25,000 வரையிலான ஒரு DRGக்கு (மாவட்டத்துக்கு 1 மட்டும்) விண்ணப்பிக்கலாம் என்று அறங்காவலர்கள் தீர்மானித்தார்கள், உலக நிதியிலிருந்து DRGக்கு மொத்தம் $3 மில்லியனை மாற்றினார்கள். இந்த DRGகளும் GGகளும், சமைத்த உணவுகள், PPEகள், முகக் கவசங்கள், தூய்மைப்படுத்திகள், செயற்கை மூச்சுவிடல் கருவிகள், மருத்துவமனைப் படுக்கைகள், பிரான்சோஸ்கோப்கள், பரிசோதனைப் பொதிகள் போன்றவற்றை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மே 19ல், GGக்கள் மற்றும் DRGக்கள் ஆகிய இரண்டு வகைகளிலும் உலக அளவில் $19.1 மில்லியனை (சுமார் ரூ.143 கோடி) அனுமதித்துள்ளது TRF. குறிப்பாக, இந்தியாவில் இந்தத் தொகை $5.36 மில்லியனாகும் (கிட்டத்தட்ட ரூ.40 கோடி). இவை அனைத்தும், எட்டே வாரங்களில் நடைபெற்றுள்ளன. அறக்கட்டளையானது தேவையுள்ளவர்களுக்குத் தொடர்ந்து உதவவேண்டுமென்றால், உங்களுடைய ஆதரவு தேவை.



குலாம் வாஹன்வதி
TRF அறங்காவலர்

“மா மனிதர்” ஃப்ராங்க் டெவ்லின்!

ரஷீதா பகத்

ரோட்டரியின் முன்னாள் தலைவர் பிராங்க் டெவ்லின் கணையப்புற்று நோயால் பாதிக்கப்பட்டு கடந்த மே 27-ல் தமது 81-வது வயதில் காலமானார். மறைந்த அந்த தலைவருக்கு ரோட்டரி உலகமே அஞ்சலி செலுத்தியது. சமூக வலைத் தளங்களில் மிகவும் ஆர்வம் கொண்ட P K ஆச்சார்யா உடனடியாக இதற்கென ஒரு வாட்ஸ் ஆப் குழுவை உருவாக்கியதால் அடுத்த சில நிமிடங்களில் ஃப்ராங்குக்கு அஞ்சலி குவிந்தது.

மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக RI தலைவர்களான ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி இருவரிடமும் அவர்களது நினைவலைகளை எழுதித்தருமாறு நான் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் PRIP ரே கிளிங்கின்ஸ்மித்தின் அஞ்சலியை PRIP K R ரவீந்திரன் என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

அப்போது சில சுவாரஸ்யமான தகவல்கள் எனக்கு கிடைத்தது. ஃப்ராங்க் டெவ்லின் மெக்ஸிகோ ரோட்டரி பத்திரிகை ஆசிரியராக இருந்துள்ளார். 1984-85ல் RI இயக்குனராக ஆக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டபோது பத்திரிகை ஆசிரியர் பணி அவருக்குப் பதற்றம் நிறைந்ததாக இருந்தது. ஒரு சம்பவத்தை கிளிங்கின்ஸ்மித் நினைவுகூர்ந்தார். 1985 மே மாதம் முதல்முறையாக ரோட்டரி நிர்வாகக்குழு கூட்டத்தில் பங்கேற்ற போது நான் பின்வரிசையில் இருந்தேன். போலியோ பிளஸ் பிரசாரத்திற்காக 3 ஆண்டுகளில் 120 மில்லியன் டாலர் நிதி திரட்ட முறையான ஒப்புதல் கூட்டத்தில் பெறப்பட்டது. ஓராண்டு உழைப்புக்குப்பின் நிர்வாகக் குழு கூட்டத்தில் இதற்கான திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் முக்கியமான அம்சம் என்னவெனில் 1984-85 ஆம் ஆண்டுக்கு ரோட்டரி இயக்குநராக பிராங்க் டெவ்லின் தேர்ந்தெடுக்கப் பட்டது தான். அவரது வெற்றியை எதிர்த்து, எதிர் வேட்பாளர் புகார் தெரிவித்தார். இந்த

ஃப்ராங் டெவ்லின் PRIP லூயி கியேய் (இடது) மற்றும் PRIP K R ரவீந்திரன் அவர்களுடன்.

விவகாரம் நிர்வாகக்குழு கவனத்துக்கு வந்தபோது ஒருசிலர் ஃப்ராங்கை நேரில் வரவழைத்து அவரிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்றனர். இதையடுத்து பிராங்க் டெவ்லின் வரவழைக்கப்பட்டார். விசாரணையில் அவர், பிரசார விதிகளை மீறவில்லை என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து 1986-ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதி ரோட்டரி இயக்குநராக பதவியேற்றார்.

பின்னர் பிரசாரத்துக் கான துணை விதிகளை தெளிவுபடுத்த ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழுவுக்கு சுக் கெல்லர் தலைமைவகித்தார். வழக்குரைஞர்களான PDG-க்கள் இருவர் குழு உறுப்பினர்களாக இருந்தனர். இந்தக்குழுவின் இயக்குநராகவும், பொறுப்பாளராகவும் நான் இருந்தேன். நான் கவனித்த அளவில் குழுவின் பணி மிகச் சிறப்பாக இருந்தது. பிரசார விதிகள் தெளிவாக வரையறுக்கப் பட்டன. பிரசார திருத்த விதிகள் 1986-இல் அங்கீகரிக்கப்பட்டது. இப்படி தேர்தல், பிரசாரம், வாக்கு சேகரிப்பு போன்ற விதிமுறைகளை தெளிவாக உருவாக்க ஃப்ராங் டெவ்லின் தான் உதவினார் என்றார்.

RI தலைவர் மார்க் மலோனி தனது அஞ்சலி செய்தியில், ஃப்ராங்க் ரோட்டரியில் சிறந்த தலைவராக இருந்தார். அவரின் அரவணைப்புகள், உத்வேகம் நிறைந்த பேச்சுக் கள், அர்ப்பணிப்பு நிறைந்த சேவைகள் மறக்க முடியாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஃப்ராங்க் தனது 8வது வயதில் மெக்ஸிகோவில் தனது இருப்பிடத்துக்கு அருகில் வடக்குப்பகுதிகளான எல்பாஸோ, டெக்ஸாஸ் நகரங்களுக்குச் சென்று மார்ஸ், ஸ்னிக்கர்ஸ் போன்ற சாக்லேட்டுகளை வாங்கி வந்து விற்றுவந்தார். இளம் வயதிலேயே வளர்ச்சிகண்ட அவர், விரைவிலேயே ஒரு கண்ணாடிக் கடையின் உரிமையாளர் ஆனார். ஒரு கட்டத்தில் டெவ்லின் அறக் கட்டளையை நிறுவி அதன் மூலம் 10 லட்சம் மெக்ஸிகோ மக்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை வழங்கியுள்ளார்.

உலகம் முழுவதும் உள்ள ரோட்டேரியன்கள் அவரை ஒரு அன்பான, நட்புறவான, கருணையுள்ள மனிதராகவே அவரை நினைவுகொள்கின்றனர். டெவ்லினுக்கு மனைவி குளோரியா ரீட்டா மற்றும் மெலனி, ஸ்டீபனி, ஜெனிஃபர் என்று மூன்று மகள்களும் உள்ளனர்.

டெவ்லினுடனான தனது சந்திப்பை நினைவு கூர்ந்தார் RIPN சேகர் மேத்தா. ஃப்ராங்க் மறைவு ரோட்டரிக்கும், எனக்கும் மிகப்பெரிய இழப்பாகும். கடந்த ஜனவரி மாதம் சாண்டியாகோவில் ஃப்ராங்க மற்றும் குளோரியாவை சந்தித்தபோது பல விஷயங்களைப் பரிமாறிக் கொண்டோம். இரண்டு முறை எனது அலுவலகத்துக்கு வந்து மெக்ஸிகோவுக்கான செயல்திட்டங்கள் குறித்து என்னிடம் விவாதித்து மறக்கமுடியாதது.

நான் DG ஆக இருந்தபோதும் அவர் ரோட்டரி அறக்கட்டளை டிரஸ்டியாக இருந்தபோதும் எங்களது மாவட்டத்துக்கு வந்துள்ளார். நாங்களும் மெக்ஸிகோவில் உள்ள அவரது இல்லத்துக்கும் பிராங்க் அருங்காட்சியகத் துக்கும் சென்று வந்தோம். நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் ஃப்ராங்க் அவரது மறைவு ரோட்டரிக்கு பேரிழப்பாகும் என்றார் மேத்தா.

நான் பார்த்த தலைவர் களிலேயே ஃப்ராங்க் மிக உயர்ந்தவர். ஆளுமை நிறைந்தவர். சிறந்த தொழிலதிபர். அவர் நிறுவிய டெவ்லின் ஆப்டிகல்ஸ் குழுமம் தென்னாப்பிரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் 700-க்கும் மேலான இடங்களில் செயல்பட்டு வருகிறது.

விசிட்டிங் கார்டுகளை சேகரிப்பதில் ஃப்ராங்குக்கு அலாதி பிரியம் உண்டு. லட்சக்கணக்கான விசிட்டிங் கார்டுகள் அவரிடம் இருந்ததாக நான் கேள்விப்பட்டிருக் கிறேன். நானே எனது விசிட்டிங் கார்டை பலமுறை

டெவ்லின் அன்பானவர், நட்புறவு கொண்டவர், எல்லாவற்றுக்கும் மேலாக மனிதநேயம் மிக்கவர்

PRIP K R *ரவீந்திரன்.*

அவருக்கு கொடுத்துள்ளேன். ரோட்டரி மாநாடுகளில் யார் அதிகம் கலந்துகொண்டது என்பது குறித்து பிராங்குக்கும் ஆர்ஜென்டினாவின் முன்னாள் ரோட்டரி தலைவர் லூயிஸ் கியேவுக்கும் அடிக்கடி விவாதம் எழும். ஹாம்பர்க் மாநாட்டுக்கு முன்பு அவர் ஏறக்குறைய 45 மாநாடுகளில் பங்கேற்றிருக்கிறார். டெவ்லின் அன்பானவர், நட்புறவு கொண்டவர், எல்லாவற்றுக்கும் மேலாக மனிதநேயம் மிக்கவர் என்று மறைந்த தலைவருக்கு அஞ்சலி தெரிவித்தார் PRIP K R ரவீந்திரன்.

TRF தலைவர் குலாம் வாஹன்வதி தனது இரங்கலில், ஃப்ராங்க் ரோட்டரி அறக்கட்டளைத் தலைவராக இருந்த போது நான் RRFC ஆக இருந்தேன். எப்போதும் யாருக்காவது ஏதாவது உதவி செய்துகொண்டே இருப்பார் ஃப்ராங்க். அவரும், குளோரியா ரீட்டாவும் பிரபலமான ஜோடி. மிகச் சிறந்த தலைவர் ஒருவரை ரோட்டரி இழந்துவிட்டது. இந்த துயரமான நேரத்தில் அவரது இழப்பை தாங்கிக்கொள்ளும் மனோபலத்தை அவரின் குடும்பத்தாருக்கு தருமாறு இறைவனிடம் பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

ரோட்டரி தலைமையகம் அமைய காரணமாக இருந்தவர்.

சிகாகோவில், ஈவான்ஸ்டன் நகரில் ரோட்டரி தலைமையகம் அமையக் காரணமாக இருந்தவர் பிராங்க் டெவ்லின். இதை PRIP *ரே கிளிங்கின்ஸ்மித் விரிவாகக் கூறுகிறார். ரோட்டரி நிர்வாகக்குழுவில் பிராங்க் இடம்பெற்றதிலிருந்தே அதன் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்திவந்தார். அப்போது நான்* (1986-87) *இரண்டாவது ஆண்டாக நிர்வாகக்குழு தலைவராக இருந்தேன்.*

ரோட்டரி தலைமையகம் ஈவான்ஸ்டன், ரிட்ஜ் அவென்யூவில் ஒரு சிறிய கட்டடத்தில் இருந்தது. அதற்கு அருகிலேயே மற்றொரு கட்டடம் கட்ட நினைத் திருந்தோம். ஆனால், புதிய கட்டடம் கட்டுவதில் சில சிக்கல்கள் இருப்பதாகவும், மேலும் அதற்கு அதிகம் செலவாகும் எனக்கூறி ஷெர்மன் அவென்யூவில் ஒரு காலி இடம் இருப்பதாக பிராங்க் கூறினார். அது 18 *மாடி கட்டடம். ரோட்டரிக்குத் தேவையான இடத்தைவிட கூடுதல் பரப்பளவு கொண்டது. அதன் விற்பனை விலையும்* 22.5 *மில்லியன் டாலர். அந்த இடத்தை விட்டுவிடக்கூடாது என்பதில் பிராங்க் உறுதியாக இருந்தார். விலை அதிகமானாலும் நமக்குத் தேவையான இடத்தை வைத்துக்கொண்டு மற்ற இடத்தை வாடகைக்கு விட்டுவிடலாம் என்று முடிவு செய்தோம். அதற்கு ரோட்டரி நிர்வாகக் குழுவின் ஒப்புதலும் கிடைத்தது. இன்று ரோட்டரி தலைமையகம் உயர்ந்து நிற்கிறது என்றால் அதற்கு பிராங்க்தான் முக்கிய காரணம் என்றார் கிளிங்கின்ஸ்மித்.*

சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி (இடது) PRIP *ஃப்ராங் டெவ்லினுடன்.*

ஃப்ராங்க் டெவ்லின் RI தலைவராக இருந்தபோது RID 3000 மாவட்ட ஆளுநராக இருந்தவர் C பாஸ்கர். அவர் கூறுகிறார், நான் அவருடன் பணியாற்றி இருக்கிறேன். எங்களுக் கெல்லாம் ஊக்கசக்தியாக திகழ்நதவர் ஃப்ராங்க். அவரது ஆற்றல் மிகுந்த பேச்சுக்களும், சமூகத்தில் அவர் ஆற்றிய பணிகளையும் என்றென்றும் மறக்கமுடியாதது. நாடு முழுவதும் உள்ள ரோட்டரியினர், குறிப்பாக இந்திய ரோட்டரியினர் அவரைப் போலவே செயல்பட்டால் மேன்மேலும் சாதனைகள் புரிய முடியும். பிராங்க் மற்றும் அவருடைய மனைவி குளோரியாவுடனும் நான் நடத்திய உரையாடலை அவ்வப்போது அசைபோடுவேன். ஃப்ராங்கின் மறைவு இந்திய ரோட்டரியினருக்கு மட்டுமல்ல, ரோட்டரி உலகத்துக்கே ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என்றார்.■

ஆர்ச் க்ளம்ஃப் சமூகம்: மிகுதியாகும் நல்லவை

ரோட்டரி அறக்கட்டளையின் தந்தையாகக் கருதப்படுகிறவருடைய பெயரைக் கொண்ட ஆர்ச் க்ளம்ஃப் சமூகம், ரோட்டரியின் மிகப்பெரிய நிலை நன்கொடையாளர்களை, அதாவது, அறக்கட்டளைக்கு $250,000 அல்லது அதற்குமேல் வழங்கியுள்ளவர்களைப் பெருமைப்படுத்துகிறது.

கேரி ஹூவாங், ஆர்ச் க்ளம்ஃப் சமூகத்தை மிக முக்கியமானதாகக் கருதியதால், 2019-20ல் அவர் TRFன் அறங்காவலர்கள் தலைவராகச் செயல்பட்டபோது, இந்தச் சமூகத்தில் முன்பைவிடக் கூடுதலான, மிகப்பெரிய கவனத்தைச் செலுத்தினார்.

ஜூலை 2019லிருந்து மார்ச் 2020க்குள் இந்தச் சமூகம் 95 புதிய உறுப்பினர்களை வரவேற்றது, முந்தைய ரோட்டரி ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, இது 25 சதவிகிதம் கூடுதலாகும், அத்துடன், ஒட்டுமொத்த 2018-19ன் கூட்டுத்தொகையைவிடவும் கூடுதலாகும்.

அறக்கட்டளைக்கு வழங்கப்படும் அனைத்து நன்கொடைகளைப்போலவே, AKSக்கு வழங்கப்படும் பரிசுகளும் COVID-19போன்ற நோய்களை எதிர்த்துப் போரிட உதவுகின்றன. அவை தூய்மையான குடிநீரையும் வழங்குகின்றன, தாய்மார்கள், குழந்தைகளுடைய உயிர்களைக் காக்கின்றன, கல்வியை ஆதரிக்கின்றன, உள்ளூர்ப் பொருளாதாரம் வளர உதவுகின்றன. ரோட்டரி அறக்கட்டளையைப்பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கான இணையத்தளம்: rotary.org/foundation.

அக்டோபர் 2019ல் இவான்ஸ்டனிலுள்ள ரோட்டரி தலைமையகத்தில் தாய்வானைச் சேர்ந்த ஒன்பது AKSதம்பதியினர் (மேலே) மற்றும் 30 AKS தம்பதியினர் கௌரவிக்கப்பட்டனர்.



‘நெஞ்சில் நிறைந்தவர்’ ஃப்ராங்க் டெவ்லின்

கல்யாண் பானர்ஜி

ரோட்டரியில் எனக்குப் பிடித்த நபர்களில் ஃப்ராங்க் டெவ்லினும் ஒருவர். ரோட்டரிக்கு ஏற்ற மனிதர் அவர். 6 அடிக்கு மேல் உயரமும், மெல்லிய உடலமைப்பும், கம்பீரமான குரலும் கொண்ட அழகான மனிதர். எந்த ஒரு கூட்டமானாலும் தவறாமல் கலந்துகொள்வார். அவர் இருக்கும் இடத்தினருகே யாராவது நின்றுகொண்டிருந்தால் வலியவந்து வாழ்த்துச் சொல்லி கட்டியணைத்துக் கொள்வார். அவரது அரவணைப்பு அன்றைய நாள் முழுவதும் நம்முள் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

ஃப்ராங்க் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்பதை என்னால் நம்பமுடியவே இல்லை. இறைவன் அவரை அழைத்துக்கொண்டு விட்டார். இனி வழக்கமான வாழ்த்தும் அரவணைப்பும் இருக்காது.

அவரைப் பற்றிய நினைவுகளை எழுத உட்கார்ந்தபோது எங்கே தொடங்குவது? சரி இப்படிச் சொல்கிறேன். 1939-ஆம் ஆண்டு பிறந்த ஃப்ராங்க் டெவ்லினை ரோட்டரிக்கு அழைத்துவந்தவர் போலியோ பிளஸ் தந்தை என்று அழைக்கப்படும் கார்லோஸ் கான்ஸெகோதான். அவர்தான் அவருக்கு வழிகாட்டி. 1977-78ல் ஃப்ராங்க், மெக்ஸிகோவில் ரோட்டரி மாவட்டம் 4170ன் மாவட்ட ஆளுநரானார். அடுத்தடுத்து வேகமாக உயர்ந்து 1986-88ல் ரோட்டரி இயக்குநரானார். 1996-98-ல் ரோட்டரி அறக்கட்டளை டிரஸ்டியாக நியமிக்கப்பட்டதுடன் 2000-01ம் ஆண்டிலேயே RI தலைவர் என்ற நிலையை எட்டினார்.

ஃப்ராங்க் ரோட்டரியை மிகவும் நேசித்து, அதற்காகவே தனது பெரும்பாலான நேரத்தை செலவிட்டார் என்றாலும் தொலைநோக்குப் பார்வையுடனும் கடுமையான உழைப்பாலும் தனது தொழிலையும் வளர்த்து வந்தார். இன்னும் சொல்லப் போனால் மற்றவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதுதான் அவரது தொழில். அதாவது டெவ்லின் ஆப்டிகல் குழுமத்தை ஏற்படுத்தி, கண்கண்ணாடிகள், பிரேம்கள், கான்டாக்ட் லென்சுகள் என ஆப்டிகல் துறையில் என்ன தேவையோ அவற்றை தயாரித்து விற்றுவந்தார். அவரது ரோட்டரி பணிகளுக்கு இடையிலும் தொழில் வளர்ச்சியடைந்து வந்தது. கண்கள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 10 லட்சம் பேருக்கு இலவசமாக கண் கண்ணாடிகளை இலவசமாக வழங்கி சாதனை படைத்தார். இப்படி தனது அருஞ்செயல்கள் மூலம் மெக்ஸிகோ நகரின் மிகப்பெரும் கொடையாளியாக அவர் உருவானார். அவரது ஆப்டிகல் தொழிலும் கிடுகிடுவென் வளர்ந்து உலகின் மிகப்பெரிய ஸ்தாபனமாக உயர்ந்தது.

அமெரிக்காவில் RI குழு கூட்டத்தில் பங்கேற்க சென்றபோது நான் ஒருநாள் அவருடன் இருக்க நேர்ந்தது. அப்போது அவருக்கு ஈவான்ஸ்டன் நியமனக்குழுவிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. தொலைபேசியில் பேசியவர் ஒரு தகவலைச் சொன்னதும், நன்றி. நான் சேவை செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்று பதிலளித்து விட்டு தொலைபேசியை துண்டித்து விட்டார். நான் ஆர்வம் மிகுதியால், ஃப்ராங்க், அப்படியென்ன செய்தி என்று கேட்டேன். அதற்கு ஃப்ராங்க், 2000-01ம் ஆண்டுக்கு என்னை ரோட்டரி தலைவராக தேர்ந்தெடுத்திருக்கிறார்களாம் என்றார். அப்படியானால் அது மகிழ்ச்சியான செய்திதானே என்று அவரிடம் கேட்டேன். அதற்கு ஃப்ராங்க், மகிழ்ச்சியான செய்திதான். ஆனால், இவ்வளவு சீக்கிரம் அந்தப் பதவி எனக்கு கிடைக்கும்

கண்கள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 10 லட்சம் பேருக்கு இலவசமாக கண் கண்ணாடிகளை இலவசமாக வழங்கி சாதனை படைத்தார்.

என்று எதிர்பார்க்கவில்லை என்று பதிலளித்தார்.

ஃப்ராங்க் தனது பதவிக்காலத்தில் விழித்திரு செயல்படு என்பதையே தனது கொள்கையாக ஏற்று செயல்பட்டு வந்தார். ரோட்டரி தலைவராக ஃப்ராங்க் பொறுப்பேற்றதற்கு முன்னரும், பின்னரும் ஃப்ராங்க் டெவ்லின் தனது மனைவி குளோரியாவுடன் பலமுறை இந்தியாவுக்கு வந்து மாவட்ட மாநாட்டில் பிரதிநிதியாக கலந்து கொண்டிருக்கிறார். மெக்ஸிகோ நாட்டவர் என்றாலும் ஃப்ராங்க் இந்திய உணவுகளை விரும்பி சுவைத்துச் சாப்பிடுவார்.

இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் மீது ஃப்ராங்க், தனி அக்கறை செலுத்தினார். ரோட்டரியில் மகளிர் அதிக அளவில் இடம்பெற வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியதுடன் அல்லாமல் மகளிர் தலைமைப்பதவிக்கு வருவதையும் ஆதரித்தார்.

2002லிருந்து 2005ம் ஆண்டு வரை ரோட்டரி அறக்கட்டளை டிரஸ்டியாகவும், 2005-06ல் அதன் தலைவராகவும் ஃப்ராங்க் பதவிவகித்தார். ரோட்டரி மேடைகளில் பேசும் முக்கியமான நபர்களில் அவரும் ஒருவராக இடம்பெற்றிருந்தார். ஐந்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.

இப்படி புகழின் உச்சியில் அவர் இருந்து வந்தாலும் ஒரு சாதாரண மனிதரைப் போலவே எல்லோரிடமும் பழகிவந்தார். தம்மை சந்திக்க வருபவர்களிடம் விசிட்டிங் கார்டுகள் கேட்டு சேகரித்துவைப்பார். எப்போதும் எவரையும் பெயர் சொல்லியே அழைப்பார். யாராவது அவரை சந்திக்கச் சென்றால், கழுத்துப் பட்டையில் (டை) அணிவதற்கான கிளிப்பை வழங்குவார் அல்லது பிளாஸ்டிக்கால் ஆன மூக்குக்கண்ணாடி மாதிரியைக் கொடுப்பார். ரோட்டரியின் 46 மாநாடுகளில் தாம் பங்கேற்றதை வெளிப்படுத்தும் வகையில் அதற்கான பேட்ஜுகளை அணிந்திருப்பார்.



PRIP *ஃப்ராங்க் டெவ்லினுடன்* PRIP *கல்யாண் பானர்ஜீ*

ரோட்டரியில் மகளிர் அதிக அளவில் இடம்பெற வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியதுடன் அல்லாமல் மகளிர் தலைமைப்பதவிக்கு வருவதையும் ஆதரித்தார்.

ஃப்ராங்க் டெவ்லின் ரோட்டரி வாழ்வில் அழியாத அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார். அவரது நினைவுகள் எல்லோருடைய மனதிலும் இருந்துகொண்டே இருக்கும்.

ரோட்டரிக்கு என அமெரிக்காவில் 1600 ரிட்ஜ் அவென்யூல் தலைமையகம் இருந்தது. அந்த இடம் சிறியதாக இருந்ததால் அருகில் உள்ள ஈவான்ஸ்டனிலேயே 18 மாடி கட்டடத்தை வாங்க ஃப்ராங்க் உதவிபுரிந்தார். முதலில் அந்த இடத்தின் விலையைப் பார்த்தபோது மலைப்பாக இருந்தது. 18 மாடிக் கட்டடம் நமக்குத் தேவைதானா என்ற கேள்வி பலரின் மனதிலும் எழுந்தது. ஆனால், ஃப்ராங்க் பிடிவாதமாக அதை விலைபேசி வாங்கினார். 18 மாடிக் கட்டடத்தில் நமக்குத் தேவையான இடத்தை வைத்துக்கொண்டு மீதியை வாடகைவிட்டுவிடலாமே என்றார். ரோட்டரியின் தேவையை அறிந்து அவர் செயல்பட்டு வந்தார்.

ஃப்ராங்க், நீங்கள் எல்லோருடைய நெஞ்சிலும் நிறைந்திருப்பீர்கள். சொர்க்கத்திலும் உங்கள் புன்னகை மூலம் ஒளியேற்றுங்கள் என்று சொல்லி ரோட்டரி உலகமே அவருக்கு அஞ்சலி செலுத்துகிறது.■

உயர்ந்த நாயகர் ஃப்ராங்க்

ராஜேந்திர சாபூ

ஃப்ராங்க் டெவ்லின் ஓர் உயரமான மனிதர், நாங்கள் சந்திக்கும்போதெல்லாம் என்னை மிக அன்போடு அணைத்துக்கொண்டு, என் தலைவரே, அப்ராஜோ என்பார். அவருடன் ஒப்பிடும்போது, என் உயரம் மிகக் குறைவு. ஆகவே, அவர் என்னை அணைக்கும்போது, என் தலை அவருடைய நெஞ்சுக்குதான் செல்லும். அப்போது நான் சொல்வேன், என் நண்பரே, உங்கள் இதயம் என் மனத்தைச் சந்திக்கிறது.

ஃப்ராங்குடனான என்னுடைய ரோட்டரிப் பயணம் மே, 1978ல் போகா ராடன், ஃப்ளோரிடா, க்குல் தொடங்கியது. அங்கு அவர் உள்வரும் மாவட்ட ஆளுநராக இருந்தார், நான் பன்னாட்டுக் குழுத் தலைவராக இருந்தேன் (இப்போது அந்தப் பொறுப்பு பன்னாட்டு விவாதத் தலைவர் என்று அறியப்படுகிறது). 1983ல் நாங்கள் உடன்பயணம் செய்வோராக ஆனோம், அப்போது RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த டாக்டர் கார்லோஸ் கொன்செகோ அவரை என்னிடம் இவ்வாறு அறிமுகப்படுத்தினார், ராஜா, ஃப்ராங்க் மிகச்சிறந்த உயரங்களை எட்டுவதை நீங்கள் காண்பீர்கள்.

அவர் தொலை நோக்குடன் சொன்னது போலவே, ரோட்டரியிலும் சரி, தன்னுடைய தொழிலிலும் சரி, ஃப்ராங்க் மிகச்சிறந்த உயரங்களை எட்டினார். அவருடைய உயரமான உருவத்துக்குள் யாராலும் வெல்லமுடியாத மனநிலை நிறைந்திருந்தது, வெற்றியைப் படிப்படியாக எட்டினார்.

1986-87ல் தலைவராக இருந்த PRIP MAT காபராஸ் தொடங்கிய ரோட்டரி கிராமப் படைகள் (RVC) திட்டத்திற்கு ஃப்ராங்கும் நானும் எங்களை அர்ப்பணித்துக்கொண்டோம், நான் குழுவின் தலைவர் ஆனேன். அடுத்த ஆண்டு, நான் தலைவராகத் தொடர்ந்தேன், குழுவின் RI இணைப்பு இயக்குநரானார் ஃப்ராங்க். ஆசியா, தென் அமெரிக்காவில் அது மிகவும் புகழ் பெற்றது, ஆனால், வளர்ந்த நாடுகளில் புகழ் பெறவில்லை. உள்வரும் RI தலைவர்கள் இந்தத் திட்டத்தை அவ்வளவாக விரும்பவில்லை, இது கைவிடப்படும் என்று முணுமுணுக்கப்பட்டது.

ஆனால், அந்த நேரத்தில் 1989 CoL வந்தது, அதில் ஃப்ராங்க், நான் இருவரும் வாக்களிக்கும் பிரதிநிதிகளாக இருந்தோம். சங்கத்தில் வருகைக்கான நன்மதிப்பைக் கையாள்கிற சட்டமொன்று முன்வைக்கப்பட்டது. ஃப்ராங்க் அதைக் கையிலெடுத்துக்கொண்டார், எழுந்து நின்று, ஒரு திருத்தத்தை முன்வைத்தார், "RVC கூட்டமொன்றில் கலந்துகொள்கிற ரோட்டரியன்களுக்கு, ரோடராக்ட் சந்திப்பில் கலந்து கொள்வதைப்போன்ற அதே வருகை நன்மதிப்பு வழங்கப்படும்." அந்தத் திருத்தம் பெரிய எதிர்ப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட்டது. இந்த நல்ல சிந்தனையுடன், RVC ரோட்டரியின் அமைப்புச்சட்ட ஆவணத்தின் ஒரு பகுதியாகின, இப்போது அந்தத் திட்டத்தை யாரும் தொடமாட்டார்கள், நீக்கமாட்டார்கள். அதுதான் ஃப்ராங்க்.

மே 1989ல், ரோட்டரி சந்திப்பில் கலந்து கொள்வதற்காக ஃப்ராங்க், க்ளோரியா ரீடாவும் உஷா, நானும் வெவ்வேறு விமானநிலையங்களில் சியோல் விமான நிலையத்துக்கு வந்தபோது, ஒரு நகைச்சுவையான நிகழ்ச்சி நடைபெற்றது. ரோட்டரியன்களை இன்டர்கான்டினென்டல் விடுதிக்கு அழைத்துச் செல்ல ஒரு பொதுப் பேருந்து இருந்தது. நாங்கள் பேருந்தில் ஏறினோம், நால்வரும் கடைசி வரிசையில் அமர்ந்திருந்தோம். திடீரென்று, ஃப்ராங்க் எழுந்து நின்று அறிவித்தார், இந்தப் பேருந்தில் ரோட்டரி இன்டர்நேஷனலின் அடுத்த தலைவர் உள்ளார்.

PRIP *ராஜேந்திர சாபூ மற்றும்* PRIP *ஃப்ராங்க் டெவ்லின்.*

எல்லாரும் சுற்றுமுற்றும் பார்க்கத் தொடங்கினார்கள், அவர் தொடர்ந்து கூறினார், அவர், ராஜா சாபூ.''

எல்லாரும் கை தட்டினார்கள். ஆனால், எனக்கு அப்படி ஓர் எண்ணமே இல்லை.

அன்றைய வழக்கத்தின்படி, RI தலைவருக்கான அடுத்த பரிந்துரைக்குழுவிலிருந்து வரவேண்டும், ஆனால், என்ன அதிசயம்! வெறும் ஐந்தே மாதங்கள் கழித்து, அக்டோபர் 1989ல் பரிந்துரைக் குழு என்னை 1991-92 RI தலைவராகத் தேர்ந்தெடுத்தது. ஃப்ராங்க் சோதிடரா என்ன?

1988-89ல், ஃப்ராங்க் இயக்குநராகப் பணியாற்றியபிறகு, பன்னாட்டு RVC குழுவின் தலைவராக இருந்தார், கல்யாண் பேனர்ஜீ அதன் துணைத்தலைவராக இருந்தார். ஃப்ராங்க் மற்றும் அவருடைய செயல்பாட்டால், RVC, RIயின் ஒரு நிரந்தரத் திட்டமாக ஆனது, இப்போதும் அது ரோட்டரி சமூகப் படைகள் (Rotary Community Corps) என்ற பெயரில் தொடர்கிறது.

1986ல் தொடங்கி, போலியோப்ளஸ்ஸுக்கு ஃப்ராங்க் வழங்கிய அர்ப்பணிப்புணர்வு முழுமையானது, இப்போதும் அவர் அதில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறார். 1991-92ல் TRFன் 75வது ஆண்டுவிழாவின்போது, MAT காபராஸ் அறங்காவலர் தலைவராக இருந்தார், நான் RI தலைவராக இருந்தேன், அதைக் கொண்டாடுவதற்காக நாங்கள் ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்தோம், அதில் ஃப்ராங்க் உறுப்பினராக இருந்தார்.

ஃப்ராங்க் மிக விரைவாக RI தலைவர் என்கிற உயர்நிலைக்கு வளர்ந்தார், ஆனால், அந்த வளர்ச்சியின்போதோ, அதன் பிறகோ, அவர் மக்களைவிட்டு விலகவே இல்லை, எப்போதும் ரோட்டரியன்களைச் சந்திப்பார், சந்திப்பு அட்டைகளைப் பரிமாறிக்கொள்வார், 700-800 பங்கேற்பாளர்களைக் கொண்ட சந்திப்புகளில் தன்னுடைய வகுப்பின் மறுசந்திப்புகளை நடத்துவார். அவருடைய கதவுகள் அனைவருக்கும் திறந்திருக்கும், அனைவரையும்

PRIP ராஜேந்திர சாபூ, குளோரியா ரீட்டா மற்றும் PRIP ஃப்ராங்க் டெவ்லின்.

ஹோலா என்று மகிழ்ச்சியுடன் வரவேற்பார் உண்மையில் அவர் தன்னுடைய இதயத்தின் மொழியைப் பேசியவர்.

அவருக்கு இந்தியா மிகவும் பிடிக்கும். 1980களின் பிற்பகுதியில், தன் மகள் மெலனியுடன் சண்டிகருக்கு வந்தார்; பல கருத்தரங்குகள், சந்திப்புகளில் கலந்துகொண்டார்.

RI தலைவராகவும் அவர் இந்தியாவுக்கு வந்தார், 2000ல் ரோட்டரியும் மத்திய நல அமைச்சகமும் ஒன்றாகச் சேர்ந்து தில்லியில் ஏற்பாடு செய்த பன்னாட்டு மக்கள்தொகைக் கருத்தரங்கில் அவர் கலந்துகொண்டார்.

சந்திப்புகள், பன்னாட்டுக் கூட்டங்கள் என எல்லா இடங்களிலும் உஷா அவர்களுடன் பேசுவதற்கு அவரிடம் எப்போதும் நேரம் இருக்கும், இருவரும் உறுப்பினர்கள், ரோட்டரி திட்டங்கள், பொது விழிப்புணர்வு போன்றவற்றைப் பேசுவார்கள். சங்கக் கூட்டங்கள் என்கிற நான்கு சுவர்களுக்குள் ரோட்டரியைப் பூட்டிவைக்கக்கூடாது, ரோட்டரி என்ன செய்கிறது என்று வெளி உலகுக்குச் சொல்லவேண்டும் என்று உஷா எப்போதும் பேசிவந்தார். ஃப்ராங்கும் அதே எண்ணம் கொண்டவர்.

முன்னாள் RI தலைவர்களின் அவை நிகழ்ச்சிகளுக்கு வரும் போதெல்லாம், அவர் பிராண்டட் கண்ணாடிகளைக் கொண்டுவருவார் என்பது நினைவுக்கு வருகிறது, குறிப்பாக, அவற்றைப் பெண்களுக்கு வழங்குவார்.

ஃப்ராங்க் மிகவும் அன்பான, அக்கறையுள்ள கணவர்; பன்னாட்டுக் கூட்டங்களில் குளோரியா ரீடாவுடைய சக்கர நாற்காலியை அவர் தள்ளுவதிலேயே அது தெரியும்.

சமீபத்தில் ஃப்ராங்க் எனக்கு PRID சுதர்ஷன் அகர்வால் காலமானதற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் ஒரு ஈமெயில் அனுப்பி இருந்தார். அதில் அவர் சுதர்ஷன்அவர்களின் மனைவி உஷாவின் ஈமெயில் கேட்டு எழுதியிருந்தார். தனக்கு கணயப் புற்றுநோய் இருப்பது தெரிந்தும் இவ்வாறு எழுதியது மனதை உருக்கும் ஒரு சம்பவம் ஆகும்.

ஃப்ராங்கின் உள் குணங்கள்தான் அவரை மிக உயர்ந்த மனிதராக்கின. அவர் தன்னுடைய வாழ்நாளின் போது சாதனையாளராகவில்லை, ஆனால், என்றென்றைக்கும் சாதனையாளராகிவிட்டார்.■

சவால்களை இணைந்து சந்திக்க உதவும் நம் அறக்கட்டளை

ரஷிதா பகத்

கொரோனா என்னும் கொடிய அரக்கன் உலகையே அச்சுறுத்தியதால் வைரஸ் தாக்குதலுக்கு ஒருசிலர் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கானவர்கள் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நெருக்கடியான நேரத்தில் ரோட்டரி சங்கத்தினர் துரிதகதியில் களத்தில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருளுதவியும் மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்களையும் வழங்கி உதவிக்கரம் நீட்டி வருகின்றனர். இதற்குப் பின்னணியில் இருப்பது ரோட்டரி அறக்கட்டளையின் துடிப்பான செயல்கள்தான்.

கொரோனாவை எதிர்கொண்டு கட்டுப்படுத்தும் முயற்சியிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிபுரியவும் ரோட்டரி சரியான நேரத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது எனில் ரோட்டரி அறக்கட்டளை சிறிதும் தாமதிக்காமல் தேவையான நிதியுதவிகளை அளித்துவந்ததுதான் என்கிறார் அறக்கட்டளையின் புதிய தலைவராக பதவியேற்க உள்ள K R ரவீந்திரன். இதோ அவரது பேட்டி:

கேள்வி: சர்வதேச அளவில் கொரோனா வைரஸ் பரவலால் எழுந்துள்ள சவால்களைச் சந்திக்க ரோட்டரி அறக்கட்டளையும், நிர்வாகக்குழுவும் என்ன மாதிரியான உத்திகளை வகுத்தது?

பதில்: இந்த தலைமுறையில் மனிதகுலம் சந்தித்து வரும் மிகப்பெரிய சவால் கொரோனா வைரஸ் தொற்று பரவல். இதனால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் அதிகம். ரோட்டரி அறக்கட்டளையின் வரலாற்றிலேயே முதன் முறையாக கொரோனாவை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு பட்டினியால் வாடுவோர் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்றும் குறிப்பாக இதில் ஆப்பிரிக்க நாட்டவர்கள் அதிக அளவில் இருப்பார்கள் என்றும் ஐ.நா.வின் உலக உணவுத் திட்ட அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

பொதுவாக இது போன்ற வைரஸ் தொற்று ஏற்பட்டால் உலகின் ஏதாவது ஒரு பகுதிதான் பாதிக்கப்படும். அந்தச் சூழ்நிலையில் பாதிக்கப்படாத இதர நாடுகளிலிருந்து உதவிபெற முடியும். ஆனால், கொரோனா உலக நாடுகளையே பாதித்துள்ளது. அதிலும் நன்கொடையாளர்கள் அதிகம் உள்ள நாடுகளில் நிலைமை மிக மோசமாக உள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் ரோட்டரி அறக்கட்டளை துரிதமாகச் செயல்பட

TRF *தலைவர் தேர்வு* K R *ரவீந்திரன் மற்றும் அறங்காவலர் குலாம் வஹன்வதி.*

ரஷிதா பகத்

எல்லாம் கடவுளின் செயல்!

கேள்வி: *கொரோனாவால் மனிதர்கள் பாதிக்கப்பட்டாலும் அதனால் பயனடைந்தது சுற்றுச்சூழல்தான். மரங்களும், விலங்குகளும் பூமியில் தங்களுக்குரிய இடத்தை பெற்று வருகின்றன. கடந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற அறக்கட்டளை நிர்வாகிகள் கூட்டத்தில் சுற்றுச்சூழலிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை நீங்கள் அறிமுகப்படுத்தினீர்கள். உங்களுக்கு மகிழ்ச்சிதானே?*

பதில்: *நீங்கள் சொன்னபடி அந்த தீர்மானத்தை அறிமுகப்படுத்தியது நான்தான். நிர்வாகக்குழுவும் சுற்றுச்சூழலை ஒரு தனி பிரிவாகவோ அல்லது ஏற்கெனவே செயல்படுத்தி வரும் திட்டத்துடன் சேர்த்து கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் ஒப்புக்கொண்டது. இது தொடர்பான விவகாரத்தை PRIP இயன் ரைஸ்லி தலைமையிலான குழு ஆய்வு செய்து வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் நல்ல முடிவு எடுக்கப்படும் என்று நம்புகிறேன்.*

கொரோனா பாதிப்பின் பக்க விளைவாக சுற்றுச்சூழலை நான் ஆதரிக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். இன்று வெனிஸ் நகரில் கால்வாய்கள் தெளிவாக ஓடுகின்றன. நீரோட்டத்துக்கு ஏற்றவாறு மீன்கள் நீந்தும் காட்சியை பார்க்க முடிகிறது. மனிதர்களின் செயல்பாடு நின்றுவிட்ட நிலையில் இயற்கை துளிர்விடுகிறது.

பஞ்சாப் மக்கள், இப்போது இமயமலையின் பனிச்சிகரங்களைத் தெளிவாகக் காண முடிவதாகக் கூறுகின்றனர். கடந்த பல ஆண்டுகளாக காற்று மாசுபடுதலால் இவை தடைபட்டிருந்தன. கொழும்புவில் நாங்கள் ஆடம்ஸ் சிகரத்தை தெளிவாக பார்க்க முடிகிறது. வேல்ஸில் கிராமங்களில் மந்தையாக ஆடுகள் செல்வதையும், ஒஹியோவில் மான்கள் புற்களை மேய்வதையும் கலிபோர்னியாவில் வேலிகளுக்கு அப்பால் சிங்கங்கள் நடமாட்டத்தையும் நாம் காண முடிகிறது.

அடிலெய்டில் கங்காருக்கள் மனித நடமாட்டம் இல்லாத நகரத்தை சுற்றிவருகின்றன. இஸ்ரேலின் டெல்அவிவ் நகரில் உள்ள பூங்காக்களை குள்ளநரிகள் ஆக்கிரமித்துள்ளன. டொரன்டோவில் நரிகள், மான்கள், அழகான பறவைகள் தெருக்களில் உலவுவதை காண முடிகிறது. பார்ஸிலோனாவில் காட்டுப்பன்றிகள் சாலைகளில் திரிகின்றன. திமிங்கலங்கள் கப்பல் செல்லும் பாதையில் ஒலியெழுப்பி நீந்திச் செல்கின்றன. பிரேஸிலின் வடகிழக்கு கடற்கரை பகுதியில் ஆமைகள் தண்ணீரை நோக்கி படையெடுக்கின்றன. மனிதர்களின் துன்புறுத்தல் இல்லாமல் அவை சுதந்திரமாக இருக்கின்றன. காலம் காலமாக மனிதர்கள் விலங்கினங்களை ஒதுக்கியே வைத்திருந்தனர். இப்போது மனிதர்கள் வீடுகளில் முடங்கிக்கிடக்கும் நேரத்தில் விலங்கினங்கள் தெருக்களில் சுதந்திரமாக உலவித் திரிகின்றன. இயற்கை மீண்டும் பின்னோக்கிச் செல்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு வரை மாசுபடுத்தும் தொழிற் சாலைகள் மூடப்படுவதையும், பயணங்களினால் கரும்புகைகள் உமிழ்வதையும் தடுத்து நிறுத்த முடியாத நிலை இருந்தது. ஆனால், இப்போது அதிரடி வேகத்தில் வானம் தெளிவாக இருக்கிறது. வீதிகள் மௌனமாக இருக்கின்றன. இதற்கு காரணம் கடவுளின் செயல்தான்!

வேண்டியிருந்தது. ரோட்டரி உலகின் தேவையை பூர்த்திசெய்யவும் வேண்டியிருந்தது. மாறுபட்ட சூழலில் நாங்கள் உடனடியாக உதவ வேண்டியிருந்தது.

கேள்வி: அப்படியானால் எதற்கு முன்னுரிமை அளித்தீர்கள்?

பதில்: எங்களுக்குள் பல கேள்விகள் எழுந்தன. ஆனால், ஒன்றுமட்டும் தெளிவாகப் புரிந்தது. அதிரடியாக நிவாரணப்பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்பதால் உடனடியாக கூட்டம் நடத்தி சில முக்கிய முடிவுகளை எடுத்தோம்.

கடந்த மார்ச் 15ம் தேதிக்குப் பிறகு நிவாரணப் பணிகளுக்கான மானிய உதவிகளை ரோட்டரி மாவட்டங்களுக்கு 2020-21 ரோட்டரி ஆண்டிலேயே வழங்குவது என முடிவு செய்தோம்.

கொரோனா தொடர்பான சர்வதேச மானியத் திட்டங்களுக்கு 30 சதவீதம் வெளிநாட்டு நிதியுதவி வேண்டும் என்பதை ரத்துச் செய்ய ஒப்புக்கொண்டோம்.

பேரிடர் மீட்பு நிதிக்காக DDF பங்காக வழங்கப்படும் தொகையை அப்படியே கொரோனா நிவாரணப்பணிகளுக்கு செலவிட அனுமதித்தோம். எனினும் ரொக்க நன்கொடைகளுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

முக்கிய நடவடிக்கையாக உடனடியாக நாங்கள் 1 மில்லியன் அமெரிக்க டாலரை உலக நிதியிலிருந்து பேரிடர் நிவாரண நிதிக்கு மாற்றினோம். இந்தத் தொகையும் கொரோனா நிவாரணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.

ஒரு ரோட்டரி மாவட்டத்துக்கு 25,000 டாலர் நிதியுதவி என்ற கணக்கில் முதலில் கேட்பவர்களுக்கு முதலில் உதவி என்ற அடிப்படையில் செயல்பட்டோம். ஆனால், இந்தத்தொகை போதாது. விரைவில் அது செலவழிக்கப்பட்டுவிடும் என்று எங்களுக்குத் தெரியும். எனவே உலக நிதியிலிருந்து மேலும் 2 மில்லியன் டாலரை பேரிடர் மீட்பு நிதிக்கு மாற்றம் செய்து அதை கொரோனா நிவாரணப் பணிகளுக்காக செலவிட்டுவந்தோம். அதாவது ஒவ்வொரு மாவட்டத்துக்கு மீண்டும் 25,000 டாலர் நிதியுதவி வழங்க முடிவுசெய்தோம்.

கேள்வி: இந்த முடிவுகள் துரிதமாக எடுக்கப்பட்டது சரி. தற்போதைய சூழலில் நேரிடையான கூட்டங்கள் நடத்துவது சாத்தியமில்லை என்பதால் ஆன்லைன் மூலமாக கூட்டம் நடத்தி இதற்கான முடிவுகளை எடுத்திருப்பீர்கள். ஆனால், இதில் ரோட்டரி ஊழியர்களின் பங்கு எப்படி?

பதில்: இது சரியான கேள்வி. இந்த முடிவுகள் மார்ச்/ஏப்ரல் மாதங்களிலேயே காணொலி காட்சிக் கூட்டம் நடத்தி எடுக்கப்பட்டன. அதை எப்படிச் செயல்படுத்தினீர்கள் என்று கேட்கிறீர்கள். ரோட்டரி ஊழியர்கள் இதற்காக வீட்டிலிருந்தபடியே நேரம் பார்க்காமல் பணிபுரிந்தனர்.

கேள்வி: குஜராத் ரோட்டரி மாவட்டம் 3060 கொரோனா சிகிச்சைக் காக நிதியுதவி கேட்டு அளித்த விண்ணப்பங்கள் உள்பட இரண்டு விண்ணப்பங்களை ஒரே நாளில் பரிசீலித்து ஒப்புதல் அளித்துள்ளீர்கள். இதில் ஒரு வி'ண்ணப்பம் ரூ.1.8 கோடி (2,40,500 டாலர்) நிதியுதவி தொடர்பானது. இது எப்படி சாத்தியமானது?

பதில்: நாங்கள் இந்த இரண்டு விண்ணப்பங்களையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோது, ஈவான்ஸ்டன் தலைமையகத்தில் பணியாற்றிய அனைத்து ஊழியர்களும் வெளியேற்றப்பட்டுவிட்டனர். ஆனால், ரோட்டரி ஊழியர்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே பணிபுரிந்து இரண்டு விண்ணப்பங்களையும் ஒரே நாளில் பரிசீலித்து பைசல் செய்துவிட்டனர். இதற்காக அவர்களை நான் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

ஏப்ரல் இறுதிவரை நாங்கள் கொரோனா நிவாரண உதவி தொடர்பான 177 விண்ணப்பங்களை பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்கினோம். இவற்றின் மதிப்பு 1.22 மில்லியன் டாலர். இது தவிர 193 மாவட்டங்களுக்கு தலா 25,000 டாலர் மானிய உதவிக்கான திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன் மொத்த மதிப்பு 4.8 மில்லியன் டாலர்.

கேள்வி: ஆனால், நீங்கள் 3 மில்லியன் டாலர் மட்டுமே இந்தக் கணக்கில் மாற்றப்பட்டுள்ளதாகச் சொன்னீர்களே?



பதில்: ஆம். உண்மைதான். உபரி நிதி DDF கணக்கிலிருந்து கொரோனா நிவாரண உதவி கணக்குக்கு மாற்றப்பட்டது. எங்களது வேண்டுகோள் மூலம் 4,80,000 டாலர் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது. மேலும் சர்வதேச ரோட்டரி மாநாட்டை ரத்து செய்ததால் அதற்காக உறுப்பினர்கள் அளித்த பணத்தை திருப்பித்தந்திருந்தோம். அந்த தொகையை அவர்கள் கொரோனா நிவாரண நிதிக்கே கொடுத்துவிட்டனர்.

கேள்வி: கொரோனாவுக்கு பிற்பட்ட காலத்தில் RI மற்றும் TRF செயல்பாடுகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

நாங்கள் எப்படிச் செயல்படப் போகிறோம் என்பதைக் காண பலரும் ஆவலுடன் இருக்கிறார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில் நாங்கள் எப்படிச் செயல்படுகிறோம் என்பதை வைத்தே மக்கள் எங்களை மதிப்பிடுவார்கள்.

நாம் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டுமானால், கொரோனா போன்ற ஆட்கொல்லி வைரஸ்களை எதிர்த்துப் போராட வேண்டுமானால், இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள வேண்டுமானால், தனியாக யாராலும் செய்ய முடியாது. ஒன்றாகச் சேர்ந்து தான் செய்யவேண்டியிருக்கும்.

புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஹோல்கர் நாக் உடன் இணைந்து செயலாற்றுவேன். நாங்கள் இருவரும் ரோட்டரியினரும் ரோட்டரி ஸ்தாபனமும் எங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை அறிந்து செயல்படுவோம்.

கேள்வி: உலக அளவில் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சம்பளம் பெறும் ஊழியர்கள், தொழில் துறையினரின் வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளில் பொருளாதாரச் சரிவு ஏற்படும். ரோட்டரி அறக்கட்டளைக்கான நிதிப் பங்களிப்பும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு எதிர்ப்பார்த்த அளவு இருக்காது. இது உங்களுக்கு கவலை அளிக்கவில்லையா?

பதில்: நீங்கள் சொல்லுவது சரி. தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் சிறிய நிறுவனங்கள் முதல் பெரிய நிறுவனங்கள் வரை ஆட்குறைப்பு நடவடிக்கையில்

ஈடுபட்டுள்ளன. தினக்கூலித் தொழிலாளர்களும் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். உலகம் முழுவதும் 1.6 பில்லியன் மக்கள் முறைசாரா பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பாதிப்பேரின் வாழ்வாதாரம் நிச்சயமாக பாதிக்கப்படும்.

நிறுவனங்கள் திவால் நிலையை அறிவிப்பதும் அதிகரிக்கும். ஏற்கெனவே நெய்மன் மார்கஸ், ஜே.சி.பென்னி, ஹெர்ட்ஸ், தாய் ஏர்வேய்ஸ், டெபன்ஹாம்ஸ், விர்ஜின் ஆஸ்திரேலியா போன்ற நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன.

ஹோட்டல்கள், உணவகங்கள் உள்ளிட்ட விருந்தோம்பல் தொழில் துறையினர், தொலைக்காட்சி, திரைப்பட்ட உலகம், விளையாட்டுத் துறை, கட்டுமானத்துறை, விமான போக்குவரத்துத்துறை, சில்லரை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் சொல்லொண்ணா துயரத்துக்கு ஆளாகியுள்ளன. இவை மீண்டு எழ சில காலம் பிடிக்கும்.

அதே நேரத்தில் டிஜிட்டல் தளங்களான ஆல்ஃபபெட், பேஸ்புஃக், போன்ற நிறுவனங்கள் நெருக்கடியிலிருந்து மீள்வதுடன் மேலும் வலுப்பெறும். ஆன்லைன் மூலமான சேவைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. புதிய வரவான ஜூம் நம் அன்றாட வாழ்க்கையில் அங்கமாக மாறிவிட்டது.

தொலைத்தொடர்பு மற்றும் மருந்து உற்பத்தித் தொழில்கள் நல்ல ஏற்றம் பெற்றுள்ளன. அவை முதலீடுகளையும் ஈர்த்து வருகின்றன.

ஒரு வாதத்திற்காக ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையும், ரோட்டரிக்கான நிதிப் பங்களிப்பும் குறையும் என்று வைத்துக் கொண்டாலும், ரோட்டரி உறுப்பினர்கள் மௌனமாக இருந்து எதையும் சாதிப்பார்கள் என்பதை நான் எப்போதும் நினைவில் வைத் திருக்கிறேன்.

கேள்வி: அதை உங்களால் விரிவாகச் சொல்ல முடியுமா?

பதில்: ரோட்டரியினர் எப்போதுமே வித்தியாசமாகச் செயல்படுபவர்கள். 1919ல் ஸ்பானிஷ் ப்ளு தாக்குதலுக்குப் பின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

உண்மையில் 19 சதவீதம் அதிகரித்தது. 1921ம் ஆண்டு பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபோதும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 26 சதவீதம் அதிகரித்தது. 1957ல் ஆசியாவை வைரஸ் தாக்கிய போது உறுப்பினர்கள் எண்ணிக்கை 3 சத வீதம் அதிகரித்தது. 2009ல் பன்றிக் காய்ச்சல் வந்தபோது உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. ஆனால், ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதியளிப்பது 20 சதவீதம் அதிகரித்தது.

அடுத்த ஆண்டில் சர்வதேச மானிய உதவிக்கான பட்ஜெட் ஒதுக்கீடு குறைவாகவே இருக்கும் என்பதை இப்போதே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், அதற்கும் கொரோனா தொற்று நிதியுதவிக்கும் தொடர்பு இல்லை. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ரோட்டரியினர் கொடுத்த நிதியிலிருந்து தான் இவை செலவிடப் படுகின்றன. நாம் மூன்றாண்டு சுழற்சியிலேயே செயல்படுகிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு உலக நிதிக்கு பெருமளவில் நன்கொடைகள் வந்தன. நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நிதி குவிந்தது. அடுத்த ஆண்டு நன்கொடைகள் அளிப்பது குறைந்தால் அது 2023-25ம் ஆண்டுச் செலவினங்களில் எதிரொலிக்கும்.

அடுத்த ஆண்டு கிடைக்கும் நிதி, அறக்கட்டளையின் வருடாந்திர நிதி முதலீட்டுத் துறையில் கிடைக்கும் வருவாயைப் பொறுத்தது என்பதை நான் சொல்லிதான் ஆக வேண்டும். ரோட்டரியின் முதலீட்டுத் துறை அடுத்த ஆண்டு எவ்வளவு வருவாய் ஈட்டும் என்பதை வாரன் பஃப்பெட் டால்கூட கணிக்க முடியாது.

நாங்கள் மூன்று பிரிவுகளில் முதலீடு செய்கிறோம். ஆண்டு நிதி, அறக்கட்டளை நிதி, போலியோ பிளஸ் நிதி என மூன்று வகை முதலீடுகளை வைத்துள்ளோம். அறக்கட்டளை நிதியை நீண்டகால வளர்ச்சியை கருத்தில்கொண்டு பங்குகளில் முதலீடு செய்கிறோம். இதில் ஏற்படும் ஆபத்தை சந்திக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இதன் மூலம் 8 சதவீதம் வரை லாபம் கிடைக்கும் என்று கருதியே நாங்கள் இதில் முதலீடு செய்கிறோம். ஆனால், நாங்கள் முன்ஜாக்கிரதையாகவும் செயல்படுகிறோம். ஆண்டு நிதி முதலீடு எங்களின் மூன்றாண்டு கால சுழற்சி நிதிக்கு தேவைப்படுகிறது. இதிலும் நாங்கள் எச்சரிக்கையுடன் செயல்படுகிறோம். ஆண்டு நிதி முதலீடுகளில் லாபம் அதிகமிருக்காது என்றாலும் ஆபத்தும் இதில் குறைவுதான். சர்வதேச மானிய உதவி, மாவட்டங்களுக்கான மானிய உதவி, அறக்கட்டளை செலவினங்கள் போன்றவற்றை இதில் கிடைக்கும் வருவாயிலிருந்தே செலவிடுகிறோம். நாங்கள் அகலக்கால் வைக்காமல் ஜாக்கிரதையாக செயல்பட்டதால்தான் இந்த ஆண்டு பங்குச்சந்தை வீழ்ச்சி அடைந்தபோதுகூட எங்களுக்கு அதிக பாதிப்பு இல்லை.

2019-20ல் 425 மில்லியன் டாலர் முதலீட்டின் மூலம் 4.5 சதவீத வருவாய் லாபமாக கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், இந்த ஆண்டு வருவாய் குறைவதற்கே வாய்ப்பு உள்ளது. 2020-21 ஆண்டுக்கு வருவாய் 3.5 சதவீதமாகவே இருக்கும் என்று கருதுகிறோம். போலியோ நிதிகள் குறைந்த ஆபத்துள்ள குறுகியகால பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகின்றன. ஏனெனில் அப்போதுதான் இத்திட்டத்தின் செயற்பாட்டாளர்களுக்கு விரைந்து நிதி கிடைக்கச் செய்ய முடியும்.■

கொரோனா காலத்தில் குழந்தைகளைப் பாதுகாக்க ரூ.1.5 கோடி நிதி திரட்டிய ரோட்டரி இந்தியா!

ஜெய்ஸ்ரீ

வேர்ல்டு விஷன் இந்தியாவுடன் இணைந்து NDTV தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இரண்டு மணிநேர 'டெலிதான்' நிகழ்ச்சியில் ரோட்டரி இந்தியாவும் பங்கேற்றது. 'Telethon' என்பது நன்கொடைகளை பெருக்குவதற்கான தொலைக்காட்சி நிகழ்ச்சி. குழந்தைகளுடன் இணைந்து (Together with Children) என்னும் தலைப்பிலான இந்த நிகழ்ச்சி தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பானது. வறுமையால் வாடும், சமூகத்தால் புறக்கணிக்கப்படும், கரோனா பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என லட்சக்கணக்கான ஏழை குழந்தைகளுக்கு உதவுவதற்காக நிதிதிரட்டும் நிகழ்ச்சியாக இது நடைபெற்றது.

ரோட்டரி இந்தியா சார்பில் RIPN சேகர் மேத்தா, இந்த நிகழ்ச்சி மூலம் ரூ.1 கோடி நிதி திரட்டித்தர ஒப்புக்கொண்டிருந்தார்.

நாட்டில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் மோசமான நிலையில் வாழ்கிறார்கள். கொரோனா தொற்று பீதி, அதைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தால் இவர்களின் நிலை மேலும் மோசமாகிவிட்டது. ரோட்டரியின் திட்டங்கள் எல்லாமே கல்வி, ஊட்டச்சத்து, சுகாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் தான் இருக்கும். முதலில் ரூ.1 கோடி நிதி திரட்டுவதாகத்தான் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் நிகழ்ச்சியின் முடிவில் ரு.1.5 கோடி என உயர்த்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ரோட்டரியின் பங்கு அதிகம் இருக்க வேண்டும் என்பதுதான் இதற்கு முக்கியக் காரணம் என்றார் சேகர் மேத்தா.

ரோட்டரி இந்தியாவின் திட்டங்களையும் அதைச் செயல்படுத்தும் விதம் குறித்தும் ரோட்டரி இயக்கத்தின் சுகாதாரத் திட்டங்களை (RISM) மேற்பார்வையிட்டு செயல்படுத்தி வரும் இயக்கத்தின் தலைவர் ரமேஷ் அகர்வால் பேசுகையில் விரிவாக எடுத்துரைத்தார். அப்போது மேத்தா, பள்ளிகளில் கைகழுவும் நிலையங்களை அமைக்க பொதுமக்கள் நிதியுதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதுமட்டுமல்ல, பொது மக்கள் எவ்வளவு நிதி தருகிறார்களோ, அதற்கு இணையாக ரோட்டரியும் நிதி தர தயாராக இருப்பதாகக் கூறினார். மேலும் இந்த ஆண்டு ரூ.1 கோடி மதிப்பில் 1,000 பள்ளிகளில் கைகழுவும் நிலையங்கள் நிறுவ இலக்கு நிர்ணயித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பொது முடக்கத்தின் போது புலம்பெயர் கூலித் தொழிலாளர்களின் குழந்தைகளில் காலில் செருப்புகூட இல்லாமல் நடந்துசென்றனர். குழந்தைகள் நடக்கமுடியாமல் சோர்வடைந்து சூட்கேஸின் மேல் படுத்து உறியங்கியதையும் தாகத்தாலும், பசியாலும் அழுத காட்சிள் நெஞ்சை உலுக்குவதாக இருந்தது. சமூகத்தில் நலிவுற்ற அவர்களுக்கு உணவும் பாதுகாப்பும் வழங்குவது நமது கடமையாகும். அவர்களுடைய கல்வி ஒருபோதும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்றார் மேத்தா. கரோனா பாதிப்பால் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான நேரத்தில் ஏழைகளுக்கு உணவு, பாதுகாப்பு கிடைப்பதை உறுதி செய்வதிலும் அவர்களின் கல்வி தொடர வேண்டும் என்பதிலுமே ரோட்டரி கவனம் செலுத்தி வருகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஏழைகளுக்கு உணவு அளிப்பதற்காக மட்டும் ரோட்டரி அமைப்பினர் ரூ.40 லட்சம் வரை செலவிட்டுள்ளனர். இது தவிர கரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற வசதியாக மருத்துவ மனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்கித்தர ரூ.20 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் செயல்பட்டு வரும் சுமார் 4,000 ரோட்டரி சங்கங்கள் மூலம் 1 கோடி முகக்கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் நன்கொடைகள் வந்தவண்ணம் உள்ளன. கொரோனாவை எதிர் கொள்ள ரோட்டரி மேற்கொண்ட பணிகளின் மதிப்பு மட்டும் ரூ.75 கோடியாகும் என்றார் மேத்தா.

ரோட்டரியின் எழுத்தறிவு இயக்கத்தை பற்றி மேத்தா குறிப்பிடுகையில், பத்தாண்டுகளுக்கு மேலாக ஆன்லைன் மூலம் கல்வி கற்பித்தல் நிகழ்ச்சியை ரோட்டரி நடத்தி வருவதையும், அனைத்து மாநிலங்களிலும் 1 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் கல்வி கற்பிக்க ரோட்டரி தயாராக இருப்பதாகவும் இது தொடர்பாக மத்திய அரசுக்கு யோசனை தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வேர்ல்டு விஷன் அமைப்புடன் ரோட்டரிக்குள்ள நீண்டகால தொடர்பையும் அவர் எடுத்துரைத்தார்.

NDTV தொலைக்காட்சியின் இணை நிறுவனர் பிரணாய் ராய், ரோட்டரியின் பங்களிப்புக்காக சேகர் மேத்தாவையும், அகர்வாலையும் வெகுவாக பாராட்டினார். வறுமை, ஊட்டச்சத்து குறைபாடு, பிறரால் இழிவுபடுத்தப்படும், புறக்கணிக்கப் படும் குழந்தைகளின் உரிமைகளைப் பேசும் நிலையை கொரோனா உருவாக்கிவிட்டதாகக் கூறினார்.

இந்நிகழ்ச்சி மூலம் ரூ.5 கோடி நிதி திரட்டப்பட்டது. RC தில்லி அசோகா சேர்ந்த உறுப்பினர்கள் அர்ச்சனா மற்றும் அனில்குப்தா இருவரும் ரூ.20 லட்சமும், தில்லி மிட்வெஸ்ட் ரோட்டரியின் முன்னாள் தலைவர் G S கொச்சார் ரூ.10 லட்சமும், பெயர் சொல்ல விரும்பாத

RISM *தலைவர் ரமேஷ் அகர்வால் மற்றும்* RIPN *சேகர் மேத்தா.*

இருவர் முறையே ரூ.1.35 கோடி மற்றும் ரூ.95 லட்சம் நிதி வழங்கினர்.

நன்கொடையாகப் பெறப்பட்ட நிதி ஏழைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கவும், அவர்களின் சுகாதாரம் பேணவும், அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும்,வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் செலவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி, குழந்தைகள் பொது முடக்கத்தின்போது சந்தித்த சவால்களையும் வெளிப்படுத்தியது. மும்பையைச் சேர்ந்த ஹென்னா, HIV நோயால் பாதிக்கப்பட்டவர். பொது முடக்கத்தால் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறவும், மருந்து, மாத்திரைகள் வாங்கவும் முடியவில்லை என்று சோகத்துடன் குறிப்பிட்டார்.

கூலித்தொழிலாளர்களின் குழந்தைகள் பலர் ஒரு நாளின் பெரும்பகுதியை வெறும் பிஸ்கட் சாப்பிட்டு உயிர்வாழ்ந்துள்ளனர். இது மிகக் கொடுமையானது என்றார் மகஸஸே விருது பெற்ற NDTV தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் ரவீஷ்குமார். இதுபோன்ற நெருக்கடியான காலகட்டத்தில் குழந்தைகள் மனதளவிலும் உடல் ரீதியிலும் பாதிக்கப்படுகின்றனர். ஊட்டச் சத்து குறைபாட்டால் தவிக்கும் குழந்தைகளை பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்றார் அவர். குழந்தைகள் பலர், தங்கள் பெற்றோருடன் பல மைல்கள் தூரம் கால்கள் வலிக்க நடந்து சென்றுள்ளனர். இதை அவர்கள் வாழ்நாளில் என்றைக்கும் மறக்கமாட்டார்கள் என்றார் அவர். மாநிலங்களின் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் களுடன் பிரதமர் மோடி, காணொலி காட்சி மூலம் கலந்துரையாடி ஏழைக்குழந்தைகளின் நலனில் போதிய அக்கறை செலுத்துமாறு வலியுறுத்த வேண்டும் என்றும் ரவீஷ்குமார் கேட்டுக்கொண்டார்.

வேர்ல்டு விஷன் இன்டர்நேஷனல் அமைப்பின் பிராந்தியத் தலைவர் செரியன் தாமஸ், அதன் தேசிய இயக்குநர் மாதவ்பெல்லம்கொண்டா, நோபல்பரிசு வென்ற அபிஜித் பானர்ஜி, இசையமைப்பாளர் A R ரஹ்மான், ஸுமோட்டோ தலைவர் சந்தன்மெந்திர்ரத்தா, அப்பல்லோ மருத்துவமனையின் நிர்வாகக்குழு துணைத்தலைவர் ப்ரீத்தா ரெட்டி, ஆடை வடிவமைப்பாளர் ரிதுகுமார், நடிகர் சோனு சூட் ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.■

NDTV *சேனலில் பேசும்* RIPN *சேகர் மேத்தா.*

ரோட்டரிக்கு பெட்ரோ கிரெடிட் கார்டு

V முத்துக்குமரன்

நாடு முழுவதும் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் டிஜிட்டல் பண பரிவர்த்தனை மேற்கொள்ள வசதியாக ரோட்டரிக்கு என தனியாக பெட்ரோ கிரெடிட் கார்டுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு பரிசீலித்து வருவதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், அண்மையில் ரோட்டரித் தலைவர்களுடன் நடைபெற்ற காணொலி காட்சி மூலமான உரையாடலின்போது தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் RIPN சேகர் மேத்தா மற்றும் ரோட்டரியின் மூத்த தலைவர்கள் பலர் பங்கேற்றனர். அப்போது அமைச்சர் தர்மேந்திர பிரதான் மேலும் கூறியதாவது:

எரிபொருள் தேவைக்காக தினமும் 4.5 கோடி பேர் பெட்ரோல், டீசல் மற்றும் திரவ எரிவாயு (LPG) விற்பனை நிலையங்களைத் தேடிவருகின்றனர். பணத்தைக் கையாளும் செலவைக் குறைப்பதிலும், டிஜிட்டல் பண பரிவர்த்தனையை ஊக்குவிப்பதிலும் ரோட்டரி முக்கிய பங்காற்ற முடியும்.

பெட்ரோல் விற்பனை நிலையங்களில் 75 சதவீதமும், திரவ எரிபொருள் விற்பனை நிலையங்களில் 95 சதவீதமும் ரொக்கப் பரிவர்த்தனையிலேயே நடைபெறுகின்றன. கொரோனா தொற்றின் பாதிப்பு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டு மீண்டும் இயல்பு வாழ்க்கை திரும்பியதும் டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு மாறுமாறு மக்களிடம் விழிப்புணர்வு பிரசாரம் மூலம் ரோட்டரி கேட்டுக்கொள்ள வேண்டும். எண்ணெய் விற்பனையில் ஈடுபட்டுள்ள அனைத்து பொதுத் துறை நிறுவனங்களிடமும் ரோட்டரிக்கு தனியாக பெட்ரோ கார்டு வழங்குவது குறித்து பேசி முடிவு செய்யப்படும்.

மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப நாமும் டிஜிட்டல் பண பரிவர்த்தனை நடைமுறை தொடர்பான அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் புதிய பொருளாதார நடைமுறைகளில் நாம் முத்திரை பதிக்க முடியும்.

நாட்டில் 40 கோடி ஸ்மார்ட் கருவிகள் உள்ளன. ரோட்டரியினர் ஏழை இளைஞர்கள் கையில் உள்ள பழைய செல்போன்களை வாங்கிக்கொண்டு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய செல்போன்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலமும் அவர்களுக்கு டிஜிட்டல் பணப் பரிமாற்ற நடைமுறைகளைச் சொல்லிக் கொடுப்பதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ஸ்மார்ட் செல்போன்கள் கையிலிருந்தால் மக்கள் ஆரோக்கிய சேது போன்ற செயலிகளை பதிவிறக்கம் செய்து தங்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். நிதி ஆயோக் 732 வருவாய் மாவட்டங்களில் 115 மாவட்டங்களில் வளர்ச்சி பெறவேண்டிய மாவட்டங்கள் என்று கண்டறிந்து பட்டியலிட்டுள்ளது. இதுபோன்ற பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் சுகாதாரம், எழுத்தறிவு, குடிநீர் உள்ளிட்ட மக்கள் நலத்திட்டங்களை ரோட்டரி செயல்படுத்த முடியும்.

வாழ்க்கையும் வாழ்வாதாரங்களும்

கொரோனா பாதிப்புக்கு ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை

மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் தர்மேந்திர ப்ரதான்.

அளிப்பது, பொருளாதாரச் சரிவை சரிகட்டும் வகையில் தொழிற் சாலைகளுக்கு கடனுதவியும், சிறு, குறுந்தொழில் முனைவோருக்கு முதலீட்டுக் கடன்களையும் சலுகைகளையும் அறிவித்து பொருளாதார மீட்சிக்குத் தேவையான நடவடிக் கைகளை எடுத்தது ஆகியவற்றை குறிப்பிடலாம். ஒன்றை இங்கு குறிப்பிட வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன், ரஷியா போன்ற வளர்ந்த நாடுகள் கொரோனாவை எதிர்கொள்ள முடியாமல் தத்தளித்த நிலையில் இந்தியா அதை திறமையாக எதிர்கொண்டு வருகிறது. இதற்கு காரணம் ரோட்டரி போன்ற தன்னார்வ அமைப்புகளின் ஒன்று பட்ட முயற்சிகள் தான்.

கடந்த இரண்டு மாதங்களில் ரோட்டரி, சுகாதார ஊழியர்களுக்கு முகக்கவசங்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு உடைகளை வழங்கியது, மருத்துவமனைகளுக்குத் தேவையான வென்டிலேட்டர் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை வழங்கியது, பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு உணவு, உணவுப்பொருள்கள் வழங்குதல் என ரூ.200 கோடிக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கியதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனது மாநிலமான ஒடிஸாவில், ரோட்டரி உதவியுடன் நடைபெறும் மருத்துவ மனைகளின் சேவைகள் மற்றும் ரோட்டரி நடத்திய இலவச கண்சிகிச்சை முகாம்களையும் அதனால் ஏற்பட்ட பலன்களையும் நான் மறந்துவிடவில்லை என்றார் அமைச்சர் தர்மேந்திர பிரதான்.

இரண்டு திட்டங்களுக்கு அனுமதி

வித்யாதன் சிக்ஷா திட்டத்தின் கீழ் 1 முதல் 10ம் வகுப்பு வரையிலான வகுப்புகளுக்கு மின்னணு முறை கல்விக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும், முதல் கட்டமாக 10 மாநிலங்களில் செயல்படுத்தப்படும் என்றும் மற்ற மாநிலங்களுக்கு ஹிந்தி மொழியிலான விடியோக்கள் மொழிமாற்றம் செய்யப்பட்டு வழங்கப்படும் என்று RIPN

டிஜிட்டல் கல்வி அளிக்க ரூ.15 கோடி வரை தேவைப்படும் என்பதால் இதற்கு எண்ணெய் நிறுவனங்களும் இத்திட்டத்துக்கு நிதியளிக்க முன்வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

சேகர் மேத்தா
RI President Nominee

சேகர் மேத்தா தனது உரையில் தெரிவித்தார். டிஜிட்டல் கல்வி அளிக்க ரூ.15 கோடி வரை தேவைப்படும் என்பதால் இதற்கு கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதியுதவியை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். இந்த வகையில் எண்ணெய் நிறுவனங்களும் இத்திட்டத்துக்கு நிதியளிக்க முன்வரும் என்று எதிர்பார்க்கிறோம். அரசுப் பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு மாணவனையும் டிஜிட்டல் கல்வி சென்றடைய வேண்டும் என்பதுதான் எங்களின் நோக்கமாகும். மத்திய அரசின் டிஜிட்டல் கல்வித் திட்டம் செயலுக்கு வந்ததும் சாத்தியமாகும் என்றார்.

வயது வந்தோர் எழுத்தறிவு திட்டத்தின் கீழ் ரோட்டரியின் Padhna Likhna Abhiyaan திட்டத்துக்கு அப்போது மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையை கவனித்து வந்த மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர் அண்மையில் அனுமதி அளித்துள்ளார். இதன் மூலம் 10 கோடி பேருக்கு எழுத்தறிவு கல்வி அளிக்க திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 74 சதவீதத்திலிருந்து 95 சதவீதத்தை எட்டிவிடும் என்றும் மேத்தா தெரிவித்தார்.

சிறப்புத் திட்டங்கள்

மத்திய அரசின் குடிநீர் திட்டங்களில் 10 சதவீத திட்டங்களை அதாவது தடுப்பணைகள் கட்டுவது, நீர்நிலை களை புதுப்பிப்பது உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்த ரோட்டரி விரும்புகிறது.

30,000-க்கும் மேற்பட்ட பள்ளி களில் கைகழுவும் நிலையங்கள், சுகாதார வசதிகள் செய்து தரப் பட்டுள்ளன. அடுத்த 5 ஆண்டுகளில் 30 கோடி மரக்கன்றுகள் நடவும் திட்டம் உள்ளது. மருத்துவ சுகாதாரத் துறையில் 50 கண் மருத்துவ மனைகள் நிறுவி அதன் மூலம் 2.5 லட்சம் பேருக்கு கண் அறுவைச் சிகிச்சை செய்யவும், 40 இரத்த வங்கிகள் ஏற்படுத்தவும், மருத்துவமனைகளில் ஒரு லட்சம் டயாலிஸிஸ் கருவிகள் நிறுவவும் திட்டமிட்டுள்ளோம். அடுத்த 5 ஆண்டுகளில் 50 லட்சம் பேர் பயனடையும் விதத்தில் மருத்துவ முகாம்கள் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் மேத்தா.

கொரோனா நிவாரணப் பணிகள்:

கொரோனா நிவாரணப் பணிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட PM CARES நிதிக்கு ரோட்டரி இது வரை ரூ.105 கோடி வழங்கியுள்ளது. இது தவிர ரூ.85 கோடிக்கு நிவாரணப்பணிகளை ரோட்டரி மேற்கொண்டுள்ளது என்றார் மேத்தா.

இந்நிகழ்ச்சியில் RIDக்கள் பரத் பாண்ட்யா, கமல் சங்வி, RIDNகள் A S வெங்கடேஷ், ரவி வடலமணி மற்றும் டிரஸ்டி குலாம் வாஹன்வதி உள்ளிட்டோரும் பேசினர்.■

GoI உடன் இணைந்து பணியாற்றவுள்ளது ரோட்டரி இந்தியா

கிரண் ஜெஹ்ரா

உலகை உறையச்செய்துள்ள இந்த நோய்ப்பரவலின்போது, Covid-19க்கு எதிராகப் போரிடுவதில் அரசாங்கத்துக்கு உதவுகிற வாய்ப்புகளை ரோட்டரியன்கள் நாடுகிறார்கள். சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மத்திய அமைச்சரான நிதின் கட்காரியுடனான ஓர் இணையக் கருத்தரங்கை இந்தச் சொற்களுடன் தொடங்கினார் RID பரத் பாண்ட்யா. மூத்த ரோட்டரி தலைவர்கள் GoIஉடனான வருங்காலக் கூட்டுமுயற்சிகளை விவாதித்தார்கள்.

Covid-19 நெருக்கடியைக் கையாள்வதில் மிகச்சிறந்த தலைமைப்பண்புகளைக் காண்பித்ததற்காக GOIப் பாராட்டிய RIPN சேகர் மேத்தா, Covid-19 நோய்ப்பரவலுக்கு எதிராக மிகப் பாது காப்பான இந்த நாட்டில் வாழ்கிறோம் என்று நாம் பெருமையுடன் சொல்லலாம் என்றார். ரோட்டரியன்களுடைய பணியைப் பற்றிப் பேசிய அவர், PM CARES நிதிக்கு நாங்கள் ரூ.105 கோடி பங்களித்துள்ளோம் என்றார். பெருநிறுவனங்கள் தங்கள் CSR நிதியிலிருந்து பங்களிக்கின்றன, ஆனால், நாங்கள் நன்கொடையளித்த இந்தப் பணம் எங்கள் ரோட்டரியன் களுடைய சேமிப்பிலிருந்து வருகிறது. அடித்தள நிலையில், ரோட்டரியன்கள் உணவுப் பொட்டலங்கள், தூய்மைப் படுத்திகள், PPE பொதிகள் மற்றும் மருத்துவக் கருவிகளுக்காக ரூ.90 கோடி செலவிட்டுள்ளார்கள்.''

இந்த எண்கள் ஒரு வாரத்துக்கு முந்தையவை என்பதையும், ரோட்டரியன்கள் செலவிட்டுள்ள தொகை ரூ.200 கோடியைக் கடந்து விட்டது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். எங்களுடைய பல ரோட்டரி மருத்துவமனைகளை நாங்கள் கோவிட் மருத்துவ மனைகளாக மாற்றியுள்ளோம், மிக முக்கியமாக, நாங்கள் மன நலனிலும் கவனம் செலுத்திவருகிறோம்.''

மன நலனை வலியுறுத்திப் பேசிய அமைச்சர், இது ஒரு கடினமான நேரம், மக்கள் அச்சத்தில் உள்ளார்கள். இந்த நேரத்தில் நல்ல நம்பிக்கையைப் பரப்புவதற்காக நீங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து மகிழ்கிறேன். இன்னும் பல ரோட்டரியன்கள் இதில் ஈடுபடவேண்டும், மக்களுடன் பேசவேண்டும், அவர்களுடைய நம்பிக்கையை மேம்படுத்தவேண்டும், விரைவில் எல்லாம் சரியாகிவிடும் என்று அவர்களுக்கு உறுதியளிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றார். அத்துடன், நாம்

மத்திய அமைச்சர் நித்தின் கட்காரியுடன் ரோட்டரி தலைவர்கள்.

அனைவரும் கொரோனாவுடன் வாழுகின்ற கலையையும் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார் அமைச்சர். வைரஸிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்வதுபற்றிய விழிப்புணர்வையும் பரப்புங்கள் என்று நான் ரோட்டரியன்களைக் கேட்டுக்கொள்கிறேன்.''

வருங்காலத்தில் GoI செயல் படுத்த எண்ணியுள்ள பல திட்டங்களைப்பற்றி அவர் பேசினார். இந்தியாமுழுவதும் குடிநீர் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். நீரைச் சேமிப்பதுபற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்கு ரோட்டரியால் உதவ இயலுமானால் நன்றாக இருக்கும்.'' முதலில், கொல்கத்தாவிலிருக்கும் ரிக்ஷா இழுப்பவர்களுடைய கை ரிக்ஷாக்களை எலக்ட்ரானிக் ரிக்ஷாக்களாக மாற்றுவதற்கு உதவுகிற பணியில் நாம் இணைந்து செயல்படலாம். இது மிக மோசமான உடலுழைப்பாகும், இதை நாம் நிறுத்தவேண்டும் என்றார் கட்காரி.

காஷ்மீரிலிருக்கும் பரமுல்லா காதி உத்யோகில் பணியாற்றும் 2,000 பெண்களுக்கு உதவும்படி அவர் ரோட்டரி இந்தியாவைக் கேட்டுக்கொண்டார். அந்தப் பெண்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு 80 ஆண்கள் கைக்குட்டைகளைச் செய்கிறார்கள், அவை ஒவ்வொன்றுக்காகவும் ரூ.5 சம்பாதிக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைகளை மேம்படுத்துவதற்காக உங்களால் ஏதேனும் செய்ய இயன்றால் மிக நன்றாக இருக்கும்.'' இதற்கு மேத்தா உடனடியாகப் பதிலளித்தார், ரோட்டரி சின்னத்தைப் பூவேலையாகக் கொண்ட 5 லட்சம் கைக்குட்டைகளுக்கு நாங்கள் ஆர்டர் வழங்குவோம்.

அமைச்சர் இந்த முன்வைப்பை ஏற்றுக்கொண்டார், கிராமப்புற நலப்பராமரிப்பு மற்றும் எழுத்தறிவு ஆகிய துறைகளில் இந்தியாவுக்காக ரோட்டரி எவ்வளவோ விஷயங்களைச் செய்துள்ளது. ரோட்டரியுடன் இணைந்து பணியாற்றுவதில் GoI பெருமையடைகிறது என்றார் அவர்.

RIPN *சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி.*

தேசிய நெடுஞ்சாலைகளில் மரங்களை நடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் காட்காரி தெரிவித்தார். இதில் நாங்கள் எப்படி உதவலாம்? என்று மேத்தா கேட்டார். நாங்கள் ஏற்கெனவே பல கோடி மரங்களை நட்டுள்ளோம்.

அரசாங்கத்துடனான ரோட்டரியின் இடைமுகம், இந்தியாவில் ரோட்டரியின் தலைவர்களுக்கு ஒரு மதிப்புமிக்க உள்ளீடு என்று RIDN A S வெங்கடேஷ் வலியுறுத்தினார், இதுபோன்ற கூட்டங்கள் அரசாங்கத்தின் கவனங்களைப் புரிந்துகொள்ளவும், அதன் திட்டங்களில் தோள் கொடுக்கவும் எங்களுக்கு உதவுகின்றன'' என்றார். இந்திய ரோட்டரியில் 1.6 லட்சம் கல்வி பெற்ற, சாதனை புரிந்த, அர்ப்பணிப்பு மிக்க செயல் வீரர்கள் உள்ளார்கள், இதுபோன்ற நெருக்கடிகளின்போது அரசு அவர்களுடன் இணைந்து பணியாற்றலாம். PRID P T பிரபாகர் 12 பேர் கொண்ட உரையாடல் குழுவை அறிமுகப்படுத்தினார், அனைத்து 38 DGக்கள், DGEக்கள் மற்றும் DGNகளும் இன்று இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

கேள்வி, பதில் நிகழ்ச்சியை வழிநடத்திய RID கமல் சாங்வி, எங்களுடைய ரோட்டரியன்களில் பலர் MSME நிறுவனங்களை நடத்திவருகிறார்கள், ஆகவே, இவற்றுக்காக அரசாங்கம் வைத்திருக்கிற தொலைநோக்கு, குறுகிய காலத் திட்டங்கள் என்ன என்று அறிய விரும்புகிறார்கள்'' என்றார்.

MSMEதான் நம்முடைய பொருளாதாரத்தின் முதுகெலும்பு'' என்றார் கட்காரி. அடுத்த 45 நாட்களுக்குள், MSMEக்கள் தங்களுடைய நிலுவைத் தொகைகளைப் பெறுவதற்கான ஓர் ஆணையையை GoI வெளியிடும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர். இத்துடன், ஏற்றுமதியை 60 சதவிகிதம் உயர்த்துவதற்கான, ஐந்து கோடிப் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான'' திட்டங்களும் உள்ளன என்றார் அவர்.

இந்த நெருக்கடியைத் துன்பத்தைப் போல் வந்திருக்கும் நன்மையாகக் காணும்படி அமைச்சர் MSMEகளைக் கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு நாடும் புதிய நாடுகளுடன் வணிகரீதியில் இணைந்து பணியாற்ற விரும்புகின்றன. நம்முடைய MSMEகளின் உதவியால், உலகமே நாடுகிற அந்தப் புதிய வணிகக் கூட்டாளியாக இந்தியா ஆகலாம்'' என்றார் அவர்.

இந்த இணையக் கருத்தரங்கில் கிட்டத்தட்ட 2,000 பேர் கலந்து கொண்டார்கள், 25,000க்கும் மேற்பட்ட மக்கள் அதை ஃபேஸ்புக்கில் நேரலையாகக் கண்டார்கள். RIDN ரவி வட்லமணி நன்றியுரை வழங்கினார்.■

போதை பழக்கத்திலிருந்து இளைஞர்களை மீட்கும் ஜாம்நகர்

ரஷ்மீதா பகத்

கொரோனா பாதிப்பால் நாடே முடங்கிப் போயிருக்கும் நிலையில் RID 3060-க்கு உட்பட்ட RC ஜாம்நகர் செனோராஸ், குட்கா, புகையிலை மற்றும் இதர போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களை அத்தீயபழக்கத்திலிருந்து மீட்கும் திட்டத்தை சப்தமில்லாமல் செய்து வருகிறது.

குட்கா, புகையிலை போதைப் பொருள் பழக்கத்துக்கு அடிமை யானவர்களை மீட்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபடுவது இன்று நேற்றல்ல, எங்கள் சங்கம் உருவாக்கப் பட்ட நாளிலிருந்தே அதற்கான திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இளைஞர்களை நல்வழியில் மீட்க ஆலோசனை வழங்கி வருகிறோம். பொதுமுடக்கம் இப்போது அமலில் உள்ளதால் தீயபழக்கத்துக்கு அடிமையானவர்கள் தங்கள் இருப்பிடத்தைவிட்டு வெளியில் எங்கும் செல்லமுடியாது, தீய நண்பர்களோடு சேரமுடியாது என்பதால் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மீண்டும் எங்கள் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம் என்றார் இத்திட்டத்தின் தலைவரான டாக்டர் கல்பனா கந்தேரியா.

பொதுமுடக்கத்தில் போதைப்பொருள்களுக்கு அடிமையான இளைஞர்கள் வீட்டில் குடும்பத்தினருடன் இருப்பார்கள். அந்த சமயத்தில் அவர்களுக்கு புகையிலை போன்ற தீய பழக்கத்திலிருந்து விடுபடுமாறு ஆலோசனை கூறி நல்வழிப்படுத்துவது எளிதாக இருக்கும். குடும்பத்தில் உள்ளவர்களும் அவர்களுக்கு அறிவுரை கூறுவதுடன் அவர்களை நல்வழிப்படுத்த தூண்டு கோலாக இருப்பார்கள். குட்கா மற்றும் இதர போதைப்பொருள்கள் விற்பனை இந்த நேரத்தில் இருக்காது என்பதாலும் இந்த திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்தோம்.

எனவே குட்காவுக்கு பதிலாக உடலுக்கு தீங்கு ஏற்படு'த்தாத ஒரு பொருளைத் தாயாரித்து அவர்களுக்கு வழங்கினோம். அதன் பெயர் மேஜிக் மிக்ஸ் முக்வாஸ். அதாவது இலவங்கம், சீரகம், ஓமம், பெருஞ்சீரகம், அரிசிமாவு, கிராம்பு இவற்றை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து மிக்ஸி அல்லது கிரைண்டரில் அரைத்து பொடியாக்கி விநியோகித்தோம்.

இந்த மேஜிக் மிக்ஸ் முக்வாஸ் (மருந்துப் பொடி) உருவானதே தனி கதை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மும்பையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர்

முக்வாஸ் தயாரிக்க தேவையான பொருட்கள்

பெஸ்ட் போக்குவரத்துக் கழகத்தின் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் 300 பேருக்கு இந்த மேஜிக் மருந்துப் பொடியை கொடுத்து, குட்கா உள்ளிட்ட போதைப் பொருள்களை உட்கொள்ளும் தீயபழக்கத் திலிருந்து அவர்களை மீட்டதையும் சமூக வலைத்தளங்கள் மூலம் அறிந்துகொண்டோம். உடனடியாக நான், அந்த மும்பை டாக்டரின் தொடர்பு எண்ணைக் கண்டுபிடித்து அவருடன் பேசி, முக்வாஸ் மருந்துப்பொடியைத் தயாரிக்கும் ரகசியத்தைத் தெரிந்துகொண்டேன் என்கிறார் டாக்டர் கல்பனா.

தொழில்முறையில் மகப்பேறு மருத்துவராக இருக்கும் டாக்டர் கல்பனா, ஜாம்நகர் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராகவும் இருக்கிறார். எனவே புற்றுநோய் தடுப்பு நடவடிக்கையில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. மார்பகப் புற்றுநோய் மற்றும் வாய்புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் மாவட்ட அளவில் ஈடுபடும் பொறுப்பை தம்மிடம் DGE பிரசாந்த் ஜானி ஒப்படைத்துள்ளதாகவும் Dr கல்பனா பெருமையுடன் குறிப்பிட்டார்.

மும்பை டாக்டரி டமிருந்து முக்வாஸ் மருந்துப்பொடியை எப்படித் தயாரிப்பது என்று தெரிந்துகொண்டதும் 5,000 மருந்து பொட்டலங்களைத் தயாரித்து, தனது குடும்ப அறக்கட்டளை மூலம் (ஷ்ரீபாதுக் பாய் கந்தேரியா அறக்கட்டளை) புகையிலைப் பொருள்களுக்கு எதிராகவும், புற்றுநோய் தடுப்பு பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ள சேவை நிறுவனங்கள் மூலம் விநியோகித்தேன் என்றார் டாக்டர் கல்பனா.

2014-ஆம் ஆண்டு ஜாம்நகர் மகளிர் ரோட்டரி சங்கம் உருவான முதல் நாளே இளைஞர்களை போதைப்பழக்கத்திலிருந்து மீட்கவும் அவர்களை நல்வழிப்படுத்துவதற்கான ஆலோசனை கூறவும் டாக்டர் கல்பனாவின் கிளினிக்கில் இளைஞர் ஆலோசனை மையம் தொடங்கப்பட்டது.

செனோராஸ் தலைவர் நீஷா ஐயர் முக்வாஸ் பெட்டியை ஒருவருக்கு கொடுக்க அருகில் Rtn. Dr கல்பனா கந்தேரியா.

சங்கத்தின் முன்னாள் தலைவர் ஹினா மேத்தா முக்வாஸ் பொட்டலத்தை ஒருவரிடம் கொடுக்க அருகில், நிஷா அன்வார் மற்றும் மீனாஷி ஷா.

கடந்த 6 ஆண்டகளில் ஜாம்நகர் மற்றும் தேவ்பூமி துவாரகா மாவட்டங்களில் 436 பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் 55,997 மாணவர்களுக்கு குட்கா உள்ளிட்ட போதை பழக்கத்திலிருந்து விடுபட ஆலோசனை வழங்கியுள்ளோம். இது தவிர இந்த மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலை களில் பணிபுரியும் 5,000-த்துக்கும் மேலான தொழிலாளர்களுக்கு போதை பழக்கத்திலிருந்து விடுபட உதவும் மருந்துப் பொடியை வழங்கியுள்ளோம் என்றார் ஜாம்நகர் ரோட்டரி சங்கத்தின் தலைவர் நிஷா ஐயர். மேலும் ஆமதாபாதில் உள்ள கனோரியா மருத்துவமனையுடன் இணைந்து இளைஞர்களை போதை பழக்கத்திலிருந்து மாற்றுவது எப்படி என்பது குறித்து சமூக ஆர்வலர்களுக்கு டாக்டர் தபாவாலா மூலம் பயிற்சி அளித்தோம். கனோரியா மருத்துவமனை போதை பழக்கத்துக்கு அடிமையான நோயாளிகளுக்கு சிகிச்சையும் அளித்து வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்தி வந்தாலும், இதர ரோட்டரி சங்கங்களும் போதைப்பொருள்களுக்கு அடிமையாவதிலிருந்து இளைஞர்களை மீட்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறோம். உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இந்த பழக்கத்திலிருந்து விடுபடச் செய்வதற்கான மேஜிக் மிக்ஸ் முக்வாஸ் மருந்து விலை ஒரு பாக்கெட் அல்லது ஒரு டப்பா ரூ.15 லிருந்து ரூ.20-க்குள்தான். இதை நாம் வீட்டிலேயே தயாரித்துக்கொள்ளலாம். தயாரிப்பது எப்படி என்று மருந்து டப்பாவிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. பொது முடக்க காலத்தில் இதை அதிக அளவில் தயாரித்து விற்றுவருகிறோம். போதைப் பொருள் பழக்கத்திலிருந்து விடுபட நினைப்பவர்கள் எங்கள் மருத்துவமனைக்கு வந்து மருந்துப் பொடியை இரண்டு டப்பாக்கள் வாங்கிச் சென்று பயன்பெறலாம். வேண்டும் என்றால் அவர்களே வீட்டில் தயாரித்துக் கொள்ளலாம் என்கிறார் டாக்டர் கல்பனா.

DG அனீஷ் ஷா தெரிவித்த யோசனையின் பேரில் இந்த திட்டத்தை செயல்படுத்துமாறு வலியுறுத்தி இதர ரோட்டரி சங்கங்களுக்கும் கடிதம் எழுதியுள்ளோம். இதன் மூலம் சமூக சுகாதரத்தில் முன்னேற்றம் ஏற்படுவது மட்டுமின்றி புற்றுநோய் உள்ளிட்ட இதர நோய்கள் வராமலும் தடுக்க முடியும். இந்த மருந்து பொடியைத் தயாரிக்கும் செலவும் அதிகம் இல்லை. ரூ.1500 முதல் ரூ.2000 வரை முதலீடு செய்தாலே போதும். 100 பாக்கெட் மருந்துப்பொடிகளைத் தயாரிக்க முடியும்.

இதை ரோட்டரி சங்கங்கள் போதைப் பழக்கத்தை கைவிட விரும்புபவர்களுக்கு நேரிடையாகவும் அல்லது மருந்துக் கடைகளுக்கும் விற்கலாம். சிலருக்கு இதை இலவசமாக வழங்குவதன் மூலம் அவர்களே பின்னர் தங்கள் வீட்டில் இதைத் தயாரித்து பலன்பெற முடியும்.

ரூ.2,000 முதலீடு செய்தால் 100 பாக்கெட்டுகள் தயாரிக்க முடியும். மருந்துப்பொடி தயாரிக்க இலவங்கம், ஓமம், சீரகம், அரிசிமாவு, பெருஞ்சீரகம், இவற்றை சமமாக தலா 250 கிராம் எடுத்துக் கொண்டு அதனுடன் 50 கிராம்புகளைச் சேர்த்து மிக்ஸி அல்லது கிரைண்டரில் போட்டு அரைத்து பின்னர் சலித்து பாக்கெட்டுகளாக போட்டு விற்கலாம். இளைஞர்களை தீயபழக்கத்திலிருந்து மீட்கும் செயலில் நாமும் பங்குபெறலாமே என்கிறார் டாக்டர் கல்பனா. சரிதானே!■

ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர்.

உலக அமைதிக்காகக் கை கோர்க்கும் ரோட்டரி, வாழும் கலை அமைப்புகள்

கிரண் ஜெஹ்ரா

நோய்ப்பரவலுக்குப் பின் பிரபஞ்ச ஒருமைக்கான மறு கண்டறிதல், சேவை மற்றும் அமைதிபற்றிய இணைய உரையாடலில் RIPN சேகர் மேத்தா, ஆன்மிகக் குரு ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் ஆகியோர் விவாதித்த மையத் தலைப்பு, அமைதி.

வாழும் கலை அறக்கட்டளையும் ரோட்டரியும் பன்னாட்டு அமைதிக்காக இணைந்து பணியாற்றலாம் என்று மேத்தா தெரிவித்தார். இந்தியாவிலுள்ள காஷ்மீரிலிருந்து கொலம்பியா, ஈராக், சிரியா வரை ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்றிருந்த மக்கள் அமைதியின் பாதையை நாடுவதற்கு உங்கள் திட்டங்கள் ஒரு தாக்கத்தை உண்டாக்கியுள்ளன என்று வாழும் கலை அறக்கட்டளையைப் பாராட்டினார்.

ரோட்டரியின் அமைதித் தோழமைத் திட்டத்தைப் பற்றி ரவி சங்கர் அவர்களுக்கு விளக்கிய அவர், ஏற்கெனவே 1400 அமைதிப் போராளிகளை உண்டாக்கியுள்ள இந்த அமைதித் திட்டமும் உங்கள் அறக்கட்டளையும் இணைந்து பணியாற்றவேண்டும் என்று ஆலோசனை கூறினார்.

உலகை இன்னும் அமைதியான, மகிழ்ச்சியான ஓர் இடமாக ஆக்குவதற்காக நாம் நிச்சயம் இணைந்து பணிபுரிவோம் என்று பதிலளித்தார் ரவி சங்கர். உங்கள் இளைஞர் பிரிவான ரோடராக்டுடன் இணைந்து பணிபுரிய விரும்புகிறேன். என்னுடைய இளமைப்பருவத்திலிருந்தே நான் ரோட்டரியை அறிந்துள்ளேன், நீங்கள் உலகில் மிகச்சிறந்த சேவையாற்றியுள்ளீர்கள். கிராமப்புறங்களில் பேருந்து நிறுத்தங்களைக் கட்டுவதில் தொடங்கி, உலகெங்குமுள்ள மக்களை இணைப்பதுவரை, நீங்கள் ஓர் உலகச் சமூகத்துக்கான மாதிரியாக உள்ளீர்கள், என்றார் ரவி சங்கர்.

முடக்கத்தின் போது மன நலம் தொடர்பான ரோட்டரியின் பணிகளைப் பற்றி மேத்தா ரவி சங்கர் அவர்களுக்கு விளக்கினார். நாம் இப்போது காண்பதைவிட மன நலப் பிரச்னைகள் பெரிதாகப் போகின்றன. முடக்கத்தின் போது மக்கள் ஒன்று மனச் சோர்வு அடைகிறார்கள், அல்லது, தீவிரமடைகிறார்கள். ஒரு பக்கம் சினம், இன்னொரு பக்கம் அச்சம் நாம் நல்லறிவுள்ள ஒரு சமூகமாக இருக்கவேண்டுமென்றால், நாம் அனைவரும் இணைந்து பணியாற்றவேண்டும் என்றார் ரவி சங்கர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இன்றைக்கு, ஆண்டுதோறும் எட்டு லட்சம் மக்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஒட்டுமொத்த உலகமும் இதற்கான தீர்வுக்காகக் கீழை நாடுகளை நாடுகிறது என்றார். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு யோகாசனம், தியானம் மற்றும் மன நலன் சார்ந்த செயல்பாடுகளை அவர் பரிந்துரைத்தார்.

நோயைவிட, அதுபற்றிய அச்சத்தைதான் நாம் கூடுதலாகச் சமாளிக்கவேண்டும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர். முடக்கத்தின்போது நலன் மிக்க மனமும் விடுதலை கொண்ட மனநிலையும் வேண்டுமென்றால், அனைவரும் ஒன்றாகப் பணியாற்றவேண்டும் என்று ஆலோசனை கூறினார்.

Covid-19 உதவிச் செயல்பாடுகளுக்காகத் தலா 25,000 மதிப்புள்ள 150 பன்னாட்டு நல்கைகளை ரோட்டரி அறக்கட்டளை வழங்கியுள்ளதாக மேத்தா அவருக்குச் சொன்னார். இந்தியாவில், ரோட்டரியன்கள் PM CARES நிதிக்கு 50 மில்லியன் வழங்கியுள்ளார்கள், இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உள்ளூர்ச் சமூகங்களுக்கு உதவுவதற்காக அதே அளவு தொகையைச் செலவிட்டுள்ளார்கள்.■

வாரி வழங்கிய கமலம்மா

ரஷீதா பகத்

Covid-19 நோய்ப்பரவல் ஒரு புதிய சவாலைக் கொண்டுவந்த நேரத்தில், ஹெரிட்டேஜ் மைசூரு ரோட்டரி சங்கம், RID 3181, இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், அன்றாடக்கூலிகள், விற்பனையாளர்கள், பிச்சைக்காரர்கள், மற்ற நலிந்த மக்களுக்கு உணவு வழங்கத் தொடங்கியது.

மார்ச் 20 தொடங்கி, நகரின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கு நாள்தோறும் 500 உணவுப் பொட்டலங்களை வழங்கியது இச்சங்கம். ஒரு சிறிய இரக்கச் செயலாகத் தொடங்கிய இந்தத் திட்டம், விரைவில் ஓர் இயக்கமாகவே மாறிவிட்டது. காரணம், நண்பர்கள், உறவினர்கள், இளைஞர்கள், மாணவர்கள், முன்பின் தெரியாதவர்கள் என்று யார் யாரோ உழைப்பையும் பணத்தையும் கொட்டினார்கள் என்கிறார் சங்க உறுப்பினர் D M ராகவேந்திரா.

விரைவில், ரோட்டரியன்கள் தங்களுடைய அன்றாட வழங்கலை 2,400 உணவுப் பொட்டலங்களாக ஆக்கினார்கள். அடுத்த 40 நாட்களில் (மே 17 வரை) அவர்கள் கிட்டத்தட்ட 62,000 உணவுப்பொட்டலங்களை வழங்கியிருந்தார்கள். இதற்கான மொத்தச் செலவு, ரூ.18.35 லட்சம்.

விரைவில், அன்னதானம் என்று பெயரிடப்பட்ட இந்தத் திட்டத்தைப்பற்றிப் பலர் அறிந்துகொண்டார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், MLAக்கள், உயர்நிலைக் காவல்துறை, மாநகர அலுவலர்கள் போன்ற VIPக்கள் இவர்களுடைய சமையலறையைப் பார்வையிட்டார்கள்.

சூடான, சுவையான உணவை எங்கள் சங்க உறுப்பினர்களே அலுமினியப் பொட்டலங்களில் இட்டார்கள், இயந்திரத்தின்மூலம் அவற்றை மூடி முத்திரையிட்டார்கள். பின்னர் அந்த உணவு தேவையுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டது என்கிறார் சங்கத் தலைவர் தலக்காட் மஞ்சுநாத்.

ஒருநாள், சமைத்த உணவைச் சங்க உறுப்பினர்கள் சுறுசுறுப்பாகப் பொட்டலம் கட்டிக்கொண்டிருந்தபோது, 70 வயதுப் பெண் ஒருவர் அந்த வளாகத்துக்கு வந்தார், ஏழையைப்போல் தோன்றிய அவர் பசியோடு வந்திருக்கிறார் என்று நினைத்து நாங்கள் அவருக்கு

ஓர் உணவுப் பொட்டலத்தை வழங்கினோம். ஆனால், அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். சி றிது தயங்கியவர், கொஞ்சம் துணிவாகித் தன்னுடைய சேலை முந்தானையிலிருந்து எதையோ வெளியில் எடுத்தபடி பேசினார்: 30 நாட்களுக்குமேலாக எங்கள் பகுதியில் நீங்கள் எல்லாரும் உணவை வழங்கிக்கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். நானும் அதற்குப் பங்களிக்க நினைக்கிறேன். எனக்கு மாதம் ரூ.600 ஓய்வூதியம் வருகிறது, அதில் ரூ.500ஐக் கொண்டுவந்திருக்கிறேன். இது சிறிய தொகைதான் என்று எனக்குத் தெரியும். ஆனால், இதைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள் என்றார் என்று நினைவுகூர்கிறார் ராகவேந்திரா.

திகைத்துப்போன ரோட்டரியன்கள் அவருக்கு நன்றி தெரிவித்தார்கள். சிரமமான இந்த நேரத்தில் இந்தப் பணம் அவருக்குக் கண்டிப்பாகத் தேவைப்படும் என்றார்கள். அவரே இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளவேண்டும் என்று அவரைச் சம்மதிக்க முயன்றார்கள். ஆனால், நாங்கள் எவ்வளவோ முயன்றபோதும் அவருடைய மனம் மாறவில்லை. நாங்கள் அந்தப் பணத்தை ஏற்கவேண்டும் என்று வலியுறுத்தினார், ஆகவே, நன்றியுணர்வுடன் நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம், என்கிறார் அவர்.

இந்த நெகிழ்வான நிகழ்ச்சியை அவர் ஒரு ஃபேஸ்புக் பதிவில் எழுதினார், எங்கள் சங்க உறுப்பினர்களைப் பொறுத்தவரை, டாடாக்கள், அம்பானிகள், அஜிம் ப்ரேம்ஜி, நாராயண மூர்த்தி, மற்ற கோடீஸ்வரர்களுடைய நன்கொடையை விட அந்த மூதாட்டியின் நன்கொடை பெரியதாகத் தோன்றியது, என்று குறிப்பிட்டார். அந்தப் பதிவு வைரலாகப் பரவியது. இப்போது, கமலம்மா உள்ளூரில் மிகவும் புகழ்பெற்றுவிட்டார். அவருடைய தாராள மனப்பான்மைக்காகத் தொலைக்காட்சிச் சானல்களும் அச்சு ஊடகங்களும் அவரைப் பேட்டியெடுக்கின்றன.

கமலம்மாவைப்பற்றிய பின்னணித் தகவல்களைச் சங்கத் தலைவர் மஞ்சுநாத் கூறுகையில், ஒவ்வொரு

மேலே: *சங்கத் தலைவர் தலக்காட் மஞ்சுநாத் கமலம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார் பட்டயத் தலைவர் Kமஞ்சுநாத் அவர்களும் அருகில் உள்ளார்.*
எதிர்பக்கம்: *கமலம்மா தன் வீட்டு முன் ரோட்டரியினரை வரவேற்கிறார்.*
கீழே: Rtn. D M *ராகவேந்திரா உணவுப் பொட்டலங்களை தயார் செய்கிறார்.*

மாதமும் கமலம்மாவுக்கு ரூ.600 கைம்பெண்கள் ஓய்வூதியமாகக் கிடைக்கிறது. அவருக்கு மூன்று மகன்கள் உள்ளார்கள், ஆனால், அவர் தனியாகதான் வாழ்கிறார், ஏனெனில், தான் யாருக்கும் சுமையாக இருக்க விரும்பவில்லை என்று அவர்

எங்களிடம் தெரிவித்தார். அவருடைய இரக்கக் குணம் எங்கள் நெஞ்சைத் தொட்டது.''

இந்த உணவுகளைச் சமைப்பதற் காகவும் பொட்டலம் கட்டுவதற்காகவும் தன்னுடைய நிகழ்ச்சி அரங்கம், சமையலறை, அடுப்புகள் மற்றும் பாத்திரங்களை இலவசமாக வழங்கிய உள்ளூர்த் தொழிலதிபர் ராஜண்ணாவுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். முக்கியமாக, 40 நாட்களாக இந்த முயற்சியில் எங்களை ஆதரித்த சமையல்காரர்களுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கவேண்டும், அவர்கள் எல்லாரும் தங்களுடைய வழக்கமான சம்பளத்தில் ஒரு சிறு பகுதியைமட்டுமே பெற்றுக்கொண்டார்கள். சமைத்த உணவை மைசூரின் வெவ்வேறு பகுதிகளில் வழங்குவதற்குப் போக்குவரத்து ஊழியர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகராட்சி மற்றும் உள்ளூர் உறுப்பினர்கள் எங்களுக்கு உதவினார்கள்.

ஷ்ரமிக் ரயில்களில் பயணம் செய்கிற இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் தங்கள் சங்கம் உதவியதாகத் தொடர்ந்து குறிப்பிடுகிறார் மஞ்சுநாத்.

சிநேகா தொண்டு அறக்கட்டளை மற்றும் வலிக்குறைப்புப் பராமரிப்பு மையம் நடத்துகிற ஆதரவற்றோருக்கான பகல்நேரப் பராமரிப்பு மையத்தையும் இந்த நோய்ப்பரவல் நேரத்தில் இந்தச் சங்கம் ஆதரித்துள்ளது.■

நோய்ப்பரவலின்போது RC பாம்பேவின் மிகச்சிறந்த சேவை

ரஷீதா பகத்

கொரோனா நோய்ப் பரவலின் போது, அதைச் சமாளிப் பதற்காக மகராஷ்டிர அரசுக்கும், குறிப்பாக, Covid-19ன் கொடும் தாக்கத்தின்கீழ் திணறித் தடுமாறிக்கொண்டிருந்த மும்பை நகரத்துக்கும் உதவுவதற்காகத் துள்ளி எழுந்த இந்தியச் சங்கங்களில் ஒன்று, இந்தியாவின் பழைமையான ரோட்டரி சங்கம், ஒரு காலத்தில் JRD டாட்டாவை உறுப்பினராகக் கொண்டிருந்த சங்கமான பாம்பே ரோட்டரி சங்கம், RID 3141.

அதன் உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து குறைந்தது 19 வெவ்வேறு நடவடிக்கைகளைத் தொடங்கினார்கள். இவை, செயற்கை மூச்சுவிடல் கருவிகள், PPEகள், முகக்கவசங்கள், தூய்மைப்படுத்திகள், தடுப்பு மருந்துகள் போன்ற முக்கியப் பராமரிப்புக் கருவிகளை வழங்குதல், அனைத்துக்கும் மேலாக, மும்பையின் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், அன்றாடக் கூலியாட்கள் மற்றும் பிற ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு உணவு வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டவையாக இருந்தன.

இந்தச் சங்கம் இரண்டே மாதங்களில் ரூ.4.5 கோடிக்கும் மேற்பட்ட மதிப்புள்ள கோவிட் தொடர்பான உதவிப் பணிகளைச் செய்தது, இதற்காகச் சங்க உறுப்பினர்கள் தங்களுடைய சொந்த நிதியைத் திரட்டினார்கள், பெரு நிறுவனங்களிடமிருந்து அவர்களுடைய CSR செயல் பாடுகளின்கீழ் பங்களிப்புகளைப் பெற்றார்கள். இந்த நிதியின் ஒரு பகுதியாக, ரூ.90 லட்சம் என்கிற மிகப்பெரிய தொகையைப் பெரிய பன்னாட்டு IT நிறுவனமான ATOS வழங்கியதாகக் குறிப்பிட்டார் சங்க உறுப்பினர் மற்றும் TRF அறங்காவலரான குலாம் வாஹன்வடி. இந்நிறுவனத்தின் மனித வளப் பிரிவுத் தலைவரும் VPயுமான நாசிர் ஷேக் இதுபற்றிப் பேசுகையில்,

RC பாம்பேயுடன் இணைந்து பணியாற்றி அரசு மருத்துவ மனைகளுக்குச் செயற்கை மூச்சு விடல் கருவிகள் மற்றும் PPE பொதிகளை வழங்குவதில் நாங்கள் மிகவும் மகிழ்கிறோம், என்றார். நாங்கள் ஏற்கெனவே கேரளாவில் ரோட்டரியுடன் இணைந்து பணிபுரிந்தோம், அங்கு 2018 வெள்ளத்தால் இடம் மாற்றப்பட்ட குடும்பங்களுக்கு 28 வீடுகளை மீண்டும் கட்டிக்கொடுத்து, அவற்றை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு உதவினோம், இது ஒரு நல்ல அனுபவமாக அமைந்தது.

மே முதல் வாரம்வரை, இந்தச் சங்கம் 1,100,000க்கும் மேற்பட்ட மக்களுக்குச் சமைக்கப்பட்ட உணவுப் பொட்டலங்களை இலவசமாக வழங்கியிருந்தது. வீடற்ற, இடம்பெயர்ந்த தொழிலாளர்கள், அன்றாடக் கூலியாட்களுக்கு நாங்கள் நாள்தோறும் 30,000 உணவுப் பொட்டலங்களை வழங்குகிறோம், இவை எங்களால் இயக்கப்பட்டு மேற்பார்வையிடப்படுகிற ஒரு சமையலறையில் சமைக்கப்படுகின்றன என்கிறது இந்தச் சங்கம் வழங்கிய ஓர் இதழ் அறிக்கை.

இத்துடன், மும்பையிலிருந்து சுமார் நான்கு மணி நேரத் தொலைவில் இருக்கும் மலேகாவ்னில் ஊரடங்கு அமலில் இருந்த ஒரு பகுதிக்கு 40,000 உப்புமா மற்றும் போஹா உணவுப் பொட்டலங்களையும் இவர்கள் வழங்கியுள்ளார்கள். அத்துடன், மே 17 வரை ஒவ்வொரு நாளும் 1,000 சமைக்கப்பட்ட உணவுப் பொட்டலங்களையும் நாங்கள் வழங்குகிறோம்.'

மகராஷ்டிர அரசு நடத்தும் மருத்துவமனைகளுக்கு 52 செயற்கை மூச்சுவிடல் கருவிகளையும் இந்தச் சங்கம் வழங்கியுள்ளது. மே மாதத்தின் நடுப்பகுதிவரையில் இந்தச் சங்கம் மும்பை, சென்னை மற்றும் பெங்களூரிலுள்ள பல மருத்துவமனைகளுக்கு 11,250 PPEகள், மும்பையின் பல மருத்துவமனைகளுக்கு 1,150 N95 முகக் கவசங்கள் மற்றும் நல்ல எண்ணிக்கையிலான தொடுகையற்ற டிஜிட்டல் வெப்பமானிகள் மற்றும் ஆக்ஸிமீட்டர் நாடித்துடிப்பு இயந்திரங்கள், மும்பையின் சேரிப்பகுதிகளில் உள்ள சமூகக்

புலன் பெயர்ந்த தொழிலாளிகளுக்கு காலணிகள்.

கழிப்பறைகளைப் பராமரிக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு 1,200 முகக் கவசங்கள் மற்றும் பல நிறுவனங்களுக்கு 5,000 கை கழுவும் தூய்மைப்பொருள் பாட்டில்களை வழங்கியுள்ளது.

மன நல ஆலோசனை

மும்பைக் காவல்துறைக்கு உதவுவதற்காக, பல காவல் நிலையங்களில் காஃபி/தேநீர் வழங்கும் இயந்திரங்களை இச்சங்கம் அமைத்துள்ளது. இப்போதைய சூழலைக் கண்டு அழுத்தம் கொண்டவர்கள், அல்லது தங்கள் மன நலனைப்பற்றிப் பதற்றம் கொள்கிறவர்களுக்காக (அனைத்து இந்தியாவுக்குமான) ஒரு கட்டணமற்ற ஆலோசனை உதவித் தொலைபேசி எண்ணையும் நாங்கள் அமைத்துள்ளோம்; இந்த எண்ணை அழைப்பவர்களுக்கு 600க்கும் மேற்பட்ட பயிற்சிபெற்ற தன்னார்வலர்களும் ஆலோசகர்களும் உதவுகிறார்கள் என்றார் ஒரு குழு உறுப்பினர்.

RC கல்கத்தாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது மிகப் பழைய சங்கமான இச்சங்கம், டாடா நினைவு மருத்துவமனையுடன் ஒரு தொடர்ந்த உறவைக் கொண்டுள்ளது, கொரோனா நோய்த்தொற்று கொண்டவர்களுக்கு இந்த மருத்துவமனை சிகிச்சை வழங்குவதற்காக, ரூ.20 லட்சத்துக்கு மேல் மதிப்புள்ள 2,500 Covid-19 பரிசோதனைப் பொதிகளை இந்தச் சங்கம் வழங்கியது. KEM மற்றும் கூப்பெர் மருத்துவ மனைகளின் ஊழியர்களுக்கு 2,000 ஊட்டச்சத்துள்ள உணவுப் பொட்டலங்களையும் இந்தச் சங்கம் வழங்கியது.

மருத்துவமனை ஊழியர்களுக்கு திண்பண்டங்கள் தரும் ரோட்டரியினர்.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர் ஒருவருக்குக் குர்காவ்னிலுள்ள சில நண்பர்களிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர்கள் இடம்பெயரும் தொழிலாளர்களுக்குச் செருப்புகளை வழங்கி உதவவேண்டும் என்று விரும்பினார்கள்.

இது தொடர்பாக எங்களால் ஏதேனும் செய்ய இயலுமா என்று அவர்கள் கேட்டார்கள். தங்கள் வீடுகளை நோக்கி நெடுந்தொலைவுக்கு நடந்து செல்கிற தொழிலாளர் களுடைய கொப்புளம் வந்த வெறுங்கால்களுடைய புகைப்படங்களை அவர்கள் பார்த்திருக்கிறார்கள், அந்தத் தொழிலாளர்களுக்குச் செருப்புகளை வழங்க விரும்பியிருக்கிறார்கள். முடக்கம் காரணமாக மும்பையிலிருந்து செருப்புகளைப் பெறுவது மிகவும் கடினம், ஆகவே, அவர்கள் வேறு எங்காவது முயன்று பார்க்கலாம் என்று சொல்லிவிட்டார்கள் என்கிறார்.

ஒரு மணி நேரம் கழித்து, அதே குர்காவ்ன் நண்பர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது, அவர்கள் எப்படியோ 100 ஜோடி செருப்புகளைப் பெற்றுவிட்டார்கள், ஆனால், அவை தில்லிக்கு அருகிலுள்ள நோய்டாவில் இருந்தன. இந்தச் செருப்புகளை குர்காவ்னில் இருக்கும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குக் கிடைக்கச்செய்வதற்கு RC பாம்பே உறுப்பினர்களால் உதவ இயலுமா என்று அவர்கள் கேட்டார்கள்.

பாம்பே ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த நாங்கள் உடனே தொலை பேசியை எடுத்தோம், 20 நிமிடங் களுக்குள், தில்லியிலிருக்கும் இந்திய எதிர்கால அறக்கட்டளை யைச் சேர்ந்த கனிஷ்க் கௌர் என்பவர் நோய்டாவிலிருந்து அந்த 100 ஜோடி செருப்புகளைப் பெற்றுக்கொண்டு அவற்றை இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கிவிடுவதாகச் சொல்லிவிட்டார்!

இந்தச் சங்கம் தொடர்ந்து நிதி திரட்டிவருகிறது, அதன்மூலம் கோவிட் தொடர்பான செயல்பாடு களுக்கு நிதியளிக்கும், அவற்றை நிறைவேற்றும். உதவ விரும்புவோர் contact@rotaryclubofbombay.org என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்தச் சங்கத்தைத் தொடர்புகொள்ளலாம்.■

தானே மருத்துவமனையிற்கு வென்டிலேட்டர்கள்.

Rotary PEOPLE OF ACTION

148 தோல் ஒட்டு அறுவைச் சிகிச்சைகளை நடத்திய ரோட்டாபிளாஸ்ட் முகாம்

V முத்துக்குமரன்

முப்பத்தைந்து வயது பபிதா 20 ஆண்டுகளாக வலி, உளவியல் அழுத்தத்தைத் தாங்கிவந்தார், ஆக்ரா அருகிலுள்ள ஃபிரோஜாபாதிலிருக்கும் யுனைட்டி மருத்துவமனையில் நடைபெற்ற 10-நாள் ரோட்டாபிளாஸ்ட் மருத்துவ முகாம் அவருடைய தோற்றத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்வரை.

அவருடைய உடலின் மேற் பகுதியும் மையப்பகுதியும் கடுமையாக எரிந்திருந்தன, அவருடைய கைகள் முடங்கி யிருந்தன, அவருடைய கழுத்து இறுகி உறுதியாகியிருந்ததால், அவரால் தன்னுடைய முகத்தை அசைக்க இயலவில்லை. நாங்கள் அவருக்கு எட்டு மணி நேரத்துக்குப் பல தீவிரமான தோல் ஒட்டு அறுவைச் சிகிச்சைகளைச் செய்தோம், அவருடைய தோற்றத்தை ஓரளவு மேம்படுத்தினோம் என்றார் RC ஆக்ரா தாஜ்மகால், RID 3110ஐச் சேர்ந்த திட்டத் தலைவர் ராகுல் வத்வா.

பபிதா-வுடைய முகத் தழும்புகள் ஓரளவு ஆறுவதற்கு நாளாகும் என்றாலும், இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அவரால் தன்னுடைய கைகளை அசைக்க இயலுகிறது, தன்னைத் தானே கவனித்துக்கொள்ள இயலுகிறது. பல நீண்ட ஆண்டுகளுக்குத் துன்பத்தையும் வேதனையையும் அனுபவித்தபிறகு பபிதா-வால் இப்போது சிரிக்க இயலுகிறது.

இந்த முகாமுக்கு இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஆக்ரா தாஜ்மகால், ஃபிரோஜாபாத், ஆக்ரா வடக்கு மற்றும் ஷிகோகாபாத் RCகளைச் சேர்ந்த ரோட்டரியன்களைப் பொறுத்தவரை இது ஒரு மிக வெற்றிகரமான முகாமாகும். USஐச் சேர்ந்த அறுவைச் சிகிச்சை யாளர்கள், தன்னார்வலர்களைக் கொண்ட 25 உறுப்பினர் குழு, OPDல் நோய்கண்டறியப்பட்ட 185 பேரில் 82 நோயாளிகளுக்கு 148 பிளந்த உதடு,

ரோட்டோப்ளாஸ்ட் குழுவினர் திட்டத் தலைவர் ராகுல் வாத்வாவுடன் (வலது)

மேல்வாய் மற்றும் தீக்காயச் சிகிச்சை களை நடத்தியது என்றார் வத்வா. இந்தச் சங்கங்கள் மூன்றாம் ஆண்டாக இந்த ரோட்டாபிளாஸ்ட் முகாமை நடத்தி வருகின்றன. இந்த முகாமில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் யுனைட்டி மருத்துவமனையில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவுகள், பானங்கள் வழங்கப்பட்டன.

வெவ்வேறு உத்திரப் பிரதேச மாவட்டங்களிலிருந்து நெடுந்தொலைவு பயணம் செய்து வந்திருந்த இந்த நோயாளிகளிடம் நாங்கள் ஒரு பைசாகூடப் பணம் வசூலிக்கவில்லை. மருத்துவ முகாமுக்கு ஆறு மாதங்கள் முன்பாகவே சமூக ஊடகங்கள், நகரில், அருகிலுள்ள கிராமங்களில் வைக்கப்பட்ட விளம்பரப் பலகைகள், பதாகைகளின்வழியாக நடத்தப்பட்ட விரிவான விளம்பரப் பரப்புரை இதற்கு உதவியது. பெரும்பாலான நோயாளிகளுக்கு இவ்வளவு தொலைவு பயணம் செய்து முகாம் நடைபெறுகிற இடத்துக்கு வருவதற்கு வசதி இல்லை, ஆகவே, அவர்களுடைய போக்குவரத்துச் செலவையும் ரோட்டரி ஏற்றுக்கொண்டது.

இங்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் கௌடெமாலா, கொலம்பியா மற்றும் USஇலிருந்து வந்தார்கள், அமெரிக்காவைச் சேர்ந்த எட்டு ரோட்டரி தன்னார்வலர்கள் அவர்களுக்குச் சிறந்த ஆதரவை வழங்கினார்கள் என்றார் வத்வா.

வெற்றித் திட்டம்

ரோட்டாபிளாஸ்ட் குழுவினர் தங்களுடைய திட்டத்தை நிறைவேற்று வதற்காக மூன்று அறுவைச் சிகிச்சை அரங்கங்கள், அறுவைச் சிகிச்சை முந்தைய, பிந்தைய ICUக்கள் மற்றும் தொழில்நுட்ப, ஆதரவு ஊழியர்களை வழங்கி ஆதரித்தார் யுனைட்டி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ரவி பசௌரி. இதுபற்றிய தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட ரோட்டாபிளாஸ்ட் மருத்துவ இயக்குநர் அலெக்ஸ் மெக்குலோச், இந்த அளவுக்குத் தீக்காயம் பட்டோரை நான் இதற்குமுன் பார்த்ததே இல்லை என்றார். அடுத்த ஆண்டும் இந்த மதிப்புமிக்க திட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

திட்டத்தின் இயக்குநரும் ரோட்டாபிளாஸ்ட் இன்டர்நேஷனல் இயக்குநருமான Rtn டாம் ஃபாக்ஸ், தான் நிறைவேற்றியுள்ள பல திட்டங்களை நினைவுகூர்ந்தார், அவற்றுள் நல்லதைச் செய்வதற்கான சாத்தியம்'' மிகக் கூடுதலாக அமைந்த திட்டம், இந்த ஃபிரோஜாபாத் முகாம் தான் என்றார். காரணம், அடிப்படை நலப்பராமரிப்பைப் பெற இயலாத பெரும் எண்ணிக்கையிலான சமூகங்களுக்கு அவரால் ஆதரவளிக்க இயன்றது.

அறிவுறுத்தல் நிகழ்வு

நிறைவு நாளுக்கு முந்தைய நாளில், இந்த முகாமின்மூலம் பலன் பெற்றவர்களிடம் மருத்துவர்கள் தங்களுடைய கட்டுப்போட்ட காயத்தைக் கவனித்துக்கொள்வது எப்படி, வாரந்தோறும் அதற்கு ''டிரெஸ்ஸிங்'' செய்வது எப்படி என்றெல்லாம் விளக்கினார்கள். உள்ளூர் அறுவைச்சிகிச்சை வல்லுனரான டாக்டர் தீபக் குப்தா மற்றும் ஆதரவு ஊழியர் அஜய் பராஷர் ஆகியோர் நோயாளிகளுக்கு அறுவைச்சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பை வழங்கினார்கள்.

வத்வா தலைமையில் அமைந்த திட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் RC ஆக்ரா தாஜ்மகால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திவ்யா வத்வா, PDG லக்ஷ்மிகாந்த் பன்சால் (RC ஃபிரோஜாபாத்), PDG நரேஷ் சூட் (RC ஆக்ரா வடக்கு), Rtn அசோக் பாபு அகர்வால் (RC ஷிகோஹாபாத்) ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள்.■

60 வருடங்களின் சிறந்த செயல்பாடுகள்

ஜெய்ஸ்ரீ

RC மேட்டுப்பாளையம், RID 3202, தன்னுடைய 60வது ஆண்டுவிழாவைக் கொண்டாடுகிறது; இதை முன்னிட்டுச் சமூகத்துக்கு இன்னும் மிகுதியான நன்மைகளைச் செய்யவேண்டும் என்று சங்க உறுப்பினர்கள் ஊக்கம் பெற்றுள்ளார்கள்.

முதலில், நாங்கள் இந்த ஆண்டில் மூன்று பன்னாட்டு நல்கைகளைச் செயல்படுத்தியுள்ளோம்: முதலாவது, ஒரு மொபைல் மேமோகிராம் கருவியைப் பெறுவதற்கான, CSR-நிதி பெற்ற ஒரு GG, இரண்டாவது, அரசு மருத்துவமனையை மேம்படுத்துவது, மூன்றாவது, ஒரு பேரிடர் எதிர்வினை நல்கை என்கிறார் சங்கத் தலைவரும் சிறந்த குழந்தைகள் மருத்துவர் மற்றும் லேபரோஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை வல்லுனருமான டாக்டர் D விஜயகிரி. இந்த ஆண்டு ஜனவரியில் நைஜீரியாவில் சேவையாற்றிய VTT மருத்துவத் திட்டத்திலும் அவர் பங்கேற்றிருந்தார். அது ஒரு தனித்துவமான அனுபவம். குழந்தைகள் பிரிவில், 1,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிசோதிக் கப்பட்டார்கள், 50+ அறுவைச் சிகிச்சைகள் நிறைவேற்றப்பட்டன. நைஜீரியாவில் இலவச நலப்பராமரிப்பு ஏதும் இல்லை. ஆகவே, பணம் செலுத்தி அறுவைச்சிகிச்சை செய்ய வசதியில்லாத மக்கள், அவற்றை இயன்றவரை தள்ளிப்போடுகிறார்கள். இதனால், இந்தியாவில் நாங்கள் காண இயலாத, முற்றிய நிலை நோயாளிகள் பலருக்கு நாங்கள் சிகிச்சையளித்தோம் என்கிறார் அவர், அத்துடன், அறக்கட்டளைக்குப் பங்களிப்பதின் மதிப்பை அது நேரடியாகக் காட்டியது. ரோட்டரியன்கள் TRFக்குப் பெரிய அளவில் பங்களிக்காவிட்டால், GG சாத்தியமாகியிருக்காது.

மேம்பட்ட டிஜிட்டல் மேமோகிராஃபி கருவி இப்போது இறக்குமதி செய்யப்படுகிறது, அதற்கான வண்டி தயாராகிக் கொண்டிருக்கிறது. மாவட்டம் முழுவதுமுள்ள கிராமப்புற, நலிந்த பின்னணியைச் சேர்ந்த பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை வழங்கப்படும்.

இந்தத் திட்டம் 'பகுதிக் கூட்டு நிறுவன மாதிரி'யில் செயல்படுகிறது. இதில் முதலாவது, RC ஈரோடு காஸ்மோஸ், இது ஈரோடு பகுதிக்குச் சேவை வழங்கும் என்கிறார் திட்ட அறக்கட்டளையின் COO சுரேஷ் அனந்தகிருஷ்ணன்.

இந்தத் திட்டத்துக்கான மொத்தச் செலவு, $264,000. என்சீ அரோமாடிக்ஸ் என்ற சிறப்பு வேதிப்பொருள் மற்றும் மலர் நறுமணப்பொருள் தயாரிப்பு நிறுவனம் தன்னுடைய CSR நிதியிலிருந்து $33,800 பங்களித்தது, DG டாக்டர் A கார்த்திகேயன் DDFலிருந்து $20,000, தன்னுடைய தனிப்பட்ட நிதியிலிருந்து $15,000ஐ வழங்கி ஆதரித்தார். இருபத்தைந்து சங்க உறுப்பினர்கள் சேர்ந்து $71,000

DG A *கார்த்திகேயன், சங்கத்தலைவர் D விஜயகிரி,* Rtn *அனந்த கிருஷ்ணன் மற்றும்* RC *ஈரோடு காஸ்மாஸ் சங்கத்தினர் மேமோகிராஃபி வாகனம் பெறும்பொழுது.*

திரட்டினார்கள். மெக்சிகோவிலிருக்கும் RC ஜுவாரெஜ் காம்பெஸ்ட்ரெ பன்னாட்டுக் கூட்டு நிறுவனமாக இதில் இணைந்தது.

ஐயத்துக்கிடமான மார்பக நிலைகளைக் கொண்ட நோயாளி களுக்கு இலவச அறுவைச்சிகிச்சை களை வழங்குவதற்காக இந்தச் சங்கம் கோயம்பத்தூரிலிருக்கும் கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனையுடன் இணைந்துள்ளது. அத்துடன், கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய்க்கான இலவசப் பரிசோதனைகளை வழங்கவும் இந்தச் சங்கம் திட்டமிடுகிறது.

ஊரடங்கு பொழுது உணவு பொருட்கள் விநியோகம் செய்யும் சங்கத்தினர்.

CARE திட்டம்

COVID-19 நோய்ப்பரவல் உண்டானதைத் தொடர்ந்து, இந்தச் சங்கம் அதிவிரைவாகக் களத்தில் இறங்கியது, $44,000 மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தை உண்டாக்கி, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு 15 படுக்கைகள், 15 மல்ட்டி-பாரா மானிட்டர்கள், 2 ECG இயந்திரங்கள் மற்றும் டிஜிட்டல் X-கதிர் இயந்திரத்தைப் பெற்றுத்தந்தது. இந்த மருத்துவமனை மாதந்தோறும் 40,000 நோயாளிகளுக்கு சிகிச்சை யளிக்கிறது, இதில் 60 சதவிகிதப் பேர் BPL குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், 10 சதவிகிதப் பேர் நீலகிரி மலைகளைச் சேர்ந்த பழங்குடியினர் என்கிறார் அனந்தகிருஷ்ணன். ஒரு வாரத்துக்குள் ஒட்டுமொத்த நல்கையும் (CARE திட்டம் - Covid-19 And Recuperative Equipment, கோவிட்-19 மற்றும் நலனை மீட்கும் கருவி) விண்ணப்பம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்றும், ஜூன் மாதத்தின் நடுவில் மருத்துவமனையில் கூடுதல் வசதிகள் கிடைத்துவிடும் என்றார்.

முகக் கவசம், கண்ணாடிகள் மற்றும் KN-95 முகமூடியைக் கொண்ட சுமார் 650 பொதிகள் பேரிடர் எதிர்வினை நல்கை நிதிகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டன, அரசு வளாகங்கள் மற்றும் தனியார் வல்லுனர்களுடைய மருத்துவமனைகள் மற்றும் பல் சிகிச்சை மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தத் தனிப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றின் தாக்கத்தைத் தாண்டி, எங்கள் குழு ஒன்றாகச் செயல்பட்ட விரைவும், பிற நிறுவனங்களுடன் கூட்டு முயற்சிகளை அமைத்த திறமையும்தான் இந்த ஆண்டு எங்களை வெற்றிபெறச் செய்தது என்கிறார் விஜயகிரி. எடுத்துக்காட்டாக, மார்பகப் புற்றுநோய் என்பது ஒரு நுண்ணுணர்வுள்ள தலைப்பு என்பதால், திட்டத்துக்கான சமூக மதிப்பீடுகளைச் செய்வதற்கு மேட்டுப்பாளையம் இன்னர் வீல் சங்கம் இணைக்கப் பட்டது. பரிசோதனை முகாம்களை நடத்துவதற்காக இச்சங்கம் பிற NGOக்களுடன் MoUக்களைக் கையெழுத்திட்டுள்ளது.

சங்கத் தலைவர் D விஜயகிரி நைஜீரியாவில் (VTT) குழந்தை நோயாளி மற்றும் அவர் கவனிப்பவருடன்.

பிற பெருமைக்குரிய கணங்கள்

இச்சங்கம் இந்த ஆண்டு TRFக்காக $132,000 திரட்டியுள்ளது, அதன் பிற பெருமைக்குரிய நேரடிப் பணிகள், 2,000க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட METRO (மேட்டுப்பாளையம் ரோட்டரி) உயர்நிலைப் பள்ளி, ஓர் எரிவாயுச் சுடுகாடு மற்றும் ஆடிஸம் கொண்ட குழந்தைகளுக்கான ஒரு பள்ளி. இச்சங்கம் 2019லிருந்து காலாண்டுக்கு ஒருமுறை நடத்தும் LN-4 கை பொருத்தல் முகாம் மிகப்பெரிய கூட்டத்தை இழுக்கிறது, பேருந்து நிலையத்தில் ரோட்டரி சக்கரத்துடன் நிற்கும் உயரமான கடிகாரக் கோபுரம் அதன் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துகிறது.■

மிக விரைவாக இரண்டு பன்னாட்டு நல்கைகளைப் பெற்றுச் சாதனை படைத்த RID 3060

ரஷீதா பகத்

COVID-19 நோய்ப்பரவலை எதிர்த்துப் போரிடுவதற்காக, குஜராத், மகாராஷ்டிரத்தில் உள்ள மருத்துவ மனைகளுக்குச் செயற்கை மூச்சுவிடல் கருவிகளை வழங்குவதற்கான பன்னாட்டு நல்கையொன்றுக்கு விண்ணப்பித்தது RID 3060. ரூ.1.8 கோடி ($240, 533) என்கிற மிகப்பெரிய மதிப்புள்ள இந்த நல்கை, 30 மணி நேரங்களுக்குள் அங்கீகரிக்கப்பட்டது. எங்கள் மாவட்டம் விண்ணப்பம் செய்துள்ள, பெற்றுள்ள மிகப்பெரிய நல்கை இதுதான்'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் DG அனீஷ் ஷா.

இந்த GG விண்ணப்பம், இந்த இரு மாநிலங்களின் அலுவலர்கள் COVID-19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு வதற்காக, 31 மருத்துவமனைகளுக்குச் செயற்கை மூச்சுவிடல் கருவிகளை அவசரமாக வழங்குவதற்கான நிதியைக் கோரியது. RIDக்கள் 3060 மற்றும் 2430 இதைச் சமர்ப்பித்தன. TRFக்குத் தேவையான அனைத்துக் அளவுருக்கள், தகவல்களையும் அதில் சேர்த்தோம், பின்னர், வார இறுதியில் விண்ணப்பம் செய்தோம். பின்னர், திங்கட்கிழமை அந்த விண்ணப்பம் எடுத்துக்கொள்ளப்பட்டது, செவ்வாய்க் கிழமை அங்கீகரிக்கப்பட்டு விட்டது, என்றார் அவர். நல்கையைத் தொடங்கிய DGSC மனீஷ் ஷ்ராஃப், இந்த GGல் எங்களை வழிநடத்திய DRFC ஆஷிஷ் அஜ்மெராவுக்கு நன்றி. அத்துடன், TRF மற்றும் அறங்காவலர் குலாம் வாஹன்வடி, RI இயக்குநர்கள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வியின் ஆதரவுக்கும் நன்றி, என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

அமெரிக்காவும் இத்தாலியைப் போன்ற ஐரோப்பிய நாடுகளும் இன்னும் பல வளர்ந்த நாடுகளும் மிகச்சிறந்த மருத்துவ உள்கட்டமைப்பு கொண்டவை; ஆனால், அவைகூட இந்த வைரஸ் தாக்குதலைச் சமாளிக்கத் திணறுகின்றன. அப்படியானால், நோய்த்தொற்றை அடையக்கூடிய பெரும் எண்ணிக்கையிலானவர்களைக் கையாள்வதற்கு நம்முடைய இந்திய நலப் பராமரிப்பு அமைப்புகள் முற்றிலும் தயாராக இருக்காது என்று நாங்கள் உணர்ந்தோம்'' என்ற அவர், அதனால்தான்

தங்கள் மாவட்டம் விரைவாக இந்த நல்கைக்கு விண்ணப்பம் செய்யத் தீர்மானித்ததாகக் கூறுகிறார்.

ICMR (இந்திய மருத்துவ ஆய்வுக் கழகம்) செய்துள்ள ஆராய்ச்சியின்படி, கொரோனாவைரஸ் சூழல் மோசமாகக் கூடிய நிலையில் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான செயற்கை மூச்சு விடல் கருவிகள் இந்தியாவுக்குத் தேவைப்படலாம் என்பதை அறிந்த இந்த மாவட்டம், இந்த முக்கியமான கருவியை 31 மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்காக ஒரு GGஐ நிகழ்த்தத் தீர்மானித்தது. ஆனால், இந்தியாவில் நெருக்கடி நேரப் பராமரிப்பை வழங்கும் மருத்துவமனைகள் பெரிய, மிகப்பெரிய நகரங்களில்தான் உள்ளன. ஆகவே, கிராமங்கள், சிறு நகரங்களில் உள்ள வசதியற்ற நோயாளிகள்

தீவிரமான நோய்ச்சூழலைச் சந்திக்கும்போது, அவர்களை இங்கு கொண்டுவருவது அல்லது ஆதரிப்பது மிகப்பெரிய பிரச்னையாக உள்ளது, குறிப்பாக, COVID-முடக்கத்தின்போது இது இன்னும் சிரமம்.

இன்னொருபக்கம், அரசாங்கத்தால் நடத்தப்படும் பல ICUக்களில் வளங்கள் குறைவு, உள்கட்டமைப்புகள், கருவிகள், பயிற்சி பெற்ற ஆதரவு ஊழியர்கள் குறைவு. ஆனால், தனியார் நிறுவனங்கள் மற்றும் ரோட்டரியைப் போன்ற தன்னார்வலர் பிரிவினர் உதவிக் கரம் நீட்டும்போது, இன்னும் கூடுதல் எண்ணிக்கையான உயிர்களைக் காக்கும் வாய்ப்புகள் பலமடங்கு உயர்கின்றன.

RC வல்சாத்-க்கு இன்னொரு GG அங்கீகரிக்கப்பட்டது

இந்த மாவட்டத்துக்கான நல்கை மூன்று நாட்களுக்குள் அங்கீகரிக்கப் பட்டது. அதே நேரம், எங்கள் சங்கத்தின் இன்னொரு பன்னாட்டு நல்கை இதைவிட விரைவாக அங்கீகரிக்கப்பட்டது'' என்கிறார் DG ஷா. உள்ளூர்த் தொண்டு மருத்துவமனையான கஸ்தூரிபா மருத்துவமனைக்கு உயர்நிலைச் செயற்கை மூச்சுவிடல் கருவி மிகவும் தேவைப்பட்டது. அந்தக் கருவியை அமைக்கவும், நெருக்கடி நேரப் பராமரிப்புக் கருவிகளைப் பயன்படுத்துவதில் அங்குள்ள ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் என்னுடைய சங்கமான RC வல்சாத் தீர்மானித்தது.

வசதிக்குறைவான மக்களுடைய சதவிகிதம் மிகுதியாக உள்ள ஒரு மாவட்டத்தில் வல்சாத் நகரம் அமைந்திருக்கிறது என்றார் அவர். ஆகவே, இதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்த சங்கம், பிறந்த குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் என அனைவருக்கும் நெருக்கடி நேரப் பராமரிப்பை வழங்கக்கூடிய ஒரு 3-இன்-1 செயற்கை மூச்சுவிடல் கருவியை நன்கொடையாக வழங்கத் தீர்மானித்தது. இந்த மருத்துவ மனையை ஒரு தொண்டு நிறுவனம் நடத்துகிறது; உள்ளூர் மக்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய ஒரு நியாயமான கட்டணத்தை வசூலிக்கிறது. இங்கு திறமையும் தகுதியும் மிக்க மருத்துவர்கள், செவிலியர்கள், பிற தொழில்நுட்ப ஊழியர்கள் இருந்தபோதும், உயிர்களைக் காக்கும் நவீன மருத்துவக் கருவிகளைப் பெறுவதற்கான நிதியைத் திரட்டுவது தொடர்ந்த சவாலாக இருந்துவந்துள்ளது.

இந்த நல்கைக்கான மொத்தத் தொகை, ரூ.38.65 லட்சம் ($51,547) என்றும், ஃபிரான்ஸிலுள்ள RC பெல்லெவில்லெ லெஸ் 2 ஃப்ளெயுவெஸ், RID 1710உடன் இணைந்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.■

பஞ்சகனியில் புற்றுநோய் பரிசோதனை முகாம்

ரோட்டரி செய்திக்குழு

RID 3132-ன் கீழ் செயல்பட்டு வரும் RC பஞ்சகனி முதன்முறையாக மகாராஷ்டிர மாநிலம், சதாரா மாவட்டத்தில் உள்ள மலைவாழ் மக்களுக்காக புற்றுநோய் பரிசோதனை இலவச முகாமை நடத்தியது. ரோட்டரி சங்கத் தலைவர் ஷாஹ்ரம் ஜாவன்மார்டி தலைமையில் நடைபெற்ற முகாமில் 500-க்கும் மேலான மக்கள் கலந்துகொண்டனர்.

மும்பை அப்பல்லோ மருத்துவ மனை, நர்கீஸ் தத் அறக்கட்டளையுடன் இணைந்து பஞ்சகனி ரோட்டரி இந்த இலவச மருத்துவ முகாமை நடத்தியது. இதில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் எம்.பி.யும், அறக்கட்டளை நிறுவனரும் நிர்வாகியுமான பிரியா தத், ரோட்டரியின் உதவியில்லாமல் இந்த முகாமைச் சிறப்பாக நடத்தி யிருக்க முடியாது என்று கூறியதுடன், ரோட்டரியின் சேவைக்கும் ஒத்துழைப் புக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

ரோட்டரி சங்கத்தின் சில்வர் ஓக் மின்னணு பத்திரிகையை மக்களிடம் பிரபலப்படுத்துவதற்காக சங்கத் தலைவர் ஜாவன்மார்டி, பள்ளிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களைச் சந்தித்து ஆதரவு தேடினார். அப்போது ஜாவன்மார்டி மற்றும் அவரது குழுவினர் பள்ளிகளில் தொடங்கப்பட்டு செயல்படாமல் இருந்த இன்டராக்டர்கள் சங்கத்தை புதுப்பித்தனர். மேலும் 7 புதிய இன்டராக்ட சங்கத்தை உருவாக்கினர்.

RC பஞ்சகனி, 2021-2022ஆம் ஆண்டில் தனது வைரவிழாவை கொண்டாடவிருக்கும் இந்த நேரத்தில் இளைஞர் சங்கத்துக்கு 350 உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது என்கிறார் சங்கத்தின் செயலர் சுனில் காம்ப்ளே. ■

விவசாயத்தை இலாபம் கொழிக்கும் தொழிலாக மாற்றுவது

V முத்துகுமரன்

இந்திய விவசாயிகள் Covid நோய் தொற்றின் காரணமாக தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி மிகுந்த சூழல்களால் நிலைகுலைந்து போவார்களா அல்லது ஊரடங்கு தளரும் போது மேலும் உறுதியோடும் அறிவியல் உபகரணங்கள் மற்றும் விவசாய வழிமுறைகளின் துணையோடு வெற்றிகரமாக மீண்டெழுவார்களா? நாடெங்கும் விவசாயிகள் தற்கொலை செய்துக் கொள்வது ஒரு தொடர் நிகழ்வாக இருப்பது கொள்கை ரீதியான மாற்றங்கள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டு வதாக இருக்கின்றது. சென்னையை தலைமையிடமாக கொண்டு அமைந்திருக்கும் நேஷனல் ஆக்ரோ ஃபவுன்டேஷன் (NAF) கிராமப்புற இந்தியாவில் நீடித்து நிலையாக செயல்படக்கூடிய அளவிலான விவசாயத்தை நடைமுறையில் செயல்படுத்த, விவசாயம் சார்ந்து பல்லுயிர் சூழலை மாற்றியமைக்க அமைதியாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

பசுமை புரட்சியின் (1964-72) சிற்பி என்று பெரிதும் அறியப் படும் முன்னாள் உணவு மற்றும் விவசாயத்துறை அமைச்சர் C. சுப்பிரமணியத்தின் 90வது பிறந்த தினமான 30, ஜனவரி 2000-ல் ஒரு அறக்கட்டளையாக NAF தொடங்கப்பட்டது. ஆரோக்கியமான, கல்வியறிவு கொண்ட ஒரு வளமான கிராமப்புற இந்தியாவை உருவாக்க NAF முன்னணியில் இருந்து செயல்படுகிறது. ஆனால், CS போன்ற ஒரு நாடறிந்த தலைவருக்கே 1960-களில் விவசாயப் புரட்சிக்கான கனவை முன்னெடுக்க பெரும் சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. "மெக்சிக்கோவின் நார்மேன் போர்லாக் உருவாக்கியிருந்த, அதிக விளைச்சலை தரும் விதைகளை இறக்குமதி செய்வதற்கு எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியினரின் ஒரு பிரிவினர் என இருசாராரிடமிருந்தும் எனது தந்தை பெரும் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருந்தது" என்கிறார் NAF அறக்கட்டளை நிர்வாகி S S ராஜசேகர். பரிசோதனை முயற்சிக்காக அரசாங்கம் அவ்விதைகள் இறக்குமதிக்கு அனுமதி அளித்தால் நமது விவசாய நிலங்களை அயல் நாட்டு பூச்சிகளும் நோய்களும் தாக்க தொடங்கிவிடும் என்று இகு பெரும் பிரச்சினைக்கு

NAF நிர்வாகி ராஜசேகர் (இடதிலிருந்து 3வது) இல்லேடு கிராம விவசாயிகளுடன்.

CS, அமைதியாக தோற்றம் தரும் கிளர்ச்சிக்காரர்

சிதம்பரம் சுப்ரமணியம் பிறப்பால் ஒரு கிளர்ச்சிக் காரர். பண்பாடு அல்லது நம்பிக்கை என்ற பெயரில் முடிமறைப்பதை அவர் ஒரு போதும் பொறுத்தது இல்லை. அவர் மத்திய உணவு மற்றும் விவசாயத்துறை அமைச்சராக இருந்த போது அவரது பங்களிப்பை அனைவரும் அறிவர். அதை தொடர்ந்து 1964-72 காலம் வரை திட்ட கமிஷன் துணைத் தலைவராக இருந்தார். பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் முதன் முதலாக தேர்வு செய்யப்பட்ட முதல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் அவர் தான் என்பது பலருக்கும் தெரியாது. அவர் அந்த பதவியிலும் சிறப்பாக பணி செய்தார்.

அவரது மகன் S S. ராஜசேகர், RC சென்னை கிழக்கு (RID 3232) உறுப்பினர். சுதந்திரத்திற்கு பின் அவர் மேலவை உறுப்பினராக (1946-52) நியமிக்கப்பட்டார்.

சென்னை மாகாணம் முதல் தேர்தலின் போது ஒரு தொங்கு சட்ட மன்ற முடிவை எட்டிய போது, "எனது தந்தை இராஜாஜி பெயரை முதலமைச்சராக பரிந்துரை செய்தார். இரண்டு தொடர் ஆட்சிகளில் (1952-62) அவர் மாநில கல்வி, நிதி மற்றும் சட்ட அமைச்சராக இருந்திருக்கிறார்." 1954-ல் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் இராஜாஜி தோற்ற போது, பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் புதிய முதல்வர் K காமராஜ் அவர்களிடம் புதிய அமைச்சரவையில் CS தொடர்ந்து நீடிக்கும் படி வேண்டுகோள் விடுத்தார்.

சரண் சிங் பிரதமராக இருந்த போது (1979) பாதுகாப்பு அமைச்சராக 'பசுமை இராணுவம்' என்ற சிந்தனையை இகு முடுக்கிவிட்டார். 30-35 வயதில் இராணுவத்திலிருந்து விடை பெறும் இராணுவ வீரர்களுக்கு இமயமலை அடிவாரங்களில் குடிபெயரவும் விவசாய வனத்துறையில் இணைவதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது.

1966ல், CS நம்பிக்கையுடன் பாராளுமன்றத்தில் இந்தியா உணவு உற்பத்தியில் தன்நிறைவு அடைந்து விடும் என்று கூறினார். அவரது தொலை நோக்கு பார்வை 1971 ஆம் ஆண்டு நிறைவேறியது. பசுமை புரட்சியின் வெற்றியில் உணவு தானிய உற்பத்தியில் நாம் சாதனை அளவை எட்டினோம். பாரத ரத்னா விருது, பசுமை புரட்சியில் அவர் ஆற்றிய பங்கிற்காக 1998-ல் CS அவர்களுக்கு வழங்கப்பட்டது.

ராஜசேகர், அவரது தந்தையின் மறைவிற்கு பின் ஜனாதிபதி அப்துல் கலாம் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் தலைவர் M K ராஜூ ஆகியோரது வழிக்காட்டுதலில் NAFல் இணைந்தார்.

2010ல் CS அவரது நூற்றாண்டு நினைவு விழாவின் போது அன்பர் ஒருவர் ராஜசேகரிடம் ஒரே வரியில் அவரது தந்தையைப் பற்றி விளக்க கோர, அந்த மகன் அளித்த விளக்கம்: எனது தந்தைக்கு, உலகம் தான் நாடு, இந்தியா தான் அவர் தொகுதி.

வித்திடுவதாக கூறினர். அவையில் ஆதரவு இல்லாததால் 1964-65 CS அவர்கள், "இந்த நாட்டு விவசாயிகளை ஏற்று கொள்ளும் படி செய்ய முடிந்தது. ஆனால், பாராளுமன்றத்தில் எனது சகாக்களையும், உயரதிகாரிகளையும், அறிவியலாளர்களையும் என்னால் ஏற்று கொள்ளும் படி செய்ய இயலவில்லை" என வருத்தத்துடன் கூறினார்.

1980-ல் தேசிய அரசியலில் இருந்து ஓய்வு பெற்று சென்னை திரும்பிய CS அவர்கள் தான் ஆர்வம் கொண்டு வளர்த்த சிந்தனைகளுக்கும் திட்டங்களுக்கும் செயல் வடிவம் கொடுக்கத் தொடங்கினார். உணவு தானியங்களின் உற்பத்தி பசுமைப் புரட்சியின் விளைவாக அதிகரிக்கத் தொடங்கிய போது, 'விதையிலிருந்து தானியத்திற்கு' என்ற பழைய முறையை விடுத்து ஒரு புதிய உத்தியை வளர்த்தெடுப்பதற்கான நேரம் வந்தது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறைக்கான ஒரு சிந்தனை குழாமாக TIFAC அமைப்பு முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தலைமையின் கீழ் இயங்க, ஆலோசகர் M K ராஜூவை அறக்கட்டளை நிர்வாக குழு தலைவராகவும் கலாம் தலைமையில் எட்டு உறுப்பினர்கள் கொண்ட ஒரு வழிநடத்தும் மன்ற துணையோடு NAF-யை அமைக்க CS ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டார்.

தொடக்க காலத்தில் NAF ஒரு எளிமையான, நேரடியான செயல்திட்டத்தை கொண்டிருந்தது: விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை ரூ.10,000-ல் இருந்து குறைந்தபட்சம் ரூ.50,000 ஆக உயர்த்துவது; கிராமப் புறத்திலிருந்து நகர்புறத்திற்கான புலம் பெயர்தலை தடுப்பது அல்லது முடிந்தால் நகர்புறத்திலிருந்து மீண்டும் கிராமப்புறத்திற்கான புலம் பெயர்தலை ஏற்படுத்துவது என்றார் ராஜசேகர்.

ராஜசேகர் அறக்கட்டளையின் தலைமை நிர்வாகியாக நவம்பர் 11, 2000 பொறுப்பு ஏற்ற பின் 'சந்தைப்படுத்தலுக்கான நிலம்' என்னும் சொற்பிரயோகத்தை இரண்டாம் பசுமை புரட்சிக்காக NAF அறிமுகப்படுத்தியது. "விவசாயத்தை ஒரு உற்பத்தி திறன் மிக்க ஏற்றுக் கொள்ளும்படியான ஒரு தொழிலாக மாற்றுவது தான் எங்களது முதன்மை குறிக்கோள். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் வேலை வாய்ப்பை உருவாக்குவது எங்களது இரண்டாவது குறிக்கோள்", என்றார்.

கிராமப்புற வளர்ச்சிக்கான மையம் (CFRD)

CFRD-யை அமைப்பதற்காக தடைகளை கடந்து முன்னெடுப்பில் ஈடுப்பட்டதன் விளைவாக விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள் (SHGs), விவசாய நில மேற்பார்வையாளர்கள் மற்றும் வங்கி மேலாளர்களுக்கான ஒரு பயிற்சி மையம் தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தின் இல்லேடு கிராமத்தில் அமைக்க

வழி பிறந்தது. பிப்ரவரி 2001ல், NAF 24 விவசாயிகளை அழைத்து அவர்களுக்கு எந்தெந்த வகைகளில் எல்லாம் ஆதரவு அளிக்கலாம் என்று தயக்கமற்ற ஒரு கலந்துரையாடல் நிகழ்வை நடத்தியது.

"விவசாயத்தை கண்மூடித்தன மாக பின்பற்றாமல் சமூகத்திற்கும் தொழிலகங்களுக்கும் தேவைப்படும் மூலப்பொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்ய வேண்டும்" என்பதை விளக்குவதாக செயல்முறை விளக்கம் இருந்தது என்றார் ராஜசேகர்.

CFRDயில் ஒரு உயிரோட்டமான பாடத்திட்டம் பின்பற்றப்படுகிறது. அதில் 70 விழுக்காடு செயலறிவு பயிற்சியாகவும் 30 விழுக்காடு நூலறிவு கற்பிக்கும் வகுப்புக்களாகவும் இருக்கின்றன.

NABARD உதவியோடு நான்கு நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டங்களில் அவர்கள் பங்காற்றுகிறார்கள். ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, மஹாராஷ்ட்ரா, உத்தர பிரதேசம், ஒடிஷா, கர்நாடகா மற்றும் ஹரியானா என ஏழு மாநிலங்களில் 14 கட்டுப்பாட்டு பகுதிகள் (ஒவ்வொன்றும் குறைந்த பட்சம் 1500 ஹெக்டேர்கள்) இயற்கை வள மேலாண்மை பகுதிகளாக வளர்த் தெடுக்கப்படுகின்றன, என NAF-ன்

இயக்குனரான S V முருகன் விளக்குகிறார்.

இரண்டாவது புரட்சி

நீடித்து செயல்படக்கூடிய விவசாய கட்டமைப்பு உருவாக்குவதற்கான முறைகளை நாடெங்கும் உள்ள பல தொகுதிகளில் உள்ள கிராமங்களில் சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு NAF முன்னுதாரணமாக இருந்து பயிற்றுவிக்க முனைவதோடு இயற்கை வளங்களை கூடவே வளர்த்தெடுப்பது, நீர்வடியும் பகுதி மேலாண்மை மற்றும் அவர்கள் வாழ்வியல் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துவது என ஒரு முழுமையான அணுகுமுறையை கடைப்பிடிக்கிறது.

2016-17-ல் ஒடிஷாவின் சம்பல்பூர் மாவட்டத்தின் ஜெனுபாலி தொகுதி கிராமங்களில் ஒரு பெரும் நீர்வடிப்பகுதி மற்றும் நீடித்து செயல் படக்கூடிய விவசாய கட்டமைப்பு ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன என்கிறார் NAFன் செயல் இயக்குனர் M R ராமசுப்ரமணியன்.

கடந்த 20 ஆண்டுகளில், NAF எட்டு மாநிலங்களில் 770 கிராமங்களை அடைந்து ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதார நிலையை சிறந்த விவசாய முறைகளை பயிற்று வித்து உயர்த்தி பயனாளிகளின் திறன்களை வளர்ச்சிப் பெற செய்துள்ளது.■

நிவாரணப் பணி

உள்ளடங்கின் போது, Covid-19 *நோய் தொற்றுக்கு எதிரான முன்னணி செயல் வீரர்களை* NAF *அணுகி* 50,000 *முகக் கவசங்கள்,* 17,000 *கை உறைகள் மற்றும் கிருமி நாசினிகள்* (1,750 *லிட்டர்*) *ஆகியவற்றை சென்னை மற்றும் மதுரை காவல் துறையினர், சுகாதார பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு வழங்கியுள்ளது. ரேஷன் பொருட்கள் நிறைந்த பை* 3,500 *தின கூலி தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்டது.*

"எங்களது சமுக சமையல் கூடம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 600 *புலம் பெயர் தொழிலாளர்களுக்கு முன்று வேளை உணவு இரண்டு வாரங்களுக்கு வழங்கியது. மேலும், இந்த சமையல் கூடத்தில் சமைக்கப்பட்ட உணவு இராயபுரத்தில் இருக்கும்* 4,000 *மீனவர்களுக்கு வழங்கப்பட்டது"* என்றார் ராமசுப்ரமணியன். BNY *மெல்லோன் என்ற தகவல் தொழில் நுட்ப பெருநிறுவனத்திடமிருந்து மொத்தத்தில், ரூ.*1.5 *கோடி மதிப்பினாலான நிவாரணப் பொருட்கள் பல்வேறு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.*

தேர்ந்தெடுத்தலின் ஆற்றலைப்பற்றிக் கற்றுக்கொண்ட இன்டராக்டர்கள்

கிரண் ஜெஹ்ரா

RC பரோடா காஸ்மோபாலிடன், RID 3060 நடத்திய ரோட்டரி இன்டராக்ட் ஆண்டுத் திருவிழா (RIAF) 2020ல் குஜராத் முழுவதிலுமிருந்தும், மகாராஷ்டிரத்தின் பகுதிகளிலிருந்தும் 260 பதின்பருவத்தினர் பங்கேற்றார்கள். இவர்களுக்குத் தேர்ந்தெடுத்தலின் ஆற்றலைப் புரியவைப்பதற்காகத் தலைப்புகளும் விவாதங்களும் சிறப்பாக வரிசைப்படுத்தப்பட்டிருந்தன.

DG அனீஷ் ஷா இந்த மாணவர்களிடம் பேசும்போது, கடைசியில் எல்லாமே நீங்கள் தேர்ந்தெடுக்கும் விஷயங்களின் பலனாகதான் இருக்கும், ஆகவே, இதைப் புரிந்துகொண்டு சரியானவற்றைத் தேர்ந்தெடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்களை மேலும் கூடுதலாகப் பங்குபெறச் செய்வதற்காக, அவர்களுக்கு ஆர்வமூட்டுவதற்காக, நாங்கள் இளம் சாதனையாளர்களை அவர்களிடம் பேசச்செய்தோம் என்றார் இன்டராக்ட் மாநாட்டு தலைவர் கல்பா ரச்.

இவ்வாறு மாணவர்களிடம் பேசிய சாதனையாளர்கள், இன்டராக்ட் மாவட்டப் பிரதிநிதியும் 2019ல் பன்னாட்டுப் பதின்பருவ அழகிப் பட்டத்தை வென்றவருமான ஆயுஷி டோலகியா, யூரோ தொடர் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்ட முதல் இந்தியப் பெண் ஓட்டுநரான மிரா எர்டா மற்றும் பதின்பருவ CEOஆன உமங் ஷா. இந்தப் பேச்சாளர்கள் மூவரும் தொடர்ந்து பள்ளிக்குச் சென்ற படியே தங்களுக்குப் பேரார்வம் உள்ள துறைகளில் வெற்றியைச் சாதித்தவர்கள். இவர்கள் இதை எப்படிச் சாதித்தார்கள் என்று தெரிந்து கொள்வதற்குக் கிட்டத் தட்ட எல்லா மாணவர்களும் விரும்பினார்கள் என்றார் கல்பா.

இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள், அறிவியல் பொம்மைகள் திட்டம், வீணான வற்றைப் பிரித்தல் ஆகியவைபற்றிய தகவல்களைத் தரும் அமர்வுகள், "தேர்ந்தெடுத்தலின் ஆற்றல்"பற்றிய ஒரு திறந்த விவாதம், அந்தத் தலைப்பிலான ஒரு சிறு வீடியோப் போட்டி மற்றும் உறுப்புக் கொடைபற்றிய ஒரு நாடகம்.

ஆனால், அனைவரையும் மிகவும் நெகிழவைத்த நிகழ்ச்சி, கவிதா ஷா என்ற கலைஞர் நடத்திய ஒரு தனித்துவமான அச்சு உருவாக்கக் கலைச் செயல்பாட்டில் கேட்டல் குறைபாடு, பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் பங்கேற்றதுதான்.

RAC பரோடா காஸ்மோபாலிடனைச் சேர்ந்த ரோடராக்டர்கள் மாணவர்களுக்காக ஒரு புதையல் வேட்டைச் சவாலை நடத்தினார்கள், பின்னர் வெவ்வேறு இன்டராக்ட் சங்கங்களின் பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அம்ரேலியைச் சேர்ந்த ஓம் இன்டராக்ட் சங்கத்தின் கேட்டல் குறைபாடுள்ள இன்டராக்டர்கள் பாடிய நாட்டுப்பண்ணுடன் இந்தக் கருத்தரங்கம் நிறைவடைந்தது.■

DG அனில் ஷா, அவர் மனைவி ஸ்வாதி, மாநாட்டுத் தலைவர் கல்பா ராச் மற்றும் மாவட்ட இன்டராக்ட் தலைவர் ஆயுஷி டோலிக்கியா, இன்டராக்ட் மாநாட்டில்.

கோர்க்கர் போராட்டத்தை நினைவுபடுத்திய "உம்பன்" புயல்

டெபி பாத்ரா

டெபி பாட்ரா

கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தின் நான்காவது கட்டத்தில் வங்கக்கடலில் மையம் கொண்ட உம்பன் புயல் (Amphan என்ற ஆங்கிலச் சொல்லை உம்பன் என்றுதான் உச்சரிக்க வேண்டும் என்று வானிலை ஆய்வு மையத்தினர் கூறுகின்றனர்.) மேற்கு வங்கத்தில் பேரழிவை ஏற்படுத்தி விட்டது. கொரோனா தொற்று பீதியால் மக்கள் வாழ்வா சாவா என்ற நிலையில் உயிரை கையில் பிடித்துக்கொண்டு வாழ்ந்து வரும் நிலையில் உம்பன் சூப்பர் புயல் நூறாண்டுகளில் இல்லாத ஒரு துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

சூப்பர் புயல் தாக்கப்படுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன், புயல் திகாவுக்கு தெற்கே 600 கி.மீ. தொலைவில் மையம் கொண்டிருந்த போது அதன் வேகம் மணிக்கு 270 கி.மீ. ஆக இருக்கும் என்று தொலைக்காட்சி செய்திகள் எச்சரித்தன. எனினும் புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 190 கி.மீ. வேகத்தில் சூறாவளிக்காற்று வீசும்; கொல்கத்தாவில் மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

உம்பன் புயல் தாக்குவதற்கு ஒருநாள் முன்பு அதாவது மே 19-ஆம் தேதி புயலுக்கு முன் அமைதி என்று சொல்லுவார்களே அதுபோல்தான் இருந்தது. பிற்பகலில் பலத்தகாற்று வீசியது. கருமேகங்கள் சூழ்ந்து லேசான மழைத்தூறல் இருந்தது. அதுவே அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெளிவுபடுத்தியது.

சூப்பர் புயல் கரையைக் கடக்கவிருந்த அன்று காலையில் பருவமழை போல்தான் இருந்தது. பிற்பகலில் சூறைக்காற்று வீசியது. புயல் கொல்கத்தாவுக்கு தெற்கே 100 மீ. தொலைவில் கரையைக் கடக்கும் என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஹால்தியாவில் உள்ள தொழிற்சாலைகளுக்கு ரெட் அலர்ட் அறிவிக்கப்பட்டது. அடுத்த ஒரு மணி நேரத்தில் தொழில்நகரத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இந்தப்பகுதி புயல் பாதிப்பு இல்லாத பகுதி என்று சொல்லப்பட்டாலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாக தகவல்கள் வந்தன.

மாலை 5 மணி அளவில் கொல்கத்தாவை நோக்கி புயல்

வந்தது. உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சூறாவளிக்காற்றில் மின்கம்பங்களும், மரங்களும் அடியோடு சாய்ந்தன. செல்போன் தொடர்புகளும் செயலிழந்தன.

மாலை 6 மணி அளவில் காற்றின் வேகத்தால் ஜன்னல் கதவுகள் அடித்துக் கொண்டன. வெளியில் என்ன நடக்கிறது என்று பார்க்க முடியாத சூழ்நிலை.

சுமார் 3 மணிநேரம் சூறைக் காற்றால் கொந்தளிப்பான நிலை நிலவியது. எங்குபார்த்தாலும் ஓரே இருள். டி.வி.யும் இல்லை, செல்போனும் இல்லை. வேறு வழியில்லாமல் புயல், சூறாவளி எப்போது ஓயும் என்று காத்திருக்க வேண்டிய சூழ்நிலை.

இரவு 10 மணிக்கு காற்றுக்காக வீட்டின் ஜன்னலைத் திறந்தேன். அப்போது தான் இயற்கையின் சீற்றத்தை உணர முடிந்தது. குளிர்ந்த காற்று வீசியது. அப்போது என் மனது நான் தெற்கு 24 பர்கானா மாவட்டத்தில் ஆட்சியராகப் பணியாற்றிய காலங்களை அசைபோட்டது. அப்போது வந்த புயலின்போது அவசரகால நடவடிக்கைகளை மேற்கொண்டதும் நினைவுக்கு வந்தது.

குளிர்ந்த காற்று டார்ஜீலிங்கில் உள்ள குளிர் சூழ்நிலையை நினைவு படுத்தியது. அங்குதான் என் வாழ்க்கையின் சுகமான நாட்களையும், மோசமான நாட்களையும் நான் கழிக்க நேர்ந்தது. தனி மாநிலம் கோரி கோர்க்காலாந்து விடுதலை முன்னணியினர் போராட்டம் நடத்தியதும் நினைவுக்கு வந்தது.

1986-89-க்கு இடைப்பட்ட காலத்தில் கோர்க்கா தேசிய விடுதலை முன்னணியினர் தனி மாநிலம் கோரி நடத்திய போராட்டம் உச்சத்தில் இருந்த நேரம். பந்த் நேரத்தில் (ஒரு சமயத்தில் 40 நாள்கள் தொடர்ந்து பந்த் நடந்தது.) சில சமயங்களில் வீட்டில் தனிமையில் ஜன்னல் அருகில் உட்கார்ந்திருப்பேன். மங்கலான நிலா வெளிச்சத்தில் கஞ்சன்ஜங்கா மலைத் தொடரை பார்த்து ரசித்துக்கொண்டிருப்பேன். வெளியில் குண்டுவெடிப்பு சப்தம் அமைதியை சீர்குலைத்தாலும் மனது என்னவோ இயற்கைய ரசித்துக் கொண்டிருக்கும்.

உம்பன் சூப்பர் புயலின் கோரத் தாண்டவம் என்னை 1987 ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் தேதிக்கு அழைத்துச் சென்றது. முதல் நாள் இரவுதான் DIG ஹண்டா, நான், 2 IPS அதிகாரிகள் மற்றும் 150 போலீஸ் படையினர் சிலிகுரியிலிருந்து காளிம்போங் நோக்கி இரவு 11 மணிவாக்கில் பயணமானோம்.

முதல் நான்கு வாகனங்களில் நாங்கள் சாதாரண உடையில் பையில் ரிவால்வருடன் 10 மைல் தொலைவில் உள்ள காளிம்போங் நோக்கிச் சென்றோம். மற்றவர்கள் எங்களைப் பின்தொடர்ந்தனர். அங்கு தங்கியிருக்கும் கோர்க்கர் தலைவர் C K பிரதான் இருப்பிடத்துக்கு அதிரடியாகச் சென்று அவரை கைது செய்வது தான் எங்கள் திட்டம். கோர்க்கா விடுதலை முன்னணியின் தலைவரான பிரதான் சாதாரண மனிதனல்ல. அவனது பெயரைச் சொல்லவே பலரும் அஞ்சுவார்கள். ராபின்ஹுட் போன்ற நெஞ்சுறுதி கொண்ட அவனுக்கு ஏராளமான தொண்டர்கள் இருந்தனர். மாலை 5 மணிக்கு அந்த இடத்தை அடைந்தோம். காரிலிருந்து இறங்கினோம். சாலை யிலிருந்து 200 மீட்டர் உயரமுள்ள மலைப்பகுதியில் அவரது வீடு இருந்தது. எங்களில் 6 பேர் மட்டும் சப்தம் இல்லாமல் மலையேறி அவரது இருப்பிடத்தை அடைந்தோம். இரண்டு அதிகாரிகள் வீட்டின் முன்கதவை உடைத்துக்கொண்டு அதிரடியாக உள்ளே நுழைந்தனர். ஆனால், கண்ணிமைக்கும் நேரத்தில் பிரதான் பின்புற ஜன்னல் வழியாக ஏறிக்குதித்து தப்பிவிட்டான். எங்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.

அடுத்த சில நாள்களுக்கு காளிம்போங்கில் முகாமிட முடிவு செய்தோம். முன்னாள் ராணுவத்தினர்கள் தலைமையிலான போராட்டக்குழு அந்த இடத்தில் தங்கள் அதிகாரத்தைச் செலுத்திவந்த நிலையில் அதை எங்கள் கட்டுக்குள் கொண்டுவர நாங்கள் அங்கு முகாமிட வேண்டியிருந்தது. சாலைகளில் எங்கு பார்த்தாலும் கோர்க்க தேசிய விடுதலை முன்னணியின் கொடிகள்தான் பறந்து கொண்டிருந்தன.

நாங்கள் தானாவை அடைந்தோம். வெளியில் 120 மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரும் மாநில போலீஸாரும் நிறுத்தப்பட்டிருந்தனர். உள்ளூர் மக்களிடம் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தும் சமிக்ஞையாகவே இது இருக்கும் என நினைத்தோம். ஆனால், உண்மை நிலை வேறாக இருந்தது. வனப்பகுதிகளுக்கு ராணுவத்தினர் செல்லும்போது அணியும் உடையையே உள்ளூர் மக்கள் அணிந்திருந்தனர். எங்களை அவர்கள் சட்டை செய்யவே இல்லை.

இளம்வயது சிறுவர்கள் இருவரை ஹண்டா வழிமறித்து அவர்கள் பையில் கையைவிட்டு குண்டுகள் இருப்பதைப்

உம்பன் புயலில் பாதிக்கப்பட்ட ஒரு வாகனம்.

GNLF *தலைவர் சுபாஷ் கீசிங் அவர்களுடன் டெபி பாட்ரா (இடது).*

பார்த்ததும் அவர்களிடம் சத்தம் போட்டார். நான் அவர்களை அடித்தேன்.

அவ்வளவுதான். ரிசர்வ் போலீஸ் படையினர் எங்கள் உத்தரவுக்குக் காத்திராமல் கண்ணில் பட்டவர்கள் மீது எல்லாம் தடியால் அடித்தார்கள். இதைத் தொடர்ந்து கடைகள் மூடப்பட்டன. கற்கள் வீசப்பட்டன, பலர் கைது செய்யப்பட்டனர்.

அடுத்த நான்கு மணி நேரத்தில் நடந்த சம்பவங்களை அவ்வளவு எளிதில் மறக்க முடியாது. ஒருவர் தனது பெயரை காலு என தெரிவித்ததும் மற்றொருவர் அவர், பிரதானின் கார் டிரைவர் என்று தெரிவித்ததும் அவர் மீதும் தடியடி நடந்தது. வலியால் துடித்த அந்த நபரிடம் நான் நேபாள மொழியில் பேசுகையில், தாம் பிரதானின் டிரைவர் அல்ல, நீங்கள் தேடும் நபர் நான் அல்ல என்று தெரிவித்தார். ஒரு அப்பாவியை அடித்துவிட்டோமே என்று பின்னர் வருந்தினேன்.

பிற்பகலில் எங்களின் போலீஸ் படைகளை வைத்து இயல்பு நிலை திரும்பச் செய்துவிடலாம். கோர்க்க தேசிய விடுதலை முன்னணியினரை கைது செய்துவிடலாம் என திட்டம்போட்டோம். ஆனால் இரவில் நிலைமை மாறிவிட்டது. மலைப்பகுதிகளிலிருந்து நாங்கள் நின்றுகொண்டிருந்த சாலைப்பகுதியை நோக்கி வெடிகுண்டுகள் பறந்தன. இந்தத் தாக்குதலில் சிலர் மாண்டனர், சிலர் கைது செய்யப்பட்டனர்.

பின்னிரவில் தானாவுக்கு எதிரில் உள்ள ஹோட்டலில் தங்க முடிவு செய்தோம். ஆனால், ஊழியர்கள் எங்களைப் புறக்கணிக்கும் விதத்தில் அங்கிருந்து சென்றுவிட்டனர். உள்ளூர் அல்லாத ஊழியர்கள் இருவர் மட்டும் அங்கு இருந்தனர். அவர்களில் ஒருவரை மிரட்டி உணவு சமைக்கச் சொன்னோம். நடுஇரவில் டின்னர் சாப்பிட ஒன்றாக உட்கார்ந்தபோது காதை அடைக்கும் வெடிசப்தம் கேட்டது. ஒரு குண்டு வெடித்ததில் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து அதன் துகள்கள் எங்கள் மேலே வந்து விழுந்தது. நல்லவேளையாக யாருக்கும் காயம் இல்லை. நாங்களும் உள்ளே இருந்தபடியே வெளியே நோக்கி துப்பாக்கியால் சுட்டோம். எந்த பதில் நடவடிக்கையும் இல்லாததால் மீண்டும் சாப்பிட உட்கார்ந்தோம். ஆனால், அப்போது திடீரென மீண்டும் துப்பாக்கிக் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. ஏதோ ஒன்று நடக்கப்போகிறது என்று நினைத்தோம்.

இருதரப்பிலும் சிறிது நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. பின்னர் அவர்கள் ஹோட்டலை தகர்க்க திட்டமிட்டது தெரியவந்தது. மிகவும் பதற்றத்துடனேயே அன்றைய இரவை கழித்தோம்.

உம்பன் புயல் 1987 பிப்ரவரி 18-ஆம் தேதியை எனக்கு நினைவு படுத்தியது என்று சொன்னேன் அல்லவா. அன்று நான் காரை ஓட்டினேன். எனது அருகில் DIG உட்கார்ந்திருந்தார். மற்றவர்கள் பின்சீட்டில் அமர்ந்திருந்தனர். இரவு முழுவதிலுமான தேடுதல் வேட்டைக்குப் பிறகு நாங்கள் திரும்பிக்கொண்டிருந்தோம். எங்களுக்குப் பின்னாலேயே போலீஸார் 24 வாகனங்களில் வந்து கொண்டிருந்தனர்.

மிரிக் என்ற இடத்துக்கு 5 கி.மீ. முன்னால் போராட்டக் காரர்கள் மறைந்திருந்து தாக்கினர். எங்களது காரை நோக்கி ஒரு பெரிய பாறையை உருட்டிவிட்டனர். மலை உச்சியிலிருந்து ஆயிரம் அடி பள்ளத்தில் உருட்டிவிடப்பட்ட பாறை எங்களது காரின் வலது பக்க பின்கதவில் மோதிவிட்டு 4 ஆயிரம் அடி பள்ளத்தில் விழுந்தது. நல்லவேளை யாருக்கும் காயம் இல்லை. உடனே நான் மற்றவர்களிடம், கடந்த 45 நாள்களில் நாம் சாவின் பிடியிலிருந்து மூன்றாவது முறையாக தப்பியிருக்கிறோம் என்று ஜோக்காகச் சொன்னேன்.

ஒவ்வொரு முறை நான் பங்களாவை விட்டு வெளியில் செல்லும்போதெல்லாம் யாரோ துப்பாக்கியால் சுடுவதுபோன்ற பிரமை என்மனதில் எழும். அந்த 28 மாத கால கோர்க்கர் போராட்டத்தின் போது நாங்கள் தினமும் உயிரை கையில்பிடித்துக்கொண்டுதான் வாழ்நது வந்தோம். அந்த நாட்களை என் வாழ்நாளில் மறக்க முடியாது என்றார் டெபி பத்ரா.

எழுத்தாளர் முன்னாள் IAS அதிகாரியாவார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடகுப் பகுதியில் மேலும் 25 வீடுகள் வழங்கப்பட்டன

ரஷீதா பகத்

கொரோனா நோய்ப் பரவல், முடக்கத்துக்கு நடுவில், கர்நாடகத்திலிருக்கும் குடகுப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்குத் தாங்கள் அளித்த வாக்குறுதியை RID 3181ன் ரோட்டரியன்கள் நிறைவேற்றினார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்னால் இந்தப் பகுதி மற்றும் கேரளாவின் பல பகுதிகளிலும் உள்ள மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது நினைவிருக்கலாம். மே 10, 2020 அன்று நாங்கள் குடகிலிருக்கும் கர்கந்தூர்-மாதாப்பூர் பகுதியைச் சேர்ந்த மேலும் 25 பலன்பெறுவோர்க்கு முழுமைசெய்யப்பட்ட வீடுகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் வழங்கினோம். குடகை மறுகட்டமைப்போம் என்கிற எங்களுடைய திட்டத்தின் (ரூ 2.56 கோடி செலவில் 50 வீடுகள்) இரண்டாவது கட்டமாக அமைந்த வீடுகள் இவை என்றார் திட்டத்தின் தலைவர் PDG ரவி அப்பாஜி.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் ஜூன் 2019ல் நிறைவேற்றப்பட்டது என்பதையும் அவர் நினைவுகூர்ந்தார். அப்போது இந்த மாவட்டம் பலன் பெறுவோர்க்கு 25 வீடுகளை PRIP கல்யாண் பேனர்ஜி முன்னிலையில் ஒப்படைத்தது. இந்தத் திட்டம், 'இந்திய, மனித நேயத்துக்கான வாழ்விடம்' என்ற அமைப்புடன் இணைந்து நிறைவேற்றப்பட்டது.

இந்த 50 குடும்பங்களும் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதை 'ரோட்டரி குடகை மறுகட்டமைப்போம் RID 3181 அறக்கட்டளை'யின் தலைவரான IDPG P ரோஹிநாத் விளக்கினார், 'மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், மிகவும் தேவையுள்ளவர்கள் ஆகிய அடிப்படைகளில், வாழ்விடத்தைச் சேர்ந்தவர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் இணைந்து இவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.' ஒவ்வொரு வீடும் சொந்த நிலத்தில் கட்டப்பட்டிருப்பதால், அந்த நிலமும் பலன் பெறுவோருக்குச் சொந்தமாகும்.

PRIP *கல்யாண் பானர்ஜீயுடன்* PDGs R S *நாகர்ஜீன்,* K *கிருஷ்ண ஷெட்டி,* P *ரோஹிநாத், தேவ்தாஸ் ராய், திட்டத்தலைவர்* PDG K *ரவி அப்பாஜி மற்றும்* DGE *ரங்கநாத் பட்.*

ஒவ்வொரு வீட்டையும் கட்டுவதற்கு ரூ.5.05 லட்சம் செலவானதாக அப்பாஜி தெரிவித்தார், இதற்கான மொத்தத் தொகை (ரூ.2.56 கோடி), நன்கொடையாளர்கள், ரோட்டரியன்கள் மற்றும் இந்தியா, வெளிநாட்டைச் சேர்ந்த நண்பர்களிடமிருந்து திரட்டப்பட்டது. PRIP பேனர்ஜி, அப்போதைய RI இயக்குநர் C பாஸ்கர் ஆகியோர் இதை ஊக்குவித்தார்கள், அனைத்து மாவட்ட ஆளுநர்களும் இதை ஆதரித்தார்கள். ரோட்டரியின் மிகச் சிறந்த கொடையாளரும் சமூக முயற்சிகளுக்கான ஆதித்ய பிர்லா அறக்கட்டளையின் தலைவரான ராஜஸ்ரீ பிர்லாவும் இதை ஆதரித்தார்.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில், வீடுகள் பலன் பெறுவோரிடம் ஒப்படைக்கப்பட்டன; ஆனால், இந்தமுறை, கொரோனா முடக்கம் காரணமாக முறையான மேடை நிகழ்ச்சி, அழைப்பிதழ்கள் அல்லது பிற ஏற்பாடுகள் எவையும் இல்லை. அதனால் என்ன? பலன்பெறுவோர் இயன்றவரை விரைவாகத் தங்கள் புதிய வீடுகளில் வாழ்வதுதானே முக்கியம்? ஆகவே, ஓர் எளிய பரிமாற்றத்தின்மூலம் நாங்கள் இதைச் சாத்தியமாக்கினோம். வீட்டு உரிமையாளர்கள் இந்த ஆண்டுக்கான மழைக்காலம் தொடங்குமுன் தங்கள் வீடுகளில் குடியேறுவது முக்கியம்'' என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

இந்தத் திட்டத்தை, இந்திய, மனித நேயத்துக்கான வாழ்விடம் மற்றும் அபிவ்ருத்தி குழுமம் இணைந்து செயல்படுத்தின.■

ஓர் 'அயன்மேன்' சங்கத் தலைவர்

ஜெய்ஸ்ரீ

நாம் நாள்தோறும் சந்திக்கிற மனிதர்களிலிருந்து இந்தச் சங்கத்தலைவர் மிகவும் மாறுபட்டவர், இவருடைய வயது முப்பதுகளில், இவருக்கு விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம், எந்த அளவுக்கு என்றால், மாரத்தான்களில் ஓடி, "அயர்ன்மேன்" (இரும்பு மனிதர்) என்ற பட்டத்தைப் பெறும் அளவுக்கு! NCDக்களைத் தடுத்து நிறுத்துவதற்காக எல்லாரும் தங்கள் உடற்தகுதியைக் கவனிக்கவேண்டும் என்று மக்களைத் தூண்டுகிற ரோட்டரியின் சமீபத்திய திட்டமான நேர்வித நலன் திட்டத்துக்கு இவர் முக்கியத்துவம் வழங்குகிறார்.

நிகேத் தோஷி (33) ஓர் மூன்றாம் தலைமுறை ரோட்டரியன், தொடங்கி ஓராண்டே ஆகிற RC கோல்ஹாபூர் எவால்வ், RID 3170ன் பட்டயத் தலைவர். அவருடைய தந்தையான ராஜேந்திர (ராஜூ) தோஷி 1999-2000ல் மாவட்ட ஆளுநராக இருந்தார், பாட்டனார் மோதிபாய் தோஷி 1977-78ல் மாவட்டத்தை வழிநடத்தினார்.

அக்டோபர் 2019ல், கோவா-வில் நடைபெற்ற இந்தியாவின் முதல் அயர்ன்மேன் டிரையத்லான் போட்டியில் அயர்ன்மேன் 70.3 பட்டத்தை வென்றார் நிகேத். இதற்காக நான் 1,000 பங்கேற்பாளர்களுடன் போட்டியிடவேண்டியிருந்தது, 1.9 கிமீ நீச்சல், 90 கிமீ மிதிவண்டி ஓட்டுதல், 21.1 கிமீ ஓட்டம் ஆகியவற்றை எட்டு மணிநேரத்துக்குள் அடுத்தடுத்து செய்யவேண்டியிருந்தது என்கிறார் இந்த இரும்பு மனிதர்.

நெடுந்தொலைவு ஓடிப் பயிற்சி பெற்றவரும் ஒரு டஜன் அரை-மாரத்தான்களில் பங்கேற்றவருமான நிகேத், இந்த நிகழ்ச்சிக்காக ஓராண்டுக்குமேல் பயிற்சி எடுத்தார். என்னுடைய திறமையைத் தாண்டிச் செயலாற்றலாம் என்கிற எண்ணம்தான் இந்தப் போட்டியில் பங்கேற்கவேண்டும் என்று என்னைத் தூண்டியது, என்கிறார் அவர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வோருக்குக் கடுமையான உடல், மன ஒழுக்கம் வேண்டும், நல்ல உணவுப்பழக்கம், தொடர்ச்சியான உடற்பயிற்சி வேண்டும் என்றும் தொடர்ந்து குறிப்பிடுகிறார். நேர்விதமான நலனுக்கு இவை மிகவும் ஏற்றவை, குறிப்பாக, இளைஞர்களுக்கு.

இந்திய அல்லது பன்னாட்டு ரோட்டரி தலைவர்களெல்லாம் அவருடைய தாத்தாவைப் பார்ப்பதற்காக வீட்டுக்கு வருவார்கள், அப்போது PRIPகள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பேனர்ஜீ-யைத் தன் வீட்டிலேயே சந்தித்த நினைவு அவருக்கு இருக்கிறது. நிகேத், தன் தந்தையுடன் மாவட்டக் கூட்டங்கள், நிறுவல்களுக்குச் சென்றுள்ளார். என்னைப் பொறுத்தவரை, ரோட்டரி என்பது என்னுடைய வளர்ப்பிலேயே இருக்கிறது.

முன்பு அவர் RAC கோல்ஹாபூர் யோஜெனிக்ஸில் ரோடராக்டராக இருந்தார். அவருடைய மனைவி பிரியங்காவும் RC கோல்ஹாபூர் எவால்வின் ஓர் உறுப்பினராவார். 75 உறுப்பினர்களைக் கொண்ட தம்பதியர் சங்கமான இதன் சராசரி வயது 32. உறுப்பினர்களுடைய ஆர்வங்கள், இலக்குகள் ஒரேமாதிரியானவை என்பதால், நாங்கள் மகிழ்ச்சியாக நேரம் செலவிடுகிறோம், ஒத்துப் போகும் சிந்தனையை உணர்கிறோம். கணவர் அல்லது மனைவிமட்டும் ரோட்டரி நிகழ்வுகளுக்குச் செல் வதில்லை என்பதால், தோழமையும் மகிழ்ச்சிகரமாக உள்ளது. உறுப்பினர்களுக்கு அது ஒரு நல்ல சமூக வட்டமாக அமைந்துள்ளது என்கிறார் நிகேத்.

உறுப்பினர்கள், சமூகத்தினரிடையே விளையாட்டு மற்றும் உடல்சார்ந்த



வெற்றிக் கோட்டை அடையும் RC கோலாப்பூர் இவால்வ் தலைவர் 'அயன்மேன்' நிகேத் தோஷி.

சங்கத்தலைவர் நிகேத் தோஷி, மனைவி ப்ரியங்கா, சங்கச் செயலாளர் நீலப் கோயங்கா, அவர் மனைவி சித்திக்கா சங்கப்பட்டயத்தை RID *பரத் பாண்ட்யா மற்றும்* PDG *ரவி குல்கர்னி,* DG *கிரீஷ் மசூர்கர் ஆகியோரிடமிருந்து பெறுகின்றனர்.*

செயல்பாடுகளை ஊக்குவிப்பதுதான் தன்னுடைய சங்கத்தின் முதன்மை இலக்கு, கவனம் என்று அவர் சொல்லும்போது, நமக்கு வியப்பு உண்டாவதில்லை. இளைஞர்களைத் தட்டி எழுப்பிச் சுறுசுறுப்பாகச் செயல்படச்செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்றைய வாழ்க்கை, பெரும்பாலும் பணியை மையமாகக் கொண்டு அமைவதாகத் தோன்றுகிறது. இளைஞர்கள் தங்களுடைய மொபைல் ஃபோன்களை மறந்துவிட்டு வெளியில் செல்லவேண்டும், உடல்நலனில் கவனம் செலுத்தவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். மன நலன் சார்ந்த திட்டங்களை அறிமுகப்படுத்தவும் நாங்கள் எண்ணியுள்ளோம். பல இளைஞர்கள் எளிதில் சினம் கொள்கிறார்கள், பொறுமையிழக்கிறார்கள், மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு ஆலோசனை தேவை.''

இந்தச் சங்கம் பாராப்ளெஜிக் விளையாட்டுகளைப்பற்றிய விழிப்புணர்வை வளர்ப்பதற்காக ஜெர்மன் NGO ஒன்றுடன் இணைந்து ஒரு பன்னாட்டுப் பாராப்ளெஜிக் சைக்ளத்தானுக்கு ஏற்பாடு செய்தது. சென்ற ஆண்டு வெள்ளத்தின் போது பல மீட்பு நடவடிக்கைகள், உதவிப் பணிகள், நிதி திரட்டல்களிலும் நாங்கள் பங்கேற்றோம், பாதுகாப்பு வசிப்பிடங்களைக் கட்டினோம், இளம்பிள்ளைவாத ஒழிப்புக்காக ஒரு கார்ப் பேரணி நிதிதிரட்டல் நிகழ்வை நடத்தினோம் என்கிறார் அவர்.

இப்போது இந்தச் சங்கம் இந்நகரில் உள்ள 30 ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து, அரசு மருத்துவமனையில் கோவிட் நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதற்கான மருத்துவ உள்கட்டமைப்பை வழங்குவதற்கான $70,000 மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தை நடத்தவுள்ளது. இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நாங்கள் 1.5 லட்சம் உணவுப்பொட்டலங்களை வழங்கியுள்ளோம், பசிக்கு எதிராக எழுவோம் என்கிற ஓர் NGOவுடன் இணைந்து, சமைக்கத் தயாரான உணவைத் தொடர்ந்து வழங்கவுள்ளோம்.

பட்டய வழங்கலின்போது RID பரத் பாண்ட்யா கூறிய சொற்களை அவர் நினைவுகூர்கிறார், ''சமூகப் பணி தானே நடக்கும். ஆனால், நலமான தோழமையைக் கொண்ட ஒரு வலுவான அடித்தளத்தை அமைப்பது ஒரு சங்கத்துக்கு மிக முக்கியம். மூன்று ஆண்டுகளில் நீங்கள் இதைச் சாதித்துவிட்டால், உங்கள் சங்கம் நிச்சயம் வெற்றியடையும். நீங்கள் எல்லாரும் ரோட்டரியை உள்ளார்ந்து விரும்பத் தொடங்கினால்தான், உறுப்பினர்கள் தங்களுக்குள் கலந்து பழகத் தொடங்கினால்தான் உங்களால் முன்னேற இயலும்' என்கிற அவருடைய ஊக்கமளிக்கும் பேச்சை எங்கள் உறுப்பினர்கள் அனைவரும் விரும்பி ரசித்தார்கள்.''

இப்போது நேரடியாகச் சந்திக்கிற மகிழ்ச்சி இல்லையே என்று உங்கள் குழுவினர் வருந்தவில்லையா என்று நான் கேட்கிறேன், அவருடைய பதில்: நாம் நல்லெண்ணத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கவேண்டும். ஏனெனில், இப்போது ஊக்கத்தை இழப்பது எளிது. எங்களுடைய வாராந்திர ஜூம் கூட்டங்கள் ஆர்வமூட்டு கிறவையாக உள்ளன. சில மிகச் சிறந்த, பல பரிமாணம் கொண்ட பேச்சாளர்கள் எங்களிடையே பேசினார்கள், எங்கள் உறுப்பினர்கள் எல்லாரும் ஆர்வத்துடன் அந்தக் கூட்டங்களில் பங்கேற்றார்கள்.''

ரோட்டரியில் நாம் இளைஞர் களுடைய ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதில்லை என்று உணர்கிறார் நிகேத். எங்கள் நகரில் அதற்கான ஒரு வாய்ப்பை நாங்கள் கண்டறிந்தோம். பல சங்கங்களில் எல்லா வயதினரும் சரியாகக் கலந்திருப்பதில்லை. இதனால் அவரும் அவருடைய நண்பர்களாகிய இப்போதைய சங்கச் செயலாளர் நீலப் கோயங்கா, பொருளாளரான கரேன் பரேக் மற்றும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலாத் கெடியா ஆகியோரும் ஒன்றாகச் சேர்ந்து, தங்கள் மனைவியருடன் இணைந்து இந்தச் சங்கத்தை உருவாக்கினார்கள்.■

ரோட்டரி இந்தியா மனித நேய அறக்கட்டளை

ரோட்டரி இந்தியா மனித நேய அறக் கட்டளை (RIHF) என்பது, ரோட்டரி இந்தியாவின் மூத்த தலைவர்களால் 2010ல் உருவாக்கப்பட்டது.

சேவைப் பகுதிகள்:
ரோட்டரி இந்தியா எழுத்தறிவுத் திட்டம் (RILM), ரோட்டரி இந்தியா நீர்த் திட்டம் (RIWM), ரோட்டரி இந்தியா தூய்மைத் திட்டம் (RISM), ரோட்டரி இந்தியா நலத் திட்டம்-தடுத்தல், ரோட்டரி இந்தியா நலத் திட்டம்-குணப்படுத்தல், ரோட்டரி இந்தியா சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் ரோட்டரி இந்தியா பேரிடர் மேலாண்மை.

அறங்காவலர்கள்:
ஆலோசகர்கள்: PRIP ராஜேந்திர சாபூ, PRIP கல்யாண் பேனர்ஜி மற்றும் RIPN சேகர் மேத்தா; PRID அசோக் மகாஜன், தலைவர் (1 ஆண்டுப் பொறுப்புக்காலம்); PRID Y P தாஸ், இணைத் தலைவர்; RID கமல் சங்வி; RID Dr பரத் பாண்ட்யா; TRF அறங்காவலர் குலாம் வஹன்வடி; PRID பாண்டுரங்க செட்டி; PRID P T பிரபாகர்; PRID Dr மனோஜ் தேசாய்; RIDN ரவி வட்லமணி மற்றும் RIDN A S வெங்கடேஷ்.

இலக்குகள்

- RILM - ஆசிரியர் ஆதரவு: 30 லட்சம் ஆசிரியர்களை எட்டுவது, 25 மாநிலங்களுக்கு மின்கற்றலைக் கொண்டுசெல்லுதல், வயதுவந்தோர் கல்வி: வயதுவந்த 6 கோடிப் பேரை எழுத்தறிவு பெறச் செய்தல், குழந்தைகள் மேம்பாடு: 1.5 லட்சம் குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அனுப்புதல், மகிழ்ச்சிப் பள்ளி: 10,000 பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றுவது, 25,000 நூலகங்களை உருவாக்குவது.
- RIWM: W - நீர்நிலைகள் - 10,000 நீர்நிலைகள், 10,000 தடுப்பணைகளை அமைத்தல், அ - விழிப்புணர்வு, 500 மில்லியன் மக்களை எட்டி அவர்களுடைய வாழ்க்கைகளில் மாற்றம் உண் டாக்குதல் T - 10,000 நீர்நிலைகளை மாற்றியமைத்தல், E - நீரைச் செயல்திறனோடு பயன்படுத்து தல் - 25 லட்சம் வீடுகளில் பயன்பாட்டைக் குறைத்தல், 15,000 சொட்டு நீர்ப் பாசன அமைப்புகளை நிறுவுதல், 5,000 இடங்களில் சாம்பல் நீரை மறுசுழற்சி செய்தல் மற்றும் R - மழை நீர் திரட்டல் - 50,000 மழை நீர் திரட்டல் கட்டமைப்புகளை நிறுவுதல்.
- RISM: 5,000 ODF-இல்லாத கிராமங்கள்; 1,000 வீட்டுக் குழாய் இணைப்புகள்; 1.5 lakh WinS கட்டமைப்புகள்; நலப்பராமரிப்பில் 500 WASH; 500 சமூகக் கழிப்பறைகள் மற்றும் 500 பொதுக் கழிப்பறைகள்.
- ரோட்டரி இந்தியா பேரிடர் மேலாண்மை: 10,000 நெருக்கடி நேரப் பயன்பாட்டுப் பொருட்கள் (மருத்துவமனைக் கருவிகள், கூடாரங்கள், அமர்பொருட்கள், சமூகச் சமையலறைக்குப் பாத்திரங்கள், பங்கீட்டுப் பொருட்கள்) மற்றும் 20 தங்குமிடப் பொதிகள்.
- ரோட்டரி இந்தியா நலத் திட்டம் - தடுத்தல்: PPH முகாம்கள்-1,500 சங்கங்கள் x 4,120 பரிசோதனை கள்/முகாம்+சிறப்பு நாட்களுக்கு வெளியிலான முகாம்கள் 44 லட்சம் மக்களுக்குப் பலனளிக்கும்; ஆரோக்யாவுடன் பள்ளி விழிப்புணர்வு-2,000 பள்ளிகளுக்கு 1 சங்கம்-2,000 சங்கங்கள், வகுப்புகள் 7 மற்றும் 8ல் 300 குழந்தைகள். மொத்தம் பலன் பெறுவோர்-40,50,000, மொபைல் நலச் செய்திகள்-ஆறு மாதங்களுக்கு வாரத்துக்கு 2 SMSகள். மொத்தம் பலன் பெறுவோர்-39,00,000, RFHD - 10 நல முகாம்கள்-மொத்தம் பலன் பெறுவோர்-32,00,000 மற்றும் நலப் பரிசோதனைகள்-மொத்தம் பலன் பெறுவோர்-74,00,000.
- ரோட்டரி இந்தியா நலத் திட்டம்-குணப்படுத்தல்: ரத்த வங்கிகள்-40, கண் மருத்துவமனைகள்/கண் வங்கிகள்-50, கண்புரை அறுவைச் சிகிச்சைகள்-9,00,000, டயாலிசிஸ் இயந்திரங்கள்/படுக்கைகள்-1,000,

ரோட்டரியின் உதவியுடன் குழந்தை ஷிபா சாஹாவிற்கு இதய அறுவை சிகிச்சை செய்தப்பின்.

இதய அறுவைச் சிகிச்சை கள்-25,000, நல முகாம்கள் (P+C)-9M மற்றும் தோல் வங்கிகள்-40.

- ரோட்டரி இந்தியா சுற்றுச்சூழல் திட்டம்-திடக்கழிவு மேலாண்மை -4,200 கிராமங்கள் 8,400 இயந்திரங்கள், மரம் நடுதல்-30 கோடி மரங்கள், விழிப்புணர்வுப் பரப்புரை-3,000 பள்ளிகள், 60,000 கார் ஸ்டிக்கர்கள், 60 RYLA, 300 இயற்கை முகாம்கள், புதுப்பிக்கக்கூடிய ஆற்றல்-12 லட்சம் வீடுகள்.

பயிற்சித் திட்டங்கள்

அனைத்துத் தகவல்களும் மாவட்ட, சங்க அளவில் முறையாகச் சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதற்காக RIHF மூன்று நிலைப் பயிற்சியைக் கொண்டுள்ளது.

நிலை 1 பயிற்சியை அனைத்துச் சேவைப் பகுதிகளுக்கும் ZCUகள் நடத்துகின்றன. ஒரு மாதத்துக்குள் ஜூமில் சுமார் 304 பயிற்சி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், அனைத்துச் சேவைப் பகுதிகளுக்குமான RY 2020-21 DG, DGE, DC மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

நிலை 2 பயிற்சி இதை ZC வழி காட்டுதலின் கீழ் DGகள், DC நடத்து கிறார்கள்.

நிலை 3 பயிற்சியின் கீழ், ரோட்டரி இந்தியாவின் எட்டுச் சேவைப் பகுதிகளுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள், திட்டங்களைப் பற்றிய தக வல்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து ரோட்டரி உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படும்.■

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு ரோட்டரி ஷெல்டர் கிட்.

TRF **உதவியுடன் நற்பணி**

நலப் பராமரிப்புக்குக் கை கொடுக்கும் ரோட்டரி-பெருநிறுவனக் கூட்டணி

ரோட்டரி செய்திக்குழு

தானே-யிலிருக்கும் ஹோலி கிராஸ் மருத்துவமனை அலுவலர்கள் RC கல்யாண் ரிவர்சைட், RID 3142ஐத் தொடர்புகொண்டு, "எங்களுக்கு டயாலிசிஸ் கருவியை வழங்க இயலுமா?" என்று கேட்டபோது,

TRF குலாம் வஹன்வதி, RID பரத் பாண்ட்யா, DG மோகன் சந்திரவாக்கர், PDG ஆஷஸ் கங்குலி, RC தானே மிட்டவுன் தலைவர் ராஜேந்திர ஜாண்டே மற்றும் திட்டத் தலைவர் சந்தோஷ் பாடே.

சங்கத் தலைவர் பிரதிக் குஜார் உடனடியாகச் செயலில் இறங்கினார், அந்த மருத்துவமனைக்கும் RC தானே மிட்-டவுனுக்கும் தொடர்பு உண்டாக்கினார். நோய்த் தடுப்பு, சிகிச்சையில் கவனம் செலுத்தும் ஒரு GGஐ அவர்கள் செயல்படுத்தி வந்தார்கள் என்பது எனக்குத் தெரியும்; இந்தப் பெரிய பங்களிப்பின்மூலம், ஹோலி கிராஸ் மருத்துவமனை நோயாளிகளுக்கு இன்னும் செயல்திறன் மிக்க நலப் பராமரிப்பை வழங்குவதற்கான மேம்பட்ட உள்கட்டமைப்பைப் பெறலாம் என்றார் குஜார்.

இதைத் தொடர்ந்து, இந்தப் பணிக்காக பிர்லா எஸ்டேட்ஸ் என்ற பெருநிறுவனத்தையும், RC வல்சால், UK, RID 1210 என்ற பன்னாட்டுக் கூட்டுச் சங்கத்தையும் அடையாளம் கண்டது RC தானே மிட்-டவுன். இவர்களுடன் TRFம் இணைந்து இந்த மருத்துவமனைக்கு நான்கு சிறுநீரக ஹீமோ-டயாலிசிஸ் இயந்திரங்களை வழங்கினார்கள்.

RID பரத் பாண்ட்யா, TRF அறங்காவலர் குலாம் வாஹன்வடி மற்றும் DG மோகன் சந்தவர்கர் முன்னிலையில் இந்தக் கருவிகள் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டன.■

District Wise TRF Contributions as on April 2020

(in US Dollars)

District Number	APF	PolioPlus	Other Restricted	Endowment Fund	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
			India				
2981	30,801	7,175	0	18,341	56,317	160	3.5
2982	29,621	22,265	185,807	720	238,413	139	4.6
3000	78,947	2,403	189,535	296	271,181	103	2.0
3011	88,701	1,915	144,838	6,667	242,121	103	2.9
3012	166,649	15,646	252,010	58,986	493,292	147	4.0
3020	48,323	47,270	0	12,029	107,622	120	3.2
3030	8,964	3,008	1,423	2,203	15,598	12	0.2
3040	17,135	418	9,949	0	27,502	27	1.3
3053	64,986	232	169,544	0	234,761	115	4.0
3054	11,075	529	46,577	0	58,181	35	0.6
3060	79,277	60,197	174,279	36,876	350,630	914	22.6
3070	33,087	705	16,869	0	50,661	162	5.3
3080	54,948	8,087	14,505	1,013	78,553	153	4.5
3090	17,854	301	0	1,000	19,156	45	2.3
3100	33,258	100	0	0	33,358	97	5.1
3110	26,766	1,810	1,045	0	29,621	32	0.8
3120	61,815	141	140,199	0	202,155	144	4.3
3131	162,227	4,207	522,050	43,250	731,734	758	14.4
3132	14,175	607	34,498	30,000	79,280	72	1.9
3141	621,736	16,677	1,422,584	220,225	2,281,222	929	16.9
3142	132,656	1,944	87,028	42,763	264,390	388	12.0
3150	77,895	7,711	35,504	203,668	324,779	606	17.0
3160	3,750	3,129	0	8,222	15,101	24	0.9
3170	85,185	12,139	61,421	0	158,745	261	4.7
3181	285,584	16,173	0	0	301,757	540	15.1
3182	81,514	7,616	24,493	0	113,624	309	9.9
3190	291,761	40,839	327,172	0	659,773	657	13.8
3201	64,830	35,685	437,529	32,442	570,487	222	4.1
3202	127,781	58,578	184,558	1,000	371,917	287	5.8
3211	31,468	1,043	65,915	1,422	99,848	30	0.7
3212	59,075	19,937	10,081	1,972	91,065	97	2.4
3231	3,725	1,973	16,459	0	22,157	48	1.3
3232	117,055	72,455	474,012	7,500	671,022	346	6.6
3240	224,250	42,679	33,004	0	299,932	315	10.4
3250	33,452	0	18,952	10,000	62,403	66	1.7
3261	3,275	0	30,682	0	33,958	6	0.2
3262	41,016	4,029	5,507	0	50,552	79	2.4
3291	82,345	3,542	56,798	12,500	155,185	82	2.3
India Total	**3,396,963**	**523,168**	**5,194,827**	**753,095**	**9,868,053**	**8,630**	**5.9**
3220 Sri Lanka	64,442	8,057	106,112	1,000	179,612	144	7.4
3271 Pakistan	4,513	14,552	20	0	19,085	12	0.9
3272 Pakistan	16,402	1,037	300	0	17,739	57	3.5
3281 Bangladesh	113,195	4,345	127,600	7,000	252,140	290	5.1
3282 Bangladesh	32,264	15,216	(2,703)	2,000	46,777	74	1.6
3292 Nepal	171,586	17,870	1,126,888	0	1,316,344	324	7.0
South Asia Total	**3,799,365**	**584,244**	**6,553,044**	**763,095**	**11,699,749**	**9,531**	**5.8**
World Total	**92,818,023**	**24,092,142**	**23,098,562**	**30,904,468**	**170,913,195**		

Source: RI South Asia Office

கர்நாடக COVID மீட்பு அறையில் ஒரு ரோட்டரியன்

ரோட்டரி செய்திக்குழு

கர்நாடகத்தின் கோவிட் போராளிகளில் ஒருவரான Rtn கார்த்திக் கிட்டு, Covid-19 பரவலைப்பற்றிப் பொது மக்களுக்கு அறிவிக்கிற ஓர் இணையத்தளம், டேஷ்போர்டை உருவாக்கிய தொழில் வல்லுனர் குழுவிலும் இடம்பெற்றுள்ளார்.

RC பெங்களூர் சவுத் வெஸ்ட், RID 3190ன் ஓர் உறுப்பினரான கிட்டு, கர்நாடக முதலமைச்சருடைய Covid-19 மீட்புப்பணி அறையின் ஒரு முக்கிய உறுப்பினராவார்.

இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், வீடில்லாத மக்களுக்காக அமைக்கப்பட்ட பசி உதவித் தொலைபேசி எண்ணான 155214ம் இந்த அறையிலிருந்துதான் செயல்படுகிறது. இங்குள்ள ஒரு பெரிய எலக்ட்ரானிக் சுவர், ஒவ்வோர் அழைப்பும் எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டறிகிறது, உடனே, தன்னார்வலர்கள் அங்கு சொல்கிறார்கள். முடக்கம் தொடங்கிய திலிருந்து, 10 லட்ச த்துக்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் தேவையுள்ளவர் களுக்கு வழங்கப் பட்டுள்ளன.■

கோவிட் மீட்பு அறையில் Rtn. *கார்த்திக் கிட்டு.*

நலிந்தோருக்காக COVID ICU அமைத்த புணே சங்கங்கள்

புணேயிலுள்ள, பிரதான் மந்த்ரி ஆயுஷ்மான் பாரத் யோஜனா திட்டத்தின்கீழ் பட்டியலிடப்பட்டுள்ள, நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த நோயாளிகளுக்கு மட்டும் சிகிச்சை அளிக்கிற மருத்துவமனையொன்றில் ரோட்டரி Covid-19 ICU வசதியைத் தொடங்கி வைத்தார் RI இயக்குநர் பரத் பாண்ட்யா. புணே, RID 3131ன் பன்னிரண்டு ரோட்டரி சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து இந்த ICUவை அமைத்துள்ளன; விரைவாக அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு நல்கை யொன்றின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த ICU கொரோனாவைரஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும்.

$94,750 நல்கை மதிப்பு கொண்ட இந்த வளாகம் மிக விரைவாக அமைக்கப்பட்டது, திட்டத்தின் நிதி அங்கீகரிக்கப்பட்டு மூன்றே வாரங்களில் தொடங்கப்பட்டுவிட்டது.

Covid நெருக்கடிக்குப்பிறகும், இந்த ICU தேவையுள்ள நோயாளி களுக்குத் தொடர்ந்து சேவையளிக்கும் என்றார் RC புணே பிரிஸ்டைனின் முன்னாள் தலைவரான Rtn சுதீன் ஆப்தே. தற்போது, 50 Covid நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கிவருகிறது இந்த ICU. பின்னர், ஆண்டுக்குக் குறைந்தது 500 நோயாளிகளுக்கு இங்கு இலவசச் சிகிச்சை வழங்கப்படும் என்றார்.■

Wordsworld

ஒரு மெதுவான ரயில் பயணம்

சந்தியா ராவ்

பயணங்கள் முற்றிலும் நின்றுபோய்விட்ட இந்த நாட்களில், 80 ரயில்களில் உலகைச் சுற்றி என்ற நூலில் மோனிஷா ராஜேஷின் 72,000 கிலோமீட்டர் நீளப் பயணத்தைப்பற்றிப் படித்தது ஒரு நல்ல அனுபவமாக இருந்தது.

சமீபத்தில், உத்தரப் பிரதேசத்துக்குச் செல்லவேண்டிய ஓர் இந்திய ரயில் ஒடிஷா மாநிலத்துக்குச் சென்றது, அதில் இருந்த நூற்றுக்கணக்கான பயணிகளுக்கும், தங்கள் அன்புக்குரியவர்களுடைய வருகைக்காகக் காத்திருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கும் எந்த எச்சரிக்கையோ மன்னிப்போ தெரிவிக்கப்படவில்லை, இது போன்ற குழப்பங்கள் இதற்குமுன் நிகழ்ந்திருந்தாலும்கூட, ரயில் வண்டிகள் பயண வழிக்கு உரிய பாதைகளில்தான் ஓடுகின்றன என்பதால், இது எப்படி நிகழ்ந்தது என்பது ஒரு மர்மம்தான். இந்தச் சூழலில், பிரிட்டிஷ் இதழாளரான மோனிஷா ராஜேஷின் புத்தகங்கள் மிகவும் தேவைப்படுகிற நிம்மதியையும் பார்வைக்கோணத்தையும் வழங்குகின்றன.

சில ஆண்டுகளுக்குமுன்னால், உள்ளூர்க் கடையொன்றில் 80 ரயில்களில் இந்தியாவைச் சுற்றி என்ற இந்தப் புத்தகத்தை நான் வாங்கினேன். 2010ம் ஆண்டில், மோனிஷா நான்கு மாதங்களில் இந்தியாமுழுவதும் 65,000km பயணம் செய்தார், 2012ல் வெளியான இந்தப் புத்தகம் அதைப் பதிவுசெய்கிறது.

தில்லியில் தொடங்கி, கன்னியாகுமரி வரை நாம் கேள்விப் பட்டிருக்கிற எல்லா இடங்களுக்கும் அவர் சென்றிருக்கிறார். இது பற்றி adventure.com இணையத்தளத்தில் மீரா தத்தானிக்கு ஒரு பேட்டி வழங்கி யிருக்கிறார் மோனிஷா. அதில், வேறு எந்த வகைப் போக்குவரத்திலும் சாத்திய மில்லாதபடி மக்களை நன்கு அணுகுவதற்கு இந்த ரயில்கள் உதவின என்கிறார். அநேகமாக என்னுடைய விருப்பப்பட்டியலில் இருந்த எல்லா இடங்களுக்கும் ரயில்கள் என்னை அழைத்துச் சென்றன: அம்ரித்சர் பொற்கோயில், ரந்தம்போர் தேசியப் பூங்கா, தாஜ் மகால், கேரளக் கடற்கரைகள், ஜெய்சல்மார் இன்னொரு பக்கம், அனைத்துவகை மனிதர்களையும் அவரால் சந்திக்க இயன்றது, அவர்களுடன் உரையாட இயன்றது.

சில ஆண்டுகளுக்குப்பிறகு, அவருக்கு மீண்டும் ரயில் பயண விருப்பம் ஏற்பட்டது: இந்தமுறை, தன்னுடைய வருங்காலத் துணைவரான ஜெம்மையும் உடன் அழைத்துக் கொண்டு ஏழு மாதங்களுக்கு 72,000km பயணம் செய்தார்கள். ரஷ்யா, மங்கோலியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஐரோப்பா, கனடா, USA, திபெத், வட கொரியா மற்றும் கஜக்ஸ்தான் போன்ற மாறுபட்ட, நெடுந்தொலைவுப் பகுதிகளுக்கெல்லாம் சென்றார்கள். இப்பதிவுகள், 2019ல் 80 ரயில்களில் உலகைச் சுற்றி என்ற நூலாகப் பதிப்பிக்கப்பட்டன.

இந்தியாவில் அவருக்கு பிடித்த வழித்தடம், கொங்கன் பாதை, ஒரு பக்கம் அரபிக்கடல், இன்னொரு பக்கம் சஹ்யாத்ரி மலைகளைக் கொண்ட 700km பயணம் அது.

தொலைவிலிருக்கிற மக்களுக்கு இலவச மருத்துவ உதவியைக் கொண்டுசெல்கிற உலகின் முதல் மருத்துவமனை ரயிலான "லைஃப்லைன் எக்ஸ்பிரஸ்" என்னும் ஊக்கமளிக்கும் ரயிலைப்பற்றியும் அவர் பாராட்டிப் பேசுகிறார். மக்களால் மருத்துவமனைக்குச் செல்ல இயலாவிட்டால் என்ன? மருத்துவ மனை அவர்களைத் தேடி வருகிறது.

ஒரு ரயிலிலிருந்து இறங்கி இன்னொரு ரயிலில் ஏறுவதற்குள் பார்ப்பதற்குப் பல இடங்கள் உள்ளன, சந்திக்கப் பல மனிதர்கள் உள்ளார்கள், அனுபவிக்கப் பல பண்பாடுகள் உள்ளன, அத்துடன், சுவையான உணவுகளும் உள்ளன.

எடுத்துக்காட்டாக, இந்தக் குறிப்பைக் காணுங்கள்: யாங்ட்ஜெ ஆற்றிலிருந்து ஓடும் கால்வாய்களில் கட்டப்பட்ட ஜூஜியாஜியாவோவைச் சுற்றிவரும் மோனிஷா, ஜெம் இருவரும் ஒரு நடுத்தர வயதுச் சீனத் தம்பதியைச் சந்திக்கிறார்கள். அவர் கேட்கிறார்: "நீங்கள் மூன்று கீச்சுக்குரல்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

அதன்பிறகு நடக்கும் உரையாடல் இது:

"மூன்று கீச்சுக்குரல்களா? கேள்விப்பட்டதில்லை, அது என்ன?"

"புதிதாகப் பிறந்த எலிகள். சின்னஞ்சிறிய எலிகள்" என்கிறார் அவர்.

"இவர்கள் பிறந்த எலிகளைச் சமைக்கிறார்களா?"

அவர் சிரித்தார். "சமைப்பதெல் லாம் இல்லை. அப்படியே உயிருடன் சாப்பிட்டுவிடுவோம். முதல் கீச்சுக் குரலில், நீங்கள் அவற்றைச் சாப்ஸ்டிக்கில் எடுக்கவேண்டும். இரண்டாவது கீச்சுக்குரலில், சில்லியில் நனைக்கவேண்டும். மூன்றாவது கீச்சுக் குரலில், அவற்றை வாயில் போட்டுக் கொண்டுவிடவேண்டும்."

இந்தப் பயணத்திட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு எவ்வளவு முன் தயாரிப்பு தேவைப்பட்டிருக்கிறது! இதை நினைத்தாலே வியப்பாக உள்ளது. கற்பனை செய்து பாருங்கள்: ஒரு ரயிலில் இருந்து இன்னொரு ரயிலுக்கு மாறுவது, நேர

மண்டலங்களைப் பொருத்துவது, தாமதங்களைக் கருத்தில் கொள்வது, இன்னும் பலப்பல இடைஞ்சல்கள், இவற்றுக்கு நடுவில் உடல்நலத்தையும் பார்த்துக் கொள்ளவேண்டும். எடுத்துக் காட்டாக, ஹிரோஷிமா-வில் அணுகுண்டு போடப்பட்ட 70வது ஆண்டு நிறைவுக்குள் ஹிரோஷிமாவில் இருக்கவேண்டும் என்று திட்டமிடுகிறார் மோனிஷா.

அந்தக் குண்டு விழுந்தபோது, டெட்சுஷி யொனெஜாவா-வுக்கு 11 வயது. தன்னுடைய பாட்டியைப் பார்ப்பதற்காகத் தன்னுடைய தாயுடன் ஹிரோடென் தெருக்காரில் பயணம் செய்துகொண்டிருந்தார். நகரம் உடைந்து சிதறியபோது, அவருக்கும் அவருடைய தாய்க்கும் எந்தப் பாதிப்பும் இல்லை; தெருக்காரின் உறுதித்தன்மை அவர்களைக் காப்பாற்றிவிட்டது.

"இப்போது டெட்சுஷிக்கு வயது 81. என்னைப் பொறுத்தவரை, ஜப்பானிய ரயில்கள் உறுதியின் ஓர் அடையாளம். ஆனால், உலகம் ஜப்பானை ஷின்கான்சென் என்கிற புல்லட் ரயிலுடன்தான் இணைத்துப் பார்க்கிறது.

ஜப்பானியர்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது என்று தீர்மானித்திருக்கிற ஒரு கதையின் ஒரு மிகச் சிறிய பகுதிதான் இது.

மேற்கில் வான்கூவரையும் கிழக்கில் டொரன்டோவையும் இணைக்கிற "தி கனடியன்" ரயிலைப்பற்றி அவர் எழுதுகிறார், 3 பகல், 4 இரவுகளில் சுமார் 4,466km செல்லும் இந்தப் பயணம் முற்றிலும் மாறுபட்டது. "இவ்வளவு நீண்ட ரயில் பயணத்துக்கெல்லாம் யாருக்கு நேரம் இருக்கிறது?" என்று பெரும்பாலான கனடியர்கள் ஒதுங்கிக்கொள்ள, சாளரங்களின் வழியாக மலைகளையும் மான்களையும் பார்க்க விரும்புகிற மிகச் சிலர்தான் இந்தப் பயணத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

வின்னிபெக்கில் ஏறும் கரென் தன்னை ஒரு "ரயில் சுவிசேஷகர்" என்று அழைத்துக்கொள்கிறார். "கனடாவிலிருக்கும் ஒவ்வொரு மைல் ரயில் பாதைக்கும் ஒரு சீனர் இறந்திருக்கிறார். இங்கு ரயில் பாதைகளை அமைப்பதற்காக அவர்கள் அழைத்துவரப் பட்டார்கள், பின்னர், அதில் உயிர் பிழைத்தவர்கள்மட்டும் சொந்த நாட்டுக்குத் திரும்பினார்கள். இங்கு தங்களுடைய குடும்பங்களை அழைத்து வருவதற்குக்கூட அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை" என்று சுட்டிக்காட்டுகிறார்.

இதுபற்றித் தான் கற்றுக்கொண்ட கூடுதல் விஷயங்களை மோனிஷா எழுதுகிறார்: சீனர்களும் முதல் நாட்டுப் பணியாளர்களும் பாறை வெடிப்புகளில் இறந்த கதை, அவர்களுடைய உடல்கள் ஏரிகளுக்கு நடுவிலிருக்கும் ஒரு சிறு தீவில் புதைக்கப்பட்ட கதை.

ரயிலில் ஏறியதும் உங்களுடைய கார்பன் கால்தடம் குறைகிறது, நீங்கள் எத்தனை வகைத் திரவங்களை எத்தனைப் பாட்டில்களில் கொண்டு வருகிறீர்கள் என்று யாரும் கேள்வி கேட்க இயலாது, (குறைந்தபட்சம் இந்தியாவில்) நீங்கள் பசியோடு இருக்கவேண்டியிருக்காது, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இதற்குச் செலவும் குறைவு. தாமதங்கள் குறைவு, வண்டி ரத்தாவது அபூர்வம் இதெல்லாம் விமானங்களில் சாத்தியமா?

அத்துடன், உங்களுக்குப் பல நண்பர்கள் கிடைப்பது உறுதி, அவர்கள் சில நேரங்களில் வாழ்நாள் நண்பர்களாகவும் அமைந்து விடக் கூடும்.

கூர்மையான, பின்னணியைப் பிரித்துப்பார்க்கும் பார்வை, (குறிப்பாக, உலக ரயில் நூலில்) நன்கு தேர்ந்தெடுத்தப்பட்ட சொற்களைக் கொண்ட எழுத்து ஆகியவற்றால் இரு நூல்களையும் நல்ல வாசிப்பு அனுபவங்களாக்குகிறார் மோனிஷா. இதற்குமுன் நமக்குள் இருந்த கருத்துகள் கரைகின்றன, புதிய சிந்தனைகள் எழுகின்றன இவற்றையெல்லாம் விடச் சிறப்பு, இந்நூல்கள் ரயிலில் செல்லவேண்டு மென்று நம்மைத் தூண்டுகின்றன.

மெதுவான, எளிதான, பிறரைச் சந்தித்து வாழ்த்துகிற, காட்சிகளை, ஒலிகளைப் பருகுகிற பயணம் இது; அவ்வாறின்றி வாட்ஸாப் செய்திகளைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தால், இன்னொரு மனிதரிடம் ஒரு சொல்லும் பேசாவிட்டால், வாழ்க்கை நம்மைக் கடந்து சென்றுவிடும்.

ஆகவே, அடுத்தமுறை பயணம் செய்யும்போது, நேரம் செலவிடுங்கள், ஒரு ரயிலைத் தேர்ந்தெடுங்கள், இந்தப் புத்தகங்களையும் உடன் கொண்டு செல்லுங்கள். பயணம் இனிதாகட்டும்!



கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

பிரபஞ்சத்தையே கவர்ந்த ஹிந்தி திரைப்படப் பாடல்கள்!

S R மது

அன்றைய நாளில் ஹிந்திப் பாடல்கள் இந்தியர்கள் அனைவரின். மனதையும் கவர்த்திழுத்தது என்பது இன்றைய இளம்தலைமுறையினருக்குத் தெரியவந்தால் ஆச்சரியப்படுவார்கள். ஒருவர் எந்த இடத்தில் வசிக்கிறார், என்ன உணவு சாப்பிடுகிறார் என்பதைக் கடந்து இன, மொழி பேதமில்லாமல் அனைவரும் ஹிந்தி திரைப்படப்பாடல்களை கேட்டு ரசித்தார்கள் என்பதுதான் உண்மை. இப்படி மனதை மயக்கும் ஹிந்தி திரைப்பட பாடல்களுக்கு 1952ம் ஆண்டு அகில இந்திய வானொலி நிலையம் தடைவிதித்தது என்றால் நம்ப முடிகிறதா? ஆம் அப்போது தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த டாக்டர் B V கெஸ்கர், ஹிந்தி திரைப்படப் பாடல்கள் ஆபாசமாகவும், மேற்கத்திய பாணியில் இருப்பதாகவும் கூறி தடைவிதித்தார்.

இந்தச் சூழ்நிலையில்தான் ரேடியோ சிலோன் (இன்றைய இலங்கை வானொலி) "பினாகா கீத்மாலா" என்ற புதிய பகுதியைத் தொடங்கி ஒவ்வொரு புதன்கிழமையும் மாலையில் ஒரு மணிநேரம் பிரபலமான ஹிந்தி திரைப்படங்களின் பாடல்களை ஒலிபரப்பியது. இதைத் தொடர்ந்து இந்திய ரசிகர்களின் கவனம் ரேடியோ சிலோன் பக்கம் திரும்பியது. லட்சக்கணக்கான இந்தியர்கள் பினாகா கீத்மாலா நிகழ்ச்சி மூலம் ஹிந்தி திரைப்படப் பாடல்களை கேட்டு மகிழ்ந்தனர். இலங்கை வானொலியின் இந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிக்கு பாராட்டுகள் குவிந்தன. இதற்காக ஹிந்தி திரைப்பட பாடல்களுக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும்.

பின்னர் 1957ல் விவித பாரதி அலைவரிசை தொடங்கப்பட்டபோது அகில இந்திய வானொலியின் ஹிந்தி திரைப்படப் பாடல்கள் மீண்டும் மகத்துவம் பெற்றது. கெஸ்கர் தடையால் ஹிந்தி திரைப்படப்பாடல்கள் மீது மக்களுக்கு மேலும் ஈர்ப்பு ஏற்பட்டது என்பது தான் உண்மை. ஹிந்தி பாடல்களை கேட்டு ரசிக்க காலக்கெடுவும் இல்லை, எல்லையும் இல்லை. மேலும் ஹிந்திப்

ஸ்ரீ 420 படத்தில் ராஜ் கபூர்.

பாடல்கள் தாத்தாக்கள், பாட்டிகள், தாய்-தந்தையர்கள், மகள்கள், மகன்கள், மருமகன்கள், மருமகள்கள், மாமாக்கள் என அனைத்து தரப்பினரையும் மகிழ்விக்கும் வகையில் இருந்தன. ஒவ்வொரு பாடலும் கருத்துச் செறிவுடன், நம் உணர்வுகளை தட்டியெழுப்பும் வகையில் அமைந்திருக்கும். காதல் ரசம் சொட்டும் பாடல்கள், வருத்தம் தோய்ந்த பாடல்கள், தத்துவப்பாடல்கள் என அனைத்து ரக பாடல்களும் நம்மை வசீகரிக்கும். ஆன்மிகப் பாடல்களானாலும் சரி, தேசபக்தி பாடல்களானாலும் சரி நமக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். சில பாடல்கள் நமது இளம் பருவத்தையும், நட்பின் ஆழத்தையும் நினைவுபடுத்தும் வகையில் அமைந்திருக்கும்.

பாய்ஜீ பாவ்ரா படத்தில் ஒரு மாடல் காட்சி.

நேருவும் ராமையவஸ்தாவையா பாடலும்

நான் எப்போதாவது Shree 420 படத்தில் வரும் ராமையாவஸ்தாவையா பாடலைக் கேட்கும்போதெல்லாம் எனக்கு அப்போது பிரதமராக இருந்த பண்டித ஜவாஹர்லால் நேருதான் நினைவுக்கு வருவார். என்ன சிரிப்பாக இருக்கிறதா? விளக்கமாகச் சொல்கிறேன் கேளுங்கள். 1956ம் ஆண்டின் முற்பகுதியில் பெங்களூரில் லால்பாக்கில் ஒரு பொதுக்கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுவதாக இருந்தது. நான் அப்போது பள்ளி செல்லும் சிறுவன். ஆயிரக்கணக்கானோர் நேருவின் உரையைக் கேட்க பொறுமை யாக காத்திருந்தனர். அப்போது கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள், Shree 420 படத்தில் வரும் ராமையாவஸ்தாவையா பாடலை ஒலிபரப்பினர். பின்னர் ஒரு வழியாக நேரு வந்து உரை யாற்றினார். யாராவது இப்பாடலை நினைவுபடுத்தி னால், எனக்கு இப்பாடல் காட்சியில் நடித்த ராஜ்கபூர்-லலிதாபவாரோ நினைவுக்கு வரமாட்டார்கள். கோட் அணிந்து அதில் ரோஜாப் பூவை செருகியபடி வந்த நேருதான் என் நினைவுக்கு வருவார். ஏனெனில் நான் அவரை முதல் முதலில் பார்த்தது அப்போதுதான்!.

நெஞ்சத்தை தொடும் பாடல்கள்

மேற்குவங்க மாநில முன்னாள் ஆளுநர் கோபால கிருஷ்ணகாந்தி ஒருமுறை இப்படிச்சொன்னார். ஹிந்தி திரைப்படப்பாடல்களுக்கு மயங்காதவர்களே இருக்க முடியாது. காதல் பாடல்களாகட்டும், சோகப்பாடல்களாகட்டும், திருமணப் பாடல்களாகட்டும் எதுவாக இருந்தாலும் அவை நமது நெஞ்சத்தை தொடும் பாடல்களாக இருக்கும் என்பார்.

அந்தநாளில் கர்நாட இசையில் ஜாம்பவானாக இருந்தவர் மதுரை G S மணி. ஹிந்தி பாடல்கள் என்றால் அவருக்கு பிடிக்கும். முகல்-இ-ஆஸாம் என்ற படம் 1960ல் வெளியானபோது, அந்த படத்தின் இசையை ரசித்த அவர், தினமும் அந்த படத்தின் இரவுக்காட்சிக்குச் சென்றுவிட்டு பஸ் வசதி இல்லாததால் வீட்டுக்கு நடந்தே வருவாராம்.

மூன்று முஸ்லிம்கள் இணைந்த பாடல்

1953ம் ஆண்டில், பைஜுபாவ்ரா படத்தில் வரும், முகமது ரஃபி பாடிய மன் தர்பட் ஹரிதர்ஷன் கோ ஆஜ் என்ற காலத்தால் அழியாத பாடல் அனைவரின் மனத்தையும் கிளர்ந்தெழச்செய்தது. பாடல் வரிகளை இயற்றிய ஷகீல்பதாயுனி, இசையமைத்த நௌஷத், இனிமையான குரலில் பாடிய முகது ரஃபி என மூவரும் முஸ்லிம்கள். இந்த மூவரின் முயற்சியில் உருவான பஜன் பாடல் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் இருந்தது.

1965ம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது ராஜ்கபூர் என்னிடம் ஒரு பேட்டியில்

ராமய்யா வஸ்தாவய்யா பாடல் காட்சி.

வெளிநாட்டினர் ஹிந்தி கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றனர். ஏன் தெரியுமா? அப்போதுதான் ஹிந்தி பாடல்களைப் புரிந்துகொண்டு வெகுவாக பாராட்ட முடியுமாம் என்றார். அவர் அப்படிச்சொன்னதை நான் அப்போது நம்பவில்லை. ஆனால், 40 ஆண்டு களுக்குப் பிறகு, ஆங்கிலப்புலமை பெற்ற பொருளாதார நிபுணர் ஒருவர் என்னிடம், "ஹிந்தி மொழியை எளிதில் கற்றுக்கொள்ள ஏதாவது புத்தகம் இருக்கிறதா" என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், ஏன் என்று அவரிடம் கேட்டபோது, ஹிந்திப் பாடல்கள் என்றால் எனக்குப் பிடிக்கும். ஆனால், அதன் அர்த்தம் தெரியாததால் அதை முழுமையாக ரசிக்க முடியவில்லை. அதனால் ஹிந்தி கற்றுக்கொள்ளும் ஆசை என்னுள் எழுந்தது என்று குறிப்பிட்டார். அப்போதுதான் ராஜ்கபூர் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு உண்மை என்பதைப் புரிந்துகொண்டேன்.

இப்போதெல்லாம் பாடல்களை விட இசைக்குத்தான் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்கிறார் பாடலாசிரியர் ஆன்ந்த்பக்ஷி. ஆரம்பகாலத்தில் இசைதான் பாடகர்களுக்கு ஓய்வு கொடுத்தது. ஆனால் இன்று பாடகர்களாகிய நாங்கள்தான் இசைக்கு ஓய்வுகொடுக்க வேண்டியிருக்கிறது என்று இசைக் குயில் லதா மங்கேஷ்கர் 1990களின் இறுதியில் ஒரு பேட்டியில் கூறியிருந்தார். தலத் மஹ்மூத்திடம் ஒரு முறை ஏன் ஹிந்தி படத்திற்கு பாடுவதை நிறுத்திவிட்டீர்கள் என்று கேட்டப்போது அவர் சொன்ன பதில் இதுதான்: இப்போது வரும் படங்களில் காதல் காட்சிகள் குறைந்து விட்டது, படங்களில் வன்முறைதான் மேலோங்கி இருக்கிறது. அதேபோல இனிமையான இசைபோய், மேற்கத்திய பாப் பாடல்கள் உட்புகுந்துவிட்டன. டிஸ்கோ காட்சிகள் அதிகரித்து விட்ட நிலையில் அழகை வர்ணிக்கும் இனிமையான பாடல்களை நான் எப்படி பாடமுடியும். அதனால் தான் பாடுவதை நிறுத்திவிட்டேன் என்றார்.

ஆனால், இசையமைப்பாளர் A R ரஹ்மான் இதற்கு நேர் எதிரான கருத்துக்களைத் தெரிவிக்கிறார். இன்றைய நாளில் ஹிந்திப் படங்களில் இசையின் இனிமை குறைந்து விட்டதாக கூறப்படுவதை நான் ஏற்கமுடியாது. இசை என்பது நிலையானது அல்ல. காலத்துக்கு ஏற்றவாறு மாறும் தன்மையுடையது. சமூக நடைமுறைக்கு ஏற்பட இசையில் மாற்றங்கள் தேவைதான். அதை நாம் புறந்தள்ளிவிடமுடியாது என்கிறார் ரஹ்மான்.

பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் ஹிந்தி திரைப்பட ரசிகர்களுக்கு நினைவிருக்கும். மாதுரி தீட்சித் என்றால் பாகிஸ்தான் மக்களுக்கு பிடிக்கும். ஒரு முறை பாகிஸ்தான் ராணுவ வீரர்கள், நமது நாட்டு ராணுவ வீரர்களிடம், மாதுரி தீட்சித்தை எங்களிடம் கொடுத்துவிடுங்கள். காஷ்மீரை வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதாக அந்த நாட்டின் அதிபராக இருந்த பர்வேஸ் முஷாரப் கூறினாராம். பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் டான் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில், நம்மிடம் நூர்ஜஹான் இருக்கிறார். காஷ்மீரை விட்டுக்கொடுத்து லதா மங்கேஷ்கரை கேட்டுப்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

ஹிந்தி திரைப்படப் பாடல்களில் எந்த படத்தின் பாடல் சிறந்தது என்று சொல்வது கடினம். ஆயிரக்கணக்கான பாடல்கள் சிறந்த பாடல்களாக இருக்கும்போது அதில் எது சிறந்தது என்று தேர்வுசெய்ய முடியும். பழைய பிரபல ஹிந்திப் பாடல்களுக்கு: https://rotarynewsonline.org/the-universal-appeal-of-hindi-film-songs பார்க்கவும்.

எழுத்தாளர் RC மெட்ராஸ் சவுத் (RID3232) உறுப்பினர்.

RI தெற்காசிய அலுவலக அறிவிப்பு

ரோட்டரியின் பேரிடர் எதிர்வினை நிதிக்கான பங்களிப்பு

பேரிடர் எதிர்வினை நிதிக்கு அனுப்பப்படும் பங்களிப்புகள் ஒரு சங்கத்தின் ஆண்டு வழங்கல் இலக்கில், ஒவ்வொருவருக்குமான வழங்கல் கணக்கீடுகளில் சேர்க்கப்படும், ஆனால், பகிர்தல், DDF கணக்கீடுகளுக்குப் பொருந்தாது. அதேபோல், இந்தப் பங்களிப்புகள், ஒவ்வொரு ரோட்டரியனுக்கும், ஒவ்வோர் ஆண்டுக்கும், ரோட்டரி அறக்கட்டளை நிலைத்திருத்தல் உறுப்பினர், PHF, பால் ஹாரிஸ் சமூகம், Major Donor, AKS உள்ளிட்ட அனைத்து அங்கீகார வாய்ப்புகளுக்கும் தகுதி பெறும்.

பொதுவாக, தனிநபர் நன்கொடையாளர்கள் இணையத் தளத்தைப் பயன்படுத்திப் பேரிடர் எதிர்வினைப் பங்களிப்புகளை நிகழ்த்துவார்கள், அவர்கள் தங்களுடைய பங்களிப்பை நேரடியாக COVID-19க்குக் குறிக்க இயலாது, ஆனால், பேரிடர் எதிர்வினை நிதிக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்புகள், பேரிடர் எதிர்வினை நல்கைகளின் வழியாக இந்த நோய்ப்பரவலை எதிர்ப்பதற்குச் சங்கங்கள், மாவட்டங்களுக்கு உதவுவது உறுதி.

பேரிடர் எதிர்வினை நிதிக்குப் பங்களிப்புகளை வழங்குவதற்கான இணைப்பு: *https://my.rotary.org/en/disaster-response-fund*

Zone	District	Total Contribution (in US $)	Worldwide Rank
4	3141	$2,212,508	3
6	3292	$1,313,473	12
7	3131	$691,079	58
5	3232	$673,022	63
7	3190	$659,693	65

இந்திய நன்கொடையாளர்களின் இணைய வழங்கல்

வாடிக்கையாளர் செயல்பாட்டுச் செயல்திறன்களை மேம்படுத்துவதற்காக, Rotary.org வழியாக இணையப் பங்களிப்புகள் வழங்கப்படவேண்டும் என்று நாங்கள் வலுவாகப் பரிந்துரைக்கிறோம். இதன் நன்மைகள்:

- Rotary.org கூடுதல் பணம் செலுத்தல் தெரிவுகளை வழங்குகிறது.
- Rotary.orgல் செய்யப்படும் பங்களிப்புகளுக்கான ரசீது, பதிவு செய்த மின்னஞ்சல் IDக்கு உடனடியாக அனுப்பப்படும்.
- பங்களிப்பவர்கள் தங்கள் பங்களிப்புகளை "My Rotary'யில் உடனடியாகக் காணலாம்.
- இந்தத் தளத்தில் வழங்கப்படும் அனைத்துத் தகவல்களும் பன்னாட்டுப் பாதுகாப்பு அனுமதிகளுடன் பாது காக்கப்படுகின்றன.
- தொடர்ச்சியாக வழங்கும் தெரிவுகள் பரிசோதிக்கப் பட்டுவருகின்றன, இவை விரைவில் Rotary.orgல் கிடைக்கும்.

Credit/debit அட்டை அல்லது இணைய வங்கிச் சேவை வழியாக Rotary.orgல் பங்களிக்க விரும்புகிறவர்கள், ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) இணையத்தளமான www.rotaryfoundationindia.org, அல்லது, RI இணையத்தளமான www.rotary.orgஐப் பயன்படுத்தலாம். ரோட்டரிக்கு ஓர் NEFT/ RTGS பங்களிப்பை வழங்குவதற்கான இணையப்பக்கம்: https://my.rotary.org/en/donate. தயவுசெய்து, நன்கொடை நாணய வகையை "இந்திய ரூபாய்கள்" (INR) என்று தேர்ந்தெடுங்கள்.

உறுப்பினர் மேம்பாடுகள்

- இன்வாய்ஸ் கையிருப்புகள் துல்லியமாக இருப்பதை உறுதிசெய்வதற்காக, புதிய உறுப்பினர் சேர்க்கைகள், வெளியேறிய உறுப்பினர்களை நீக்குதல் உள்ளிட்ட உறுப்பினர் மேம்பாடுகளைச் செய்கிற பொறுப்பு, சங்கச் செயலாளருடையது. மேலும் தகவல்களுக்கு, My Rotary"யில் உள்ள உறுப்பினர் நிலுவைத்தொகைகள்" என்ற பக்கத்தைத் தயவுசெய்து காணுங்கள்.
- உறுப்பினர் தரவுகளை இணையத்தில் ஏற்ற இயலா விட்டால், உறுப்பினர் தரவுப் படிவத்தை (My Rotary-யின் ஆவண நூலகத்தில் உள்ளது) அச்சிட்டு நிரப்புங்கள், அதன் ஸ்கான் செய்த ஒரு வடிவத்தை ஜூன் 25, 2020க்குள் datarotary.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள், இதன்மூலம், ஜூலை 2020க்கான சங்க இன்வாய்ஸ்கள் உருவாக்கப்படுவதற்குள் உறுப்பினர் மேம்பாடுகள் நிகழ்த்தப்படும்.

Subscribe NOW!



for Rotary News Print Version & e- Version

For the Rotary year 2020 – 2021

As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.

Annual Subscription (India)

Print version	e-Version
₹420/-	₹360/-

Print version ☐ **e- Version** ☐

	English	Hindi	Tamil
No. of Copies			

For every new member the pro-rata is ₹35 a month.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/Tamil) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

Rotary Club of ..... RI District .....

Name of the President/Secretary .....

Address .....

.....

.....

City ..... State ..... PIN ☐☐☐☐☐☐

STD Code ..... Phone: Off. ..... Res. .....

Mobile .....E-mail .....

Cheque/DD No. ..... Dated ..... for Rs. .....

Drawn on .....

in favour of "**ROTARY NEWS TRUST**" is enclosed.

Date: President/Secretary

Payments can be made online at HDFC Bank, Egmore, Chennai – Rotary News Trust, SB A/c No 50100213133460; IFSC HDFC0003820. Email us the UTR Number, Club Name, President/Secretary's name, Amount and Date of Transfer.

Mail this form to:
Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

Subscription norms

1. Subscription is for the Rotary year (July to June).
2. It is mandatory for every Rotarian to subscribe to a Rotary magazine.
3. The annual subscription for print version is ₹420 per member.
4. Subscription for the full year must be sent in July, in the prescribed form.
5. Those joining after July can pay for the remaining Rotary year at ₹35 an issue.
6. Subscription account of the club with *Rotary News* is a running account and does not cease at the end of June every year.
7. Names of all members, with their complete postal address with **PIN CODE, mobile number and e-mail ID** must be sent along with the form and DD/ cheques payable at par.
8. Language preference **(English, Hindi or Tamil)** should be stated alongside member's name.
9. Please send the updated mailing address and contact details of your members **directly** to *Rotary News*.
10. Members to ensure their names are included in the Subscribers' list their club sends us. If you've paid, but your name is not sent to us by your club, you will not get a copy of the magazine.
11. When members leave, clubs should inform *Rotary News*. Please help reduce wastage of copies.
12. Clubs are liable to pay for the number of magazines we despatch according to the list available with the Rotary News Trust.
13. Unpaid dues of the club will be shown as outstanding against the club. Any payment received subsequently will be adjusted against earlier dues.
14. Clubs with subscription arrears will be notified to RI and are liable for suspension.
15. We are in the process of tallying our subscriber list with RI membership from India.

மனதில் உறுதி வேண்டும்

பரத் மற்றும் ஷலன் சாவர்

ஒரு முறை மும்பையிலிருந்து மஹாபலேஷ்வருக்கு காரில் சென்றுகொண்டிருந்தோம். வழியில் பல இடங்களில் சாலையில் மேடு, பள்ளங்கள் இருந்ததால் கார் சக்கரத்தில் அடிக்கடி கட கட என்ற ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. நாங்கள் அதைப் பொருட்படுத்தாமல் கடந்து சென்றோம். வாழ்க்கையிலும் இதேபோல அவ்வப்போது ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதுண்டு. அதைப் பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும். அதாவது, அதையே நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது. அப்போதுதான் மனதளவிலும் உடலளவிலும் எந்த பாதிப்பும் இல்லாமல் நாம் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

புத்திசாலிகள் என்ன சொல்கிறார்கள்: ஒருதுளி விஷம்கூட நம்மை சாவின் விளிம்புக்குக் கொண்டு சென்றுவிடும். அதேபோல ஒரு சிறு விதைகூட மரமாக வளர்ந்து விடும். கேபிள் ஓயரிலிருந்து எழும் ஒரு சிறிய தீப்பொறிகூட ஒரு கட்டடத்தையே தீக்கிரையாக்கியதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் இல்லையா? இதேபோல நம்மிடம் உள்ள அற்பமான கோபம்கூட நம்மை அழித்துவிடக்கூடாது. நல்ல நேர்மறையான சிந்தனைகளே நமக்குத்தேவை.

இனிமையான பேச்சுக்கள் நம் மனதுக்கும், உடலுக்கும் புத்துணர்ச்சியை அளிக்கும். நல்ல நகைச்சுவை உணர்வும், எண்ணங்களும், மனப்பக்குவமும் இருந்தால் வாழ்க்கையில் ஏற்படும் இடர்களை தாண்டி வந்துவிடலாம். நமது எண்ணங்களை நாம் அடிக்கடி கண்காணித்துக் கொண்டே வரவேண்டும். நாம் எதிலும் குறைகண்டுபிடிப்பதையும், புகார் தெரிவிப்பதையும் விட்டுவிட்டு எதையும் மகிழ்ச்சியுடன் நேர்மறை சிந்தனையுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒருபோதும் நாம் கோபத்துக்கு இடம்தரலாகாது. கோபம் மனிதனை அழித்துவிடும்.

எந்தச் செய்தியும் நல்ல செய்தியாக இருப்பதில்லை: காலையில் செய்திப்பத்திரிகை படிப்பதையும், தொலைக்காட்சியில் செய்தி கேட்பதையும் நிறுத்திவிடுங்கள். இவை நமது மூளையை, மனதை சஞ்சலப்படுத்துவதுடன் கோபம், பயத்தை ஏற்படுத்தி நம்மை பலவீனப்படுத்திவிடுகிறது. உலகில் எல்லாமே தலைகீழாக

நடக்கிறதோ என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறது. இது தவறான எண்ணம். எதிலும் நல்லவைகளும் உள்ளன, கெட்டவைகளும் உள்ளன. நாம்தான் விழித்துக்கொள்ள வேண்டும்.

மலைபோல அசைக்கமுடியாத பலம்:
காலையில் நாம் முதலில் செய்யவேண்டியது மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான பலத்தைக் கொடுக்க வேண்டும். மனத்தை சமநிலைப்படுத்தினால்தான் அன்றைய நாளில் நாம் சரியான முறையில் எதிர்கொள்ள முடியும். மனதை ஒருநிலைப்படுத்தி நிலையாக வைத்துக்கொண்டால் அதை யாராலும் அசைக்க முடியாது. இதற்கு மலையை உதாரணமாகச் சொல்லலாம். அதோபோல நிற்கும்போதும் நாம் நிமிர்ந்து நிற்கவேண்டும். அப்படியிருந்தால் யாரும் நம்மை வீழ்த்திவிட முடியாது. மனதை ஒருநிலைப்படுத்தி, மூங்கில்போல் நிமிர்ந்து நின்றால் நமது உடலில் ஒரு புதிய சக்தி உருவாகும். கழுத்தை சமச்சீராக வைத்து தலை, தோள்களையும் நெஞ்சையும் நிமிர்த்தி நின்றால் எந்த தடையும் இராது. இப்படிச் செய்வதால் பதற்றம் நீங்கி பலம் ஏற்படும்.மலைபோன்ற உறுதியான உடல் அசைய வேண்டும் என்றால் அது தானாகவே அசைய வேண்டும்.

கண்களை மூடிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் கவனச் சிதறல்கள் ஏற்படாது. நீங்கள் எங்கே நிற்கிறீர்களோ அங்கேயே அப்படியே நில்லுங்கள். சப்தம் கேட்காத வகையில் காதுகளை மூடிக்கொள்ளுங்கள். அருகில் என்ன நடந்தாலும் அதில் கவனத்தை செலுத்தாதீர்கள். மனதையும் இதயத்தையும் உறுதியாக வைத்துக்கொள்ளுங்கள்.

மனதை தட்டியெழுப்புங்கள்:
இந்த பயிற்சிக்குப் பின் மனதில் நல்ல எண்ணங்களை புகுத்துங்கள் அல்லது அமைதியாக ஏதாவது மகிழ்ச்சி தரும் வேலையைச் செய்யுங்கள். திச்நாத்ஹன் என்ற பௌத்தமதத் துறவி பின்வருமாறு கூறுகிறார்: விதை விதைப்பது, பாத்திரங்கள் கழுவுவது, தோட்டத்தில் புற்களை வெட்டுவது போன்ற செயல்கள் கவிதை எழுதுவதற்கு ஒப்பானது. சாப்பிடுவது, தூங்குவது, பணிசெய்வது என அன்றாட வாழ்க்கையில் எது செய்தாலும் நாம் அதில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்கிறார்.

நம்மைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டுமானால் சுறு சுறுப்புடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும். ஒருமுறை இரண்டு பேர் தர்க்கம் செய்துகொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் அந்தப் பெண் சமாதானத்தின் சமிக்ஞையாக தனது இரண்டு கைகளையும் உயர்த்தி சரி நிங்கள் சொல்வதுகூட சரியாக இருக்கலாம் என்கிறார். ஆனால், அந்த ஆடவர், சண்டை போடும் மனோநிலையில் இருந்ததால், அப்பெண் கைகளை உயர்த்தியை தவறாகப் புரிந்துகொண்டு, வாயை மூடு... நீ சொல்வது எதையும் நான் கேட்கத்தயாரில்லை என்று கூறினார். அதாவது எதற்கெடுத் தாலும் வாக்குவாதம் என்பது மன அழுத்தத்தைத்தான் கொடுக்கும். பிறர் சமாதான முயற்சிகள் மேற்கொண்டாலும் அதை தவறாகத் தான் எடுத்துக்கொள்வார்கள்.

மும்பையிலுள்ள யோகா பயிற்சி நிலையத்தின் தலைவரான டாக்டர் ஹன்ஸாஜி யோகேந்திராவிடம் இருந்து நான் பல விஷயங்களை கற்றுக்கொண்டேன். மனது எப்போதும் எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கும். அதை நாம் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளாவிட்டால் எதிர்மறை எண்ணங்களை அசைபோட ஆரம்பிக்கும் என்றார்.

அது உண்மைதான். மனது சுறு சுறுப்புடன் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தால் போராடும் எண்ணமே வராது. நாம் ஒன்றை கூர்ந்து கவனித்தால் இது தெரியவரும். சிலர் வருமான வரி படிவத்தைப் பூர்த்தி செய்து தாக்கல் செய்வதை ஏதோ கஷ்டமான வேலைபோல் முனகுவதை பார்க்கலாம். ஆனால், ஓர் இடத்தில் உட்கார்ந்து அமைதியாக நமது வருமானம் என்ன? நமது செலவுகள் என்ன என்று நிதானமாக சிந்தித்துப் பார்த்தால் இது மிகவும் எளிதான காரியம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மந்திரங்கள், கணிதம், இசை, தியானம் இவையெல்லாம் மனத்தை அடிப்படையாகக் கொண்ட வேலை. இவை மனதை ஒருநிலைப்படுத்துகின்றன.

நாம் எதைச்செய்தாலும் ஆக்கப்பூர்வமாகச் செயல்படவேண்டும் என்கிறார் ஹன்ஸாஜி. நம்முடைய செயல்முறையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்த உடல் ரீதியான செயல் பாடுகள் அவசியம் என்கிறார் இவர். வாழ்க்கையை மகிழ்ச்சி நிறைந்ததாக அமைத்துக்கொள்ள பல வழிகள் உள்ளன. அவை:

நமக்கு என்ன தேவையோ அதை மட்டுமே சாப்பிட வேண்டும். அதிகமாக சாப்பிட்டால் சக்தி குறைந்து விடும். அதிக உப்பு அடங்கிய உணவும் நமது சக்தியை முடக்கிவிடும். அதன்பிறகு உடலை சமநிலையில் வைத்துக்கொள்ள சிரமப்பட வேண்டியிருக்கும்.

தேவையில்லாதவற்றை சிந்திப்பதையும், தேவையில்லாத பேச்சுக்களையும் சரிபாதியாக குறைத்துவிடுங்கள். அதன் பின் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை நாமே உணர்ந்துகொள்ள முடியும்.

நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். எப்போதும் மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

நல்ல காட்சிகளை மனதில் நிறுத்துங்கள். வண்ணமலர்கள் காற்றில் அசைந்தாடுவதைப் போல நல்லனவற்றை மட்டும் மனதில் அசைபோடுங்கள்.

யாருக்கேனும் ஏதேனும் ஒரு வகையில் உதவிகரமாக இருங்கள். பிறருக்கு சேவை செய்வது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும்.

எப்போதும் சந்தோஷமாக இருந்தால் ஆசிகள் உங்களைத் தேடிவரும்.

உங்களுக்குள்ளேயே ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள். எல்லாமே நல்லதாக நடக்கும்.

கட்டுரை ஆசிரியர்கள்
இருவரும் Fitness for Life
மற்றும் Simply Spritiual — You Are
Naturally Divine
என்ற ஆங்கில நூல்களின்
எழுத்தாளர்கள்.

Rotary News Subscription Remittances

You can pay the Rotary News / Rotary Samachar subscription online

Our Bank details:

Bank : HDFC Bank SB Account

Branch : Montieth Road Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

E mail us following details:

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

Rotary at a glance

Rotarians	:	1,217,616
Clubs	:	36,158
Districts	:	525
Rotaractors	:	174,585
Clubs	:	10,529
Interactors	:	337,502
Clubs	:	14,674
RCC	:	11,025

As on May 18, 2020

*Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019.

Membership Summary

As on May 1, 2020

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians	Rotaract Clubs	*Interact Clubs	RCC
2981	114	4,940	268	49	39	223
2982	71	3,184	186	85	92	55
3000	130	5,507	525	188	253	211
3011	88	3,721	941	51	87	26
3012	102	3,796	952	54	69	59
3020	73	4,272	248	54	155	351
3030	94	5,145	697	107	161	287
3040	90	2,153	252	37	45	144
3053	64	2,831	491	19	39	103
3054	129	6,284	1,169	81	138	523
3060	96	4,571	678	56	60	143
3070	106	3,165	440	46	20	58
3080	84	3,494	325	90	139	115
3090	79	2,084	55	37	5	122
3100	100	2,690	378	13	14	146
3110	128	3,811	333	29	7	105
3120	80	3,383	471	43	18	53
3131	138	5,641	1,254	105	174	117
3132	85	3,596	394	33	81	158
3141	103	5,830	1,419	118	130	87
3142	93	3,444	721	79	118	65
3150	93	3,684	386	58	122	116
3160	73	2,527	178	28	3	83
3170	129	5,798	766	80	192	169
3181	81	3,590	348	63	192	118
3182	83	3,238	275	49	90	97
3190	130	5,233	798	136	133	60
3201	145	5,733	481	106	72	50
3202	130	5,371	342	87	244	46
3211	143	4,679	352	8	24	132
3212	103	4,228	333	101	187	147
3231	93	3,823	459	52	74	357
3232	127	5,359	938	129	185	92
3240	91	3,150	426	51	365	190
3250	102	3,964	715	64	63	183
3261	72	2,685	395	16	18	43
3262	106	3,747	454	46	36	77
3291	155	3,854	806	88	86	619
India Total	**3,903**	**154,205**	**20,649**	**2,536**	**3,930**	**5,730**
3220	71	2,003	287	83	123	73
3271	94	1,514	279	65	19	22
3272	150	1,810	312	51	15	43
3281	223	6,016	953	232	45	196
3282	168	4,554	542	186	39	45
3292	125	5,047	806	132	113	115
S Asia Total	**4,734**	**175,149**	**23,828**	**3,285**	**4,284**	**6,224**

Source: RI South Asia Office

On the racks



A woman is no man
Author : **Etaf Rum**
Publisher : **Harper Perennial**
Pages : **368; ₹322**

Palestine, 1990. Seventeen-year-old Isra prefers reading books to entertaining the suitors her father has chosen for her. Over a week, the naive and dreamy girl finds herself quickly betrothed and married, and is soon living in Brooklyn. There Isra struggles to adapt to the expectations of her oppressive mother-in-law Fareeda and strange new husband Adam, a pressure that intensifies as she begins to have children — four daughters instead of the sons Fareeda tells Isra she must bear.

Brooklyn, 2008. Eighteen-year-old Deya, Isra's oldest daughter, must meet with potential husbands at her grandmother Fareeda's insistence, although she desires to go to college. Her grandmother is firm on the matter: the only way to secure a worthy future for Deya is through marriage to the right man.

But fate has a will of its own, and soon Deya will find herself on an unexpected path that leads her to shocking truths about her family — knowledge that will force her to question everything she thought she knew about her parents, the past, and her future.

In her debut novel, Etaf Rum tells the story of three generations of Palestinian-American women struggling to express their desires within the confines of their Arab culture in the wake of shocking intimate violence in their community. This is a story of culture, secrets and betrayals, love, and violence. It gives us an intimate glimpse into a controlling and closed cultural world, and a universal tale about family and the ways silence and shame can destroy those we have sworn to protect.



The Glass Hotel
Author : **Emily St John Mandel**
Publisher : **Knopf Publishing Group**
Pages : **302; ₹353**

Jonathan Alkaitis owns the Hotel Caiette, a five-star glass palace on a British Columbia island. Smooth talker and immoral Alkaitis gives his card with a handsome tip to Vincent, the bartender at the hotel. She looks at the money as a way of transforming her life. Angry at her choice her half-brother, Paul, scrawls a note on the glass wall of the hotel: "Why don't you swallow broken glass." A guest at the hotel Leon Prevant, who is a shipping executive for a company Neptune-Avramidis, sees the note from the hotel bar and runs scared. Putting together the lives of these characters the story revolves around a ponzi scheme, a young woman who goes missing from a ship and the disastrous fall of Alkaitis, living between the timeline 1990 and 2029.

From a remote island hotel to a container ship and the skyscrapers of Manhattan, this book paints a breathtaking picture of money, beauty, white-collar crime, ghosts and moral compromise.



When all is said
Author : **Anne Griffin**
Publisher : **Thomas Dunne Books**
Pages : **336; ₹922**

At the bar of a grand hotel in a small Irish town sits 84-year-old Maurice Hannigan alone and ready to tell his story. Over the course of the evening, he will raise five toasts to the five people who have meant the most to him. Through these stories — of unspoken joy and regret, a secret tragedy kept hidden, a fierce love that never found its voice — the life of one man will be powerful and poignantly laid bare.

Heartwarming and powerful, the voice of Maurice Hannigan will stay with you. He will leave you with these questions — If you had to pick five people to sum-up your life, who would they be? If you were to raise a glass to each of them, what would you say? And what would you learn about yourself, when all is said?

Compiled by Kiran Zehra

RC நாகப்பட்டினம் — RID 2981
இந்தச் சங்கம் Covid-19க்கு எதிரான தன்னுடைய உதவிப் பணிகளின் ஒரு பகுதியாக, காவல்துறையினர், பாதுகாப்பு ஊழியர்கள், பொது மக்களுடைய நோயெதிர்ப்பாற்றலை வலுப்படுத்து வதற்காகக் கபசுரக் குடிநீரை வழங்கியது.

RC புதுக்கோட்டை சென்ட்ரல் — RID 3000
லைவ்லிஹூட் பயிற்சி மையத்தைச் சேர்ந்த சிறப்புக் குழந்தைகள், ஒரு நட்புப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு வந்துள்ள பிரேசிலைச் சேர்ந்த பிரதிநிதிகள்முன் நடனம், யோகாசன நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வித்தார்கள். DGE A L சொக்கலிங்கம், இந்தச் சிறப்பு இல்லத்தின் செயல்பாடுகளைப்பற்றி விருந்தினர்களுக்கு விளக்கினார்.

RC நிடாடவோலெ — RID 3020
ஓர் உள்ளூர்ப் பொதுநலக் குழுவுடன் இணைந்து, வேலைவாய்ப்பில்லாத 26 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

RC கஜியாபாத் — RID 3012
ஏழைகளுக்கான மருந்தகமாகிய சிகித்ஸ்ய கேந்த்ரா-வுக்கு ஒரு மருத்துவருடைய மருத்துவப் பரிந்துரையின்படி மருந்துகளை நன்கொடையாக வழங்கியது. சங்கத் தலைவர் க்ஷிதிஜ் குப்தா இந்தத் திட்டத்துக்காக தாராளமான பங்களிப்பை வழங்கினார்.

செய்திகள்

RC நாசிக் வெஸ்ட் — RID 3030
நாசிக் நகரில் பணியில் உள்ள காவல் துறையினரைக் கொரோனாவைரஸ் நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக இந்தச் சங்கம் 2,500 முகக் கேடயங்களை வழங்கியது.

RC அல்வார் — RID 3053
அரவலி விகாரில் உள்ள ஓர் அரசு உயர் தொடக்கப் பள்ளியிலுள்ள சுமார் 80 குழந்தைகளுக்குக் குளிர்காலச் சீருடைகள் வழங்கப்பட்டன.

RC டசுயா — RID 3070
ஜிங்கர் கலன் கிராமத்தில் உள்ள ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இந்தச் சங்கம் பள்ளிச் சீருடைகளை நன்கொடையாக வழங்கியது.

RC அங்க்லேஷ்வர் — RID 3060
VT கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பிரயோக் சாலா பள்ளியில் இந்தச் சங்கம் வயதுவந்தோர் கல்வி வகுப்புகளைத் தொடங்கியது. இந்த வகுப்பின்மூலம் பலன் பெறுகிறவர்களில் பெரும்பாலானோர் இதற்குமுன் எப்போதும் பள்ளிக்குச் சென்றதில்லை. இவர்கள் கல்வி வகுப்புகளில் கலந்துகொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள்.

RC டெஹ்ராடூன் சென்ட்ரல் — RID 3080
பள்ளிக் குழந்தைகளை பனிக்கால இரவுகளிலிருந்து பாதுகாப்பதற்காகக் கம்பளிப் போர்வைகள், ஆடைகளுக்கான துணிகளை சங்கம் நன்கொடையாக வழங்கியது. இந்தச் சங்கம் அரசுப் பள்ளிகளில் பல நலன் மற்றும் தூய்மைத் திட்டங்களை நடத்திவருகிறது.

RC லோனாந்த் — RID 3132
இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்பதற்கான செயல்பாடுகளின் ஒரு பகுதியாக, இந்தச் சங்கம் 32 இளம்பிள்ளைவாதத் தடுப்பு மையங்களுக்குத் தடுப்பு மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கியது. இதன்மூலம், இந்தப் பகுதியில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குச் சரியான நேரத்தில் தடுப்பு மருந்துகளை வழங்க இயன்றது.

RC அம்பேர்நாத் ஸ்மார்ட் நகரம் — RID 3142
இந்தச் சங்கம், தன்னுடைய டிஜிட்டல் அங்கன்வாடித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், 32 அங்கன் வாடிகளுக்குத் தூய்மைப்படுத்திகள், முதலுதவிப் பெட்டிகள், பஞ்சுப் பாய்கள், குப்பைக்கூடைகள், பொம்மைகளை வழங்கியது. இந்த விழாவில் DG மோகன் சந்தவர்கர், AG அனில் சஹஜ்வல்லா மற்றும் மாவட்டச் செயலாளர் லலித் மனிக் உள்ளிட்டோர் கலந்துகொண்டார்கள்.

RC மும்பை கான்டிவ்லி வெஸ்ட் — RID 3141
டஹனு-வில் உள்ள டவா பள்ளியில் ரூ.4.4 லட்சம் செலவில் ஒன்பது கழிப்பறைத் தொகுதிகள் கட்டப்பட்டன. இந்தத் திட்டத்தால், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பலன் பெறுவார்கள்.

செய்திகள்

RC கும்டா — RID 3170

ஹொன்னவர் தாலுக்காவில் உள்ள கார்க்கி என்ற கிராமத்துக்கு அருகிலிருக்கிற, வடகிழக்கு மாநிலங்களுக்கான ஓர் உறைவிடப் பள்ளியான குருகலா-வுக்குக் குடிநீர் வசதி, ஆடைகள், பாத்திரங்களை DG கிரீஷ் மசூர்கர் நன்கொடையாக வழங்கினார். மகேஷ் PU கல்லூரியில் ஒரு கணினி ஆய்வகத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

RC பலேஹொன்னூர் — RID 3182

பலேஹொன்னூர் அரசு மருத்துவமனையிலுள்ள நோயாளிகள், துணை மருத்துவ வல்லுனர்களைக் கொரோனாவைரஸிலிருந்து காப்பதற்காக 500 முகக்கவசங்கள் வழங்கப்பட்டன.

RC கோயம்பத்தூர் இன்டஸ்டிரியல் சிட்டி — RID 3201

இந்நகரில் மாவட்ட நீதிமன்ற வளாகத்துக்குக் கைத் தூய்மைப்படுத்திகள், காலால் இயக்கப்படும் வழங்கிகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன. இந்தத் திட்டம், இந்தப் பகுதியில் ரோட்டரியின் நற்பெயரை மேம்படுத்தியது.

RC பெங்களூர் உத்யோக் — RID 3190

நாள்தோறும் சாலைகளைத் தூய்மைப்படுத்துகிற மாநகராட்சிப் ஊழியர்களாகிய 16 பெண்களை இந்தச் சங்கம் பெருமைப்படுத்தியது; ஆடைத் தொழில்துறையைச் சேர்ந்த 500 இடம்பெயர்ந்த பெண் தொழிலாளர்களுக்கு ஒரு நல முகாமை நடத்தியது.

RC திரிகாரிப்பூர் — RID 3202

இந்தச் சங்கம் கன்ஹன்காடில் உள்ள மம் காம்டிரஸ்ட் மருத்துவமனையுடன் இணைந்து, அரசு உயர்நிலைப் பள்ளியொன்றில் நடத்திய கண்புரை கண்டறிதல் முகாமொன்றில் 160க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள். தேவையுள்ள நோயாளிகளுக்கு இந்தச் சங்கம் இலவசச் சிகிச்சை மற்றும் அறுவைச்சிகிச்சையை வழங்கும்.

RC சத்தன்னூர் — RID 3211

திருவனந்தபுரத்தில் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளைப் பாதுகாக்கிற மாற்றுக் கலை மையத்துக்கு ஒரு மருத்துவ உதவி வண்டி நன்கொடையாக வழங்கப்பட்டது. அடிக்கடி மருத்துவ மனைகளுக்குச் செல்லவேண்டியிருக்கிற குழந்தைகளுக்கு மருத்துவப் பராமரிப்பை வழங்க இந்த வண்டி உதவும். இந்த வண்டிக்கான சாவிகளை DG ஷிரீஷ் கேசவன் நகரத்தலைவர் K ஸ்ரீகுமாரிடம் வழங்கினார்.

RC சென்னை K K நகர் — RID 3232

ஹோலி கிராஸ் மெட்ரிக் HS பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் போலியோப்ளஸ்ஸுக்காக ரூ.10,000 திரட்டினார்கள், அந்த காசோலையைச் சங்கத்தின் நிறுவனர் தலைவர் R செல்வராஜிடம் வழங்கினார்கள். Rtn அனுராதா ரவி இந்தப் பள்ளியின் அறங்காவலர் ஆவார்.

RC சிவகாசி சென்ட்ரல் — RID 3212

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் வழங்கினார்கள் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்குவதற்காக உணவுப் பொட்டலங்கள், 300கிலோ அரிசியை வட்டாட்சியரிடம் வழங்கினார்கள்.

செய்திகள்

RC பர்ட்வான் சவுத் — RID 3240
இந்த நகராட்சியின் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்காகக் கடினமாக உழைத்துக் குப்பைகள், கந்தல் துணிகளைத் திரட்டுகிற சுமார் 100 பேருக்குக் கம்பூட்ஸ் காலணிகள், கையுறைகள், முகக்கவசங்கள்மூடி, தூய்மைப்படுத்திகள், மழைக் காலத்துக்கு மழைக்கோட்டுகள் வழங்கப்பட்டன.

RC ஜாம்ஷெட்பூர் ஈஸ்ட் — RID 3250
மஹூலியா என்ற கிராமத்தில் ஒரு மிகப்பெரிய மருத்துவ முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 500க்கும் மேற்பட்டோர் பல நோய்களுக்காகப் பரிசோதிக்கப்பட்டார்கள்.

RC பல்லிகுங்கெ அப்டவுன் — RID 3291
தெற்கு 24 பரகனாஸ் மாவட்டத்திலுள்ள ராணியாவிலிருக்கும் ராமகிருஷ்ணா விவேகானந்தா மிஷனில் ஒரு நல முகாம் நடத்தப்பட்டது. இதில் 200க்கும் மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டனர்.

RC பிலாய் கிரேட்டர் — RID 3261
ராய்ப்பூர் ராயல் மற்றும் ஜாம்நகர் (மெயின்) RCகளுடன் இணைந்து ஒரு LN-4 செயற்கைக் கை முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது, கைகளை இழந்த 100க்கும் மேற்பட்டோருக்குச் செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

பிரிட்டிஷ் காலகட்டத்தில் அமைந்த இந்தியத் துப்பறியும் புதினங்கள்

TCA ஸ்ரீனிவாச ராகவன்

படக்கம் நீடித்துக்கொண்டே செல்வதில் ஒரு நல்ல பலனும் இருக்கிறது. இந்தியர்கள் முன்பைவிடக் கூடுதலாகப் படிக்கிறார்கள், அவ்வாறு படிப்பதில் அவர்களுக்குப் பெரிய ஆர்வம் ஏதும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒருவர் எவ்வளவு நேரம்தான் தொலைக்காட்சியை பார்க்க இயலும்? எவ்வளவு நேரம்தான் கைபேசியில் விளையாட இயலும்?

என்னைப் பொறுத்தவரை இதில் மிகப்பெரிய நன்மை, முற்றிலும் புதிய வகையிலான புத்தகங்களின் கண்டுபிடிப்புதான், அதாவது, இந்தியப் பின்னணியில் அமைந்த வரலாற்றுத் துப்பறியும் புதினங்கள்.

இதில் இன்னொரு நன்மை, இந்தப் புதினங்களை இந்தியப் பின்னணி கொண்ட எழுத்தாளர்கள் எழுதியுள்ளார்கள். இதனால் தங்களுடைய எழுத்தில் இடம்பெறும் மக்களைப் பற்றிய ஒரு சிறு உணர்வு அல்லது பச்சாதாபத்தை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

நான் அவ்வாறு கண்டறிந்த முதல் படைப்பாளி, சுஜாதா மஸ்ஸெ. 20ம் நூற்றாண்டின் முதல் கால்பகுதியில், அப்போது 'பாம்பே' நகரத்தில் பணியாற்றிய ஒரு பார்ஸிப் பெண் வழக்கறிஞர் பாத்திரத்தை இவர் உருவாக்கியுள்ளார். அந்த இளம் பெண்ணின் பெயர் பெர்வீன் மிஸ்ட்ரி, இவர் கொலை மர்மங்களையும் தீர்க்கிறார். இந்தப் புத்தகங்கள் ஓர் அமைதியான, மெருகேறிய பாணியில் மிகச்சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. இவை பழைய பம்பாயைக் கண்முன்னே அழைத்துவருகின்றன, இவற்றில் சில அம்சங்கள் 1980ல் இங்கு கட்டடங்கள் பெருகியவரை நிலைத்திருந்தன.

இதேபோன்ற இன்னோர் எழுத்தாளர், ஸ்காட்லாந்தில் பிறந்த அபிர் முகெர்ஜீ. இவருடைய ஒரே ஒரு புத்தகத்தைதான் நான் இதுவரை வாசித்திருக்கிறேன், இந்தச் வைரஸ் பிரச்னை முடிவடைந்து மீண்டும் நூல்கள் விற்பனைக்கு வரும்போது, இவர் எழுதிய மற்ற மூன்றையும் வாசிக்க ஆவலுடன் இருக்கிறேன்.

அபிர், ஒரு விடாப்பிடியான ஆங்கிலேயர் பாத்திரத்தை உருவாக்கியிருக்கிறார். அவர், 'அரசக் காவல்துறை'யைச் சேர்ந்த சாம் வயின்தம். இந்த வயின்தமிடம் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று, அவருடைய ஓபியம் விருப்பம்.

அவருக்குத் துணையாக வருகிற ஒருவர், காம்பிரிட்ஜில் படித்த வங்காள இளைஞரான சுரேந்திரநாத். பிரிட்டிஷ்காரர்கள் அவரை சரண்டர்-நாட் என்று அழைக்கிறார்கள். ஜகன்னாதர் என்ற இறைவரை அவர்கள் ஜக்கர்னாட் என்று அழைப்பதைத்தான் ஆசிரியர் இப்படி நுணுக்கமாகக் கிண்டலடிக்கிறார்.

சரண்டர்-நாட்-டின் குடும்பப்பெயர், பேனெர்ஜி. இந்தப் பெயர் யாரைக் குறிப்பிடுகிறது என்பது பலருக்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன்: 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு முதன்மையான அரசியல் வாதியாக இருந்த சுரேந்திரநாத் பேனர்ஜி என்ற இந்திய வரலாற்று ஆளுமைதான் அவர்.

திரு. முகர்ஜி ஒரு மெருகேற்றப் பட்ட வகையில் எழுதுகிறார், எந்தச் சொல்லும் இடம் மாறி அமர்வதில்லை, எந்தச் சொற்றொடரும் கூடுதலாக வருவதில்லை. இதனால், இந்தப் புத்தகத்தை நாம் விரைவாக வாசிக்கலாம். அதைச் செய்தது யார் என்று அறிய உங்களுக்கு விருப்பம் இருக்கும், ஆனால் அதற்காகக் கடைசிப் பக்கத்துக்கு ஓடமாட்டீர்கள். என்னைப் பொறுத்தவரை, துப்பறியும் புதின எழுத்தின் மிகச்சிறந்த தனிச் சிறப்பு அதுதான். துப்பறியும் கதை எழுதுவோரிடையே அது ஓர் அரிய குணமாகும்.

காலனியாட்சிக் காலகட்டத்து இந்தியாவைப்பற்றி எழுதும் தன்னுணர்வு கொண்ட பிரிட்டன் எழுத்தாளர்கள் அதை மிக விரிவாக விளக்குவார்கள். அல்லது, அதன் இனம் சார்ந்த சமநிலையின்மையைப்பற்றிப் புலம்புவார்கள். ஆனால் இந்த ஆசிரியர் அப்படியெல்லாம் சொற்களை வீணாக்குவதில்லை. அன்றைய இந்தியாவை இவர் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்: வெள்ளையர் முதலாளி, கருப்பர் தொழிலாளி. சில முதலாளிகள் நல்லவர்கள், அதேபோல், சில தொழிலாளிகளும் நல்லவர்கள். கதை முடிச்சுகள் சிக்கலாகப் பின்னப்பட்டுள்ளன, ஆனால், அவை மிகவும் கனமாகி விடுவதில்லை. ஆகவே, சில துப்பறியும் கதை எழுத்தாளர்கள் உண்டாக்கும் அந்த அடக்கு முறை உணர்வை நாம் உணர்வதில்லை.

அதே நேரம், இந்தப் புத்தகங்கள் (மஸ்ஸெ, முகெர்ஜீ போன்றோர் எழுதுபவை) இந்தியப் பார்வையாளர்களுக்காக எழுதப்படுவதாகத் தோன்றவில்லை. இந்தியாவை ஒரு குறிப்பிட்ட விதத்தில் மகிழ்ச்சியாகச் சிந்திக்க விரும்பும் பிரிட்டிஷ் வாசகர்களுக்காகதான் இவை எழுதப்பட்டுள்ளன என்று நான் நினைக்கிறேன். பரவாயில்லை. இந்த எழுத்தாளர்கள் ஒரு புதிய கதை வகையை உருவாக்கியுள்ளார்கள். இவர்களைப் படிப்பதற்கு அதுவே ஒரு நல்ல காரணமாகும். பிரிட்டிஷ் எழுத்தாளர்கள் இந்தியப் பின்னணியில் எழுதியுள்ள துப்பறியும் புதினங்களிலிருந்து இவை முற்றிலும் வேறுபட்டுள்ளன.■

ரோட்டரி செய்தித் துளிகள்

வெளியில் சாப்பிட்டால் காசு கிடைக்கும்

கோவிட் முடக்கத்துக்குப் பிறகு, ஆஸ்திரியா விலிருக்கும் வியன்னாவின் நகரத்தலைவர் அங்குள்ள ஒவ்வொரு குடும்பத்துக் கும் €50 (ரூ.4,075) மற்றும் ஒவ்வொரு தனிநபருக்கும் €25 (ரூ.2,030)வவுச்சர்களை அனுப்ப உத்தரவிட்டார். எதற்கு? அவர்கள் உணவகங்களுக்குச் சென்று உணவு உண்ணவேண்டும் என்று ஊக்குவிப்பதற்காக! மார்ச் 16ல் ஆஸ்திரியா முழுவதும் அமல்படுத்தப்பட்ட முடக்கத்தைத் தொடர்ந்து பெரிய இழப்பைச் சந்தித்துள்ள உணவகத் தொழில் துறையை ஆதரிப்பதற்காக €40 மில்லியன் முயற்சி செய்யப்படுகிறது.

உக்ரேனில் சிக்கித் தவிக்கும் குழந்தைகள்

உக்ரேன் நாடு வெளிநாட்டினருடைய பயணங்களைத் தடைசெய்ததைத் தொடர்ந்து, வாடகைத்தாய் முறையில் பிறந்த 100க்கும் மேற்பட்ட குழந்தைகள் அங்கு சிக்கியுள்ளன. வாடகைத்தாய் முறையானது இங்கு நன்கு செழித்துவருகிற ஒரு தொழிலாகும். தடை நீக்கப்படுவதற்கு முன்னால் மேலும் 1,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் வாடகைத்தாய் முறையில் பிறக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவர்களும் கவனித்துக்கொள்கிறவர்களும் இந்தக் குழந்தைகளுக்கு ஃபார்முலா உணவை ஊட்டுகிறார்கள், வெளியில் அழைத்துச்செல்கிறார்கள், வீடியோ அழைப்பில் பெற்றோருக்கு அவர்களுடைய குழந்தைகளைக் காட்டுகிறார்கள். இவை அனைத்தும், தனிமைப்படுத்துதலில் இருந்தபடி நிகழ்கின்றன.

வரவேற்பு முறைகளை மாற்றிய கொரோனா

கொரோமாவைரஸ் பரவத் தொடர்ந்து, மக்களை வரவேற்கும் முறை மிகப்பெரிய அளவில் மாறிவிட்டது. நண்பர்கள், குடும்பத்தினரை வரவேற்கும் புதிய வழக்கங்கள், கையசைத்தல், வணங்குதல், வுஹான் ஷேக் (கால் குலுக்குதல்), முழங்கைகளை முட்டுதல், விரல்களை மடக்கிக் குத்துதல், தாய் வாய் (இந்திய வணக்கத்தைப்போன்றது) ஆகியவைதாம். நோய்ப்பரவல் அச்சம் பெருகிவருவதால், புகழ்பெற்றவர்களும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இந்தப் புதிய வரவேற்பு முறைக்கு விரைவில் பழகிக்கொண்டுவிட்டார்கள்.

பசி நிறைந்த மனிதர்

ராஜஸ்தானிலிருந்து திரும்பி வந்த 23-வயது இளைஞர் ஒருவர் பக்ஸாரில் உள்ள மன்ஜ்வாரி தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார், இவர் ஒரு நாளைக்கு 40 ரொட்டிகள், 10 தட்டில் சோறு ஆகியவற்றை உண்பதாகச் சொல்கிறார்கள், அவருடைய தனிமைப்படுத்தல் காலகட்டம் நிறைவடையும்வரை அவருக்குப் போதுமான அளவு உணவைத் தரும்படி அலுவலர்கள் மைய மேலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

விலையுயர்ந்த ஒரு விமானம்

முடக்கத்தின்போது நூற்றுக்கணக்கான இடம்பெயர்ந்த தொழிலாளர்களும், பல மைல் தூரம் நடந்து தங்களுடைய வீடுகளுக்குச் சென்ற நேரத்தில், MPIச் சேர்ந்த ஒரு மதுத் தொழிலதிபர் 180 இருக்கைகளைக் கொண்ட ஓர் ஏர்பஸ்-320ஐ தில்லியிலிருந்து வாடகைக்கு எடுத்தார். நோய்ப்பரவலின் போது போபாலில் சிக்கிக்கொண்ட அவருடைய மகள், இரண்டு பேத்திகள், அவர்களுடைய செவிலித்தாய் ஆகியோர் இதில் ஏறிப் போபாலிலிருந்து தில்லிக்குச் சென்றார்கள். விமானத்துறை வல்லுனர்களுடைய மதிப்பீட்டின்படி, இந்த ஏர்பஸ்ஸின் வாடகை சுமார் ரூ.20 லட்சமாக இருக்கலாம்.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. TN/CCN/677/2019-2021 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021 | issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

A call for Covid-19 heroes

Calling upon all our readers in Rotary clubs and districts to write in and tell us about the Covid-19 heroes you have come across in your community. It has to be an individual, who showed exemplary courage, devotion to duty, compassion and grit to help those affected adversely by the corona pandemic. These heroes can be from diverse fields such as healthcare, local administration or municipal corporation, voluntary sector, police force etc.

A profile of the person, detailing the work he/she has done, with a few candid, high resolution pictures should be sent by email — no Whatsapp messages will be entertained — to *rotarynewsmagazine@gmail.com* with contact details of the person. *Rotary News* will choose a few of these and honour them in one of our next issues.